## வரைவுத் திட்டம் 3.0:

# மேம்பட்ட சமூக சந்தைப் பொருளாதாரமொன்றை நோக்கி



ஐக்கிய மக்கள் கூட்டணி

சஜித் பிரேமதாச

சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

*2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதல் வரைவுத் திட்டத்தில் பொருளாதாரத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது பற்றிய எங்களது சிந்தனை குறிப்பிடப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி 14 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வரைவுத் திட்டம் 2.0 எவ்வாறு உறுதிப்பாட்டைத் தாண்டி நிலைபேறானதும் உள்ளடக்கியதுமான வளர்ச்சியை நோக்கி நகர்வது பற்றி விபரித்திருந்தது. வரைவுத் திட்டம் 3.0 நோக்கெல்லையை விரிவடையச் செய்கிறது: இது பகிரப்பட்ட செழிப்புக்கான முழுமையானதொரு பொருளாதாரத் திட்டம். இதுதான் இலங்கைக்கான எமது பொருளாதார வரைவுத் திட்டம்.*[1]

[1] இந்த வரைவுத்திட்டமானது ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோரை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார பிரிவினால் தயாரிக்கப்பட்டது. பேராசிரியர் பிரேம-சந்திர அத்துகோரல, பேராசிரியர் பிரசன்ன பெரேரா, பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா உட்பட பல கல்வியாளர்களின் பெறுமதிமிக்க பங்களிப்புகளிற்கு நன்றிகள். சேதன ரணதுங்க, தமிந்த குணசேகர, யசு-இ கருணாரத்ன, கே.டி.விமனக, செலினா பீரிஸ் மற்றும் வெனுர வெலகெதர ஆகியோரைக் கொண்ட அர்ப்பணிப்புள்ள ஆய்வாளர்கள் குழுவிற்கும் விசேட நன்றிகள். இந்த ஆவணத்தில் கல்வி, சுகாதாரம், நீதி மற்றும் பிற முக்கியமான பகுதிகளின் சீர்திருத்தங்கள் பற்றிய ஆழமான பார்வைகள் உள்ளடக்கப்படவில்லை.

சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

வரைவுத் திட்டம் 3.0:

# மேம்பட்ட சமூக சந்தைப் பொருளாதாரமொன்றை நோக்கி...

சஜித் பிரேமதாச

ஐக்கிய மக்கள் கூட்டணி



# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை பாரிய படுகடன், மோசமான கொள்கைத் தீர்மானங்கள், மற்றும் பலவீனமான ஆட்சி ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்ட மிகமோசமான பொருளாதார நெருக்கடியை இதுவரை தற்பொழுதும் முகங்கொடுத்து வருகின்றது. அண்மைய நடவடிக்கைகள் பணவீக்கத்தைக் குறைப்பதன் மூலமும் வெளிநாட்டு இருப்புக்களை அதிகரிப்பதன் மூலமும் உதவியிருந்த போதிலும் முழுமையான மீட்சிக்கான பாதை மற்றும் மேம்பட்ட பொருளாதாரமாக மாறுவது மிகவும் சவாலானதாகவே உள்ளது. சராசரி இலங்கையர் நெருக்கடியின் சுமைகளைத் தாங்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், அதிக விலைகள், அதிகரித்த வரிகள் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றுடன் போராடுகின்றனர்.

எமது வரைவுத் திட்டம் 3.0, இந்தச் சவால்களைச் சமாளிப்பதற்கும், உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலம் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், சமூக ஜனநாயகம் என்ற நமது பரந்த அரசியல் சித்தாந்தத்திற்குள் நமது சமூக சந்தைப் பொருளாதார மாதிரியின் கொள்கைகளின் அடிப்படையில் அனைவருக்கும் செழிப்பான எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்குமான ஒரு மூலோபாயத் திட்டத்தை வழங்குகிறது.

இந்தத் திட்டத்தின் முக்கிய பகுதி ஊழலை ஒழிப்பதாகும் என்பதுடன் இது அவசியமான ஆனால் போதுமான தீர்வு அல்ல.

நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கு, நமக்கு இருபகுதி அணுகுமுறை தேவை. முதலில், பொருளாதாரத்தை போட்டித்தன்மையுடனும், உலகளவில் இணைக்கப்பட்டதாகவும் மாற்றுவதற்கு நாம் சீர்திருத்தம் மேற்கொள்ளுதல் வேண்டும். இது மக்களிடையே செல்வத்தை உருவாக்கும். இரண்டாவதாக, பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாக்க இலக்குவைக்கப்பட்ட மானியங்களுடன் வலுவான சமூகப் பாதுகாப்பு வலை மூலம் பொருளாதார நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் வேண்டும்.

பிரஜைகளுடன் அரசாங்கத்தை இணைக்கும் அனைத்து சீர்திருத்தங்களினதும் சமூகப் பாதுகாப்பினதும் அடிப்படையானது ஒரு விரிவான டிஜிட்டல் தளமாக இருக்கும்.

***ஐக்கிய மக்கள் சக்தி (SJB)*** அனைத்துப் பிரஜைகள் மத்தியிலும் செழிப்பை வளர்ப்பதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்க உறுதி பூண்டுள்ளது.

---

**குறிப்புகள்: பரிந்துரைக்கப்பட்ட தலையீடுகள்**

குறுகிய கால S : ஒரு வருடம்), நடுத்தர கால M : மூன்று ஆண்டுகள்) அல்லது நீண்ட கால L : பத்து ஆண்டுகள்)
**எனக் குறிக்கப்படுகிறது.**

# உள்ளடக்கங்களின் அட்டவணை


| | |
|---|---|
| நிறைவேற்றுச் சுருக்கம் | 04 |
| பொருளாதார வீழ்ச்சியும் மீட்சிக்கான பாதையும் | 06 |
| எமது அணுகுமுறை: நீதியானதும் செழிப்பானதுமான சமூக சந்தைப் பொருளாதாரம் | 08 |
| வரைவுத் திட்டம் 3.0: உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கான பத்து அம்சத் திட்டம் | 09 |
| 1. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் | 10 |
| 1.1 ஊழலை ஒழிப்பதற்கான சரியான சட்டக் கட்டமைப்பு: இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை வலுப்படுத்துதல் | 10 |
| 1.2 சுயாதீனமான பொது வழக்குத்தொடுநவரின் அலுவலகம் | 10 |
| 1.3 பொதுப் பெறுகைகளுக்கான பொறிமுறை | 11 |
| 1.4 சொத்து மீட்புக்கான புதிய சட்டங்கள் | 11 |
| 1.5 பொது நிதி நிர்வாகத்தில் (PFM) வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை | 12 |
| 2. இறையாண்மைப் படுகடன் நெருக்கடியை முகாமைசெய்தல் | 13 |
| 2.1 படுகடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்தல் | 13 |
| 2.2 விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதி (EFF) விதிமுறைகள் | 14 |
| 2.3 NPL நெருக்கடியைக் கையாளும் போது நிதி முறைமையின் இஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல் | 15 |
| 3. நாணய மற்றும் நாணய மாற்றல் கொள்கை | 16 |
| 3.1 மத்திய வங்கியின் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் வட்டி விகிதங்களை வலுப்படுத்துதல் | 16 |
| 3.2 நாணய மாற்று விகிதக் கொள்கை | 17 |
| 4. வருமான ஒருங்கிணைப்பு | 18 |
| 5. செலவினக் கட்டுப்பாடு | 23 |
| 5.1 பொதுச் செலவினங்களை பகுத்தறிவிற்கு ஏற்றவாறு செய்தல் | 23 |
| 5.2 அரச உடைமையான தொழில் முயற்சிகளின் (SOE) சீர்திருத்தம் | 26 |
| 6. வளர்ச்சியை ஊக்குவித்தல் | 27 |
| 6.1 வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் (FDI) கொள்கை | 26 |
| 6.2 விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைகள்: பல பரிமாண சீர்திருத்தங்கள் | 32 |
| 6.3 கைத்தொழில் அபிவிருத்தி: உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைத்தல் | 36 |
| 6.4 சேவைகள்: ஒரு முக்கிய பொருளாதார இயக்கி | 43 |
| 6.5 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (MSME கள்) மற்றும் புதிய வணிகங்கள் (startups) | 46 |
| 6.6 பசுமை வளர்ச்சி: ஒரு காலநிலை நடவடிக்கை முன்மொழிவு | 48 |
| 7. பொதுத்துறை முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் | 49 |
| 7.1 பொதுத்துறைச் சீர்திருத்தம் | 49 |
| 7.2 டிஜிட்டல் பொதுத்துறை முன்னெடுப்பு | 50 |
| 8. எரிசக்தி மற்றும் பயன்பாடுகள் சீர்திருத்தம் | 52 |
| 8.1 வினைத்திறனான மற்றும் வெளிப்படையான எரிசக்திச் சந்தைகள் | 52 |
| 8.2 மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 53 |
| 9. காரணிச் சந்தை மறுசீரமைப்பு | 54 |
| 9.1 உழைப்பு: ஒரு திறமையான மற்றும் போட்டித் திறன் கொண்ட ஊழியப்படையை உருவாக்குதல் | 54 |
| 9.2 காணி: உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் | 56 |
| 9.3 மூலதனம்: வருமானத்தை அதிகரித்து, உள்நாட்டுச் சந்தையை வலுப்படுத்துதல் | 57 |
| 10. வலுவான சமூகப் பாதுகாப்பு வலைகள் | 59 |
| முடிவுரை: பகிரப்பட்ட செழுமைக்கான பாதை | 63 |

# பொருளாதார வீழ்ச்சியும் மீட்சிக்கான பாதையும்

**எமது சுதந்திரத்திலிருந்து 76 வருடங்களில், தற்போதிருக்கின்ற மனித உரிமைப் பிரச்சினைகள் மற்றும் ஜனநாயக ஆட்சியிலிருக்கின்ற இடைவெளிகளுக்கு மத்தியிலும் மனித அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை இலங்கை அடைந்துள்ளது. இருப்பினும், எமது வரலாற்றில் மிகவும் மோசமான நிலைமைக்கு இட்டுச்சென்ற 2021-2022 காலப்பகுதியில் இடம்பெற்ற மிக மோசமான பொருளாதார நெருக்கடியுடன் எமது நாட்டின் பொருளாதாரச் செயலாற்றுகை சீரற்ற நிலையில் காணப்படுகின்றது.**

**நெருக்கடிக்கான காரணங்கள்:**
2022 ஆம் ஆண்டில் உச்சத்தை அடைந்த நெருக்கடி நிலை பல தசாப்த காலங்களாலாக நிலவும் மிகமோசமான அரசிறை முகாமைத்துவம், அதிகமான வெளியகப் படுகடன், மற்றும் பிரபல்யமான கொள்கைகள் ஆகியவற்றால் ஏற்பட்டதாகும். கொவிட்-19 பெருந்தொற்றுநோய் உல்லாசப்பயணத்துறை மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரம் ஆகியவற்றில் தாக்கத்தை எற்படுத்தி நிலைமையினை இன்னும் மோசமடையச் செய்தது. கோத்தபாய அரசாங்கத்தின் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரி நீக்கம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் திடீரென மேற்கொள்ளப்பட்ட இரசாயன உரத்தடை ஆகியன பொருளாதாரத்தை மேலும் பலவீனமாக்கியது. மோசமான நாணய, வர்த்தக, மற்றும் பணப் பரிமாற்றல் விகிதம் ஆகியன மிகமோசமான வெளிநாட்டு பணப்பரிமாற்றல் நெருக்கடிக்கும், ஒதுக்கங்களின் குறைவுக்கும் இட்டுச்சென்றதுடன் அது 2022 ஏப்ரல் மாதத்தில் படுகடன் செலுத்துவதில் தவறுகைக்கும் இட்டுச்சென்றது.

**மீட்சிக்கான முயற்சிகளும் ஐஆகு நிகழ்ச்சித்திட்டமும்:**
ஆரம்ப எதிர்ப்பின் பின்னர், இலங்கை அரசாங்கம் 2022 மே மாதத்தில் IMF உதவியினை நாடியது. நீண்ட பேச்சுவார்த்தையின் பின்னர், 2023 மார்ச் மாதத்தில் அனுமதிக்கப்படும் $3 பில்லியன் விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதிக்கு (EFF) இட்டுச் செல்லும் அலுவலர் மட்ட உடன்படிக்கை 2022 செப்டெம்பர் மாதத்தில் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. நான்கு வருட (2023-2027) நிகழ்ச்சித்திட்டம் தற்பொழுது நடைமுறையில் உள்ளது. இது முக்கிய ஐந்து பகுதிகளை இலக்காகக் கொண்டுள்ளது: (1) வரி மறுசீரமைப்பு (2) மத்திய வங்கியின் சுயாதீனம் உள்ளிட்ட நாணயக் கொள்கை மறுசீரமைப்புகள் (3) பயன்பாடுகள் மற்றும் எரிபொருட்களுக்கான கிரயத்தை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் (4) அரசுக்குரித்தான தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு மற்றும் ஆட்சி மறுசீரமைப்பு என்பவையாகும்.

**பாராட்டக்கூடிய முன்னேற்றங்கள்:**
EFF நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்ததிலிருந்து, அரசாங்கம் சில முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது உண்மையாகும். வட்டி விகிதங்கள் அதிகமாக இருக்கின்ற போதிலும், அது வரி வருமானத்தை அதிகரித்து, ஆரம்ப வரவு செலவுத்திட்ட மீதியை அதிகரித்து, பணவீக்கத்தைக் குறைத்துள்ளது. நாணயமாற்று விகிதம் தற்பொழுதும் நெருக்கடிக்கு முன்னரான மட்டத்தை விடப் பலவீனமாக இருக்கின்ற போதிலும் குறைக்கப்பட்ட இறக்குமதி, நிறுத்திவைக்கப்பட்ட பொதுப்படுகடன் கொடுப்பனவுகள் மூலமான இஸ்திரப்படுத்தப்பட்ட ரூபாவின் நாணய மாற்று விகிதம் உறுதியாகியுள்ளது. சில கடன் வழங்குனர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையுடன் கடன் மறுசீரமைப்பு முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும், அரசாங்கத்தின் நிதிச் சுமையை குறைப்பதற்கு எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான புதிய விலையிடல் பொறிமுறைகளுடன் அரசாங்கம் எரிசக்தித் துறையின் மறுசீரமைப்புகளை முன்னெடுத்துள்ளது.

**காணப்படும் சவால்கள்:** சில முன்னேற்றங்கள் காணப்படுகின்ற போதிலும், இலங்கை குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இடரின் கடுமையான காலகட்டம் தாண்டியிருந்தாலும், எமது மீட்சி பலவீனமானதாகக் காணப்படுகின்றது. வறுமை இரட்டிப்பாகியுள்ளதுடன் இப்பொழுது அது 7 மில்லியன் மக்களைப் பாதித்துள்ளது. அரசுக்குரித்தான தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்புகள் எவ்வித விற்பனைகளும் பூர்த்திசெய்யப்படாமல் பின்தங்கியுள்ளது. பணவீக்கம் குறைந்துள்ள போதிலும் பொருட்களின் விலைகள் தற்பொழுதும் 2019 ஆம் ஆண்டில் இருந்ததை விட 90% அதிகமாகவே காணப்படுகின்றது. 2019 ஐப் பார்க்கிலும் மிகக்குறைந்த மட்டத்துடனான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் பொருளாதாரம் பலவீனமாகவே காணப்படுகின்றது: 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி மீதான தலா வருமானம். மேலும், அதிகமான திறனுள்ள மற்றும் தொழில்வாண்மையான இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதனால் மூளைசாலிகளின் வெளியேற்றம் உக்கிரமடைந்து நீண்ட கால மீட்சிக்கு சவாலை ஏற்படுத்துகின்றது. நாங்கள் சர்வதேச மூலதனச் சந்தைக்கான அணுகலை இன்னும் மீளப்பெறவில்லை. அரசியல் சூழல் அமைதியாக இருக்கின்ற போதிலும் அரசியல்வாதிகள் மற்றும் நிறுவனங்கள் மீதான பொதுமக்களுடைய நம்பிக்கை குறைந்தளவிலே காணப்படுகின்றது.

**முன்னோக்கிய பார்வை:** இது ஒரு தீர்மானமிக்க காலகட்டமாகும். நீடிக்கும் பொருளாதார இஸ்திரத்தன்மை மற்றும் நிலைபேறான உள்ளடக்கிய வளர்ச்சிக்கான நிலைமாற்றத்தை அடைவது இப்போதுள்ள சவாலாகும். இது வெறுமனே குறுகியகால அரசிறை இலக்குகளை அடைவதை மட்டுமல்லாது நீண்டகாலப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான ஆழமான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதையும் இது கோரி நிற்கின்றது. இவ்வாறான பலவீனங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் நீண்டகால வளர்ச்சிக்கான விரிவான திட்டமொன்றை ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார செயல்த்திட்டம் வழங்குகின்றது. மீளெழுந்தன்மை, புத்தாக்கம் மற்றும் உள்ளடங்கலான அபிவிருத்தி ஆகியவற்றை மீட்சி மற்றும் எதிர்கால வளர்ச்சி போன்றவற்றிலிருந்து சமூகத்தின் எல்லாத்துறையினரும் நன்மையடைவதை உறுதி செய்து ஒரு திட்டப் பாதையை வழங்குகிறது.

## அணுகுமுறை:

# நீதியானதும் செழிப்பானதுமான சமூக சந்தைப் பொருளாதாரம்

எமது சமூக ஜனநாயக அரசியல் கோட்பாட்டுக்குள், அனைவருக்கும் பொருளாதார நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை சந்தைச் சக்திகளை வலுவூட்டுவதன் மூலம் சமத்துவமானதும் உள்ளடங்கலானதுமான வளர்ச்சியினை எமது சமூக சந்தைப் பொருளாதார மாதிரி போசிக்கின்றது.

புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியை பொருளாதார சுதந்திரம் தூண்டுகிறது. அதனால்தான் சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கான போட்டி மற்றும் திறந்த நிலையை ஊக்குவிக்க சந்தை சார்ந்த கொள்கைச் சீர்திருத்தங்களை நாங்கள் பரிந்துரைக்கின்றோம். இது சுதந்திரம், நிதிப் பொறுப்பு, உறுதியான நாணயம், விலை இஸ்திரத்தன்மை மற்றும் நெகிழ்வான தொழிலாளர் சந்தை ஆகியவற்றுடன் கைகோர்த்துச் செல்கிறதென நாங்கள் நம்புகிறோம்.

தனிப்பட்ட பொருளாதார முன்னெடுப்புகளை சமரசம் செய்யாமல் இந்த சலுகைகளை நியாயமான முறையில் வழங்குவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாக்கும் மற்றும் வளங்களின் சமமான விநியோகத்தை உறுதி செய்யும் இலக்குவைக்கப்பட்ட கொள்கைகளை பொருளாதார நீதி கோருகின்றது. பரந்த சலுகைகளை மட்டுமே நம்புவதை விட, தேவைப்படுபவர்களுக்கு நேரடியாக உதவக்கூடிய வினைத்திறனான சமூகப் பாதுகாப்பு வலைகளை இது உள்ளடக்குகிறது.

இந்த இலக்குகளை அடைவதற்கு பொருளாதார சீர்திருத்தங்களை ஒரு வலுவான நிறுவன கட்டமைப்புடன் இணைத்தல் வேண்டும். இதில் வெளிப்படையான நிர்வாகம் மற்றும் சுதந்திரமான ஒழுங்குமுறை அமைப்புகள், குறிப்பாக அரசியல் செல்வாக்கு இல்லாத மத்திய வங்கி ஆகியவை அடங்கும். சொத்து உரிமைகள் மற்றும் ஒப்பந்தங்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் வலுவான அடித்தளத்தை நாங்கள் முன்மொழிகின்றோம். முக்கியமாக, அதன் அடிப்படைச் செயல்பாடுகளில் பயனுறுதியுடன் கவனம் செலுத்தும் திறமையான நாட்டுக்காக நாங்கள் பரிந்து பேசுகிறோம் - தன்னிச்சையான தற்றுணிபு அதிகாரத்தை விட தெளிவான விதிகளால் வழிநடாத்தப்படும் பாரபட்சமின்றி செயல்படும் ஒரு நாடே அவசியமாகும்

# வளர்ச்சிச் சவால்கள்

இலங்கையின் நீண்ட கால அபிவிருத்திப் பாதை மற்றும் தற்போதைய பொருளாதார சவால்களைப் புரிந்துகொள்வது பயனுள்ள வளர்ச்சியைக் கண்டறிதல்களுக்கு முக்கியமானவையாகும். சுதந்திரம் பெற்ற பின்னர், இலங்கை ஆரம்பத்தில் கொரியப் போரின் போது இறப்பரின் தாக்கத்தால் பயனடைந்தது, இது தற்காலிக பொருளாதார ஊக்கத்தை அளித்தது. இருப்பினும், 1950 ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து 1977 ஆண்டு வரை மையப்படுத்தல் மற்றும் உள்நோக்கிய கொள்கைகள் ஏற்றுமதி வளர்ச்சியை முடக்கின. 1977 ஆம் ஆண்டுகளில் தாராளமயமாக்கல் ஆரம்ப முதலீடு மற்றும் வர்த்தகத்தைத் தூண்டினாலும், வளர்ச்சி பெரும்பாலும் இறக்குமதியால் உந்தப்பட்டது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் முழுமையடையாத மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல், நிதி முறைகேடு மற்றும் உள்நாட்டு மோதல்களால் சீர்குலைந்து.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், இலங்கை 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரை 4.2% சராசரியான வருடாந்த உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தனிநபர் வருமான வளர்ச்சியை அடைந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான வளர்ச்சியானது 7% இற்கு மேல் உச்சத்தை எட்டியதுடன் இது படுகடனினால் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு திட்டங்களால் உந்தப்பட்ட போதும் அது பின்னர் 4% அளவில் நிலைப்படுத்தப்பட்டது. மோதலின் முடிவு மற்றும் உலகளாவிய மந்தநிலை மீட்பு ஆரம்பத்தில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்தி அத்தகைய வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இருப்பினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உட்பட உள்நாட்டு பிரச்சினைகள் காரணமாக 2019 இன் தொடக்கத்தில் வளர்ச்சி 2.6% ஆக குறைந்தது. கோவிட்-19 உலகத்தொற்றுநோய் 2020 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் ஒருபோதுமில்லாதளவு 4.6% சுருக்கத்தை ஏற்படுத்தியது. படுகடன் நெருக்கடியைத் தொடர்ந்து, பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் 7.3% ஆகவும் 2023 ஆம் ஆண்டில் மீண்டும் 2.3% ஆகவும் சுருங்கியது.

நாம் முன்னோக்கிச் செல்லும்போது, 2019 ஆம் ஆண்டின் சுருக்கத்திலிருந்து மீண்டு நெருக்கடியிலிருந்து முழு மீட்சியை அடைவதையும், பொருளாதாரத்தை மேம்பட்ட பொருளாதாரத்தை நோக்கிய பயணத்தில் ஈடுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருப்பதே எமது உடனடி இலக்காகும். இலங்கைய 2029 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 10% வருடாந்த வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்ய முடிந்தால் (அப்போது IMF மற்றும் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட வளர்ச்சி விகிதம் 3.1% வரை மட்டுமே அதிகரிக்குமாயின்), 2047 ஆம் ஆண்டளவில் கிட்டத்தட்ட USD 23,000 வருடாந்த மொத்தத் தேசிய வருமான தலா வருமானத்தை ஈட்டுவதன் மூலம் நாம் உயர் வருமான நிலையை அடைய முடியும்.

**எமது வளர்ச்சி மூலோபாயம் இரண்டு முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது:**

**சுவர்களை உடைத்தல் மற்றும் பாலங்கள் கட்டுதல்:** உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைத்து அபிவிருத்திக்கான புதிய வாய்ப்புகளைத் திறந்து நாங்கள் ஒத்துழைப்பை வளர்ப்பதுடன் வளர்ச்சிக்கான தடைகளை அகற்றுவோம்.

**உள்ளக வினைத்திறன் முன்னேற்றங்கள்:** அனைத்துத் துறைகளிலும் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை ஊக்குவிப்பதற்கு நிறுவாகச் செயன்முறை மற்றும் செல்வாக்கு டிஜிட்டல் மயப்படுத்தல் ஆகியவற்றை நாங்கள் மேம்படுத்துவோம்.

## உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கான பத்து அம்சத் திட்டம்

இலங்கையின் பொருளாதார நிலைமை சவாலானதாக இருக்கும் அதேவேளை, கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பத்து முக்கிய துறைகளில் இலக்குவைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் மீட்சிக்கான பாதை காணப்படுகின்றது..

## எமது திட்டத்தின் 10 தூண்கள்:

- 01 வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்
- 02 படுகடன் நெருக்கடி முடிகாமைத்துவம்
- 03 பண மற்றும் பணப்பரிமாற்று விகிதக் கொள்கை
- 04 வருமான ஒருங்கிணைப்பு
- 05 செலவினக் கட்டுப்பாடு
- 06 வளர்ச்சியை ஊக்குவித்தல்
- 07 பொதுத்துறை முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்
- 08 எரிசக்தி மற்றும் பயன்பாடுகள் சீர்திருத்தம்
- 09 காரணிச் சந்தை சீர்திருத்தம்
- 10 வலுவான சமூக பாதுகாப்பு வலைகள்

# 01 வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்

2023 ஆம் ஆண்டில் ஊழல் புலனுணர்வு சுட்டெண்ணிலுள்ள 180 நாடுகளில் இலங்கை 100 இற்கு 34 புள்ளிகளைப் பெற்று 115 ஆது இடத்தில் உள்ளது. நிதி ஒருங்கிணைப்பு, உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊழலை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது. 2023 IMF கண்டறியும் மதிப்பீடு அரசாங்கம் முழுவதும், குறிப்பாக வருமானச் சேகரிப்பு மற்றும் பொதுப் பெறுகை ஆகியவற்றில் பரவலான ஊழல்களை வெளிப்படுத்தியது. இவ்வெளிப்படுத்தல்களுடன் நாங்கள் உடன்படுகிறோம். பொறுப்புக்கூறல் நிறுவனங்களுக்கு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விருப்பமும் திறமையும் இல்லாததால் இந்தப் பலவீனங்கள் பெரிதாகின்றன. இந்த ஊழல் புற்றுநோயை எதிர்த்துப் போராட வெளிப்படைத்தன்மையை முன்னுரிமைப்படுத்தும், தொழில்நுட்பத்தை செல்வாக்குச்செலுத்தும் மற்றும் உறுதியான சட்டங்களை அறிமுகம்செய்யும் பதினாறு விதப்புரைகளை எமது அரசாங்கம் செயல்படுத்தும். உண்மையில், நாங்கள் மேலும் சென்று கொள்ளையடித்தவர்களை நீதிக்கு முன் கொண்டு வருவதற்கு அரசியல் தலையீட்டிற்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் அகற்ற ஒரு சுயாதீனமான அரச வழக்குத்தொடருநரை உருவாக்குவோம். வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கு சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பிலுள்ள கட்டமைப்புச் சிக்கல்கள் மற்றும் இடைவெளிகளை சரிசெய்வது அவசியமாகும்.

## 1.1 ஊழலை ஒழிப்பதற்கான சரியான சட்டக் கட்டமைப்பு: இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை வலுப்படுத்துதல்

இலங்கையின் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் இலஞ்சம், ஊழல் மற்றும் தொடர்புடைய குற்றங்களை விசாரிக்க ஒரு தன்னாட்சி ஆணைக்குழுவை நிறுவுகிறதுஇந்த ஆணைக்குழு அதன் செயல்திறனை மேம்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்துச் செயற்பட முடியும். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இயங்கி வரும் அதேவேளை இப்புதிய சட்டம் அதற்கு குறிப்பிடத்தக்க புதிய கடமைகளை வழங்குகிறது. ஊழலுக்கு எதிரான மூலோபாயங்களை உருவாக்குதல், ஊழலைத் தடுத்தல், விசாரணை செய்தல், வழக்குத்தொடர்தல் மற்றும் அரசாங்கம் முழுவதும் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை ஒருங்கிணைத்தல் ஆகியவை இதில் அடங்கும். வெளிப்படைத்தன்மையை மேலும் ஊக்குவிக்கவும் ஊழலை எதிர்த்துப் போராடவும், மேலதிக சட்ட நடவடிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **வலுவான CIABOC:** சுயாதீன விசாரணைக்காகவும், கூட்டு விசாரணைகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவும், தேடுதல் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஆணையற்ற கைதுகளை மேற்கொள்ளவும் மற்றும் ஊழலுக்கு எதிராக தேவையான ஏனைய நடவடிக்கைகளை எடுக்கவும் CIABOC இக்கு அதிகாரத்தை வழங்குதல். | S |
| **சொத்துப் பிரகடனம்:** தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பொது அதிகாரிகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பிரகடனப்படுத்துதல் வேண்டும் எனக் கோரும் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். **குறிப்பு:** இது தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. | S |
| **விளக்கமளிக்கப்படாத செல்வச் சட்டம்:** ஒரு விளக்கமளிக்கப்படாத செல்வச் சட்டத்தை உருவாக்கவும் அதன் கீழ் எந்தவொரு பிரஜையும் சந்தேகத்திற்குரிய வழிகளில் சொத்துகளைப் பெற்றதாக சந்தேகிக்கப்படும் ஒரு நபரை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின்படி அரச வழக்குக்குத்தொடுப்பவரின் அலுவலகத்திற்கு அறிக்கையிடவும் முடியும். | S |

## 1.2 சுயாதீனமான பொது வழக்குத்தொடுநரின் அலுவலகம்

இலங்கையின் சட்டத்துறைத் தலைமை அதிபதி (AG) திணைக்களம் ஊழல் வழக்குகளில் ஒர் அக்கறைகளின் முரண்பாட்டைக் கொண்டுள்ளது ஒருபுறம், அரசு மற்றும் அதன் அதிகாரிகளின் சார்பாக சட்டத்துறைத் தலைமை அதிபதி ஆஜராகிறார். மறுபுறம், அதே அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரவும் சட்டத்துறைத் தலைமை அதிபதி அழைக்கப்படுவார். சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பாதுகாப்பதற்கான எந்த வழிகாட்டுதலும் இல்லாமல் சட்டத்துறைத் தலைமை அதிபதி (AG) திணைக்களம் அடிக்கடி இதுபோன்ற விடயங்களில் ஈடுபடுவது தற்போதைய நடைமுறையாகவுள்ளது. சந்தேகத்திற்குரிய நபர் தொடர்பாக மேல் நீதிமன்றத்தின் முன்னாலுள்ள குற்றவியல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான முழுத் தற்றுணிபையும் சட்டத்துறைத் தலைமை அதிபதி கொண்டுள்ளார்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **அரச வழக்குத்தொடுநரின் அலுவலகம்:** சட்டத்துறைத் தலைமை அதிபதியின் செல்வாக்கிலிருந்து விடுபட்ட இலஞ்சம் அல்லது ஊழலுக்கான அரச வழக்குத்தொடுநரின் சுயாதீன அலுவலகத்தை நிறுவுதல் உண்மை மற்றும் உணரப்பட்ட இரண்டும். இதற்காக சாதாரண சட்டவாக்கத்திருத்தத்தை மட்டுமே இது கோருகிறது, அரசியலமைப்பு திருத்தம் அல்ல. | S |
| **ஊழல் வழக்குகளை விரைவுபடுத்துதல்:** தொழில்நுட்பக் காரணங்களால் சட்டத்துறைத் தலைமை அதிபதி திரும்பப் பெற்ற அனைத்து ஊழல் குற்றச்சாட்டுகளையும் மீண்டும் தாக்கல் செய்தல் மற்றும் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைவுபடுத்தல். | S |

## 1.3 பொதுப் பெறுகைக்களுக்கான பொறிமுறை

பொதுப் பெறுகை மீதான இலங்கையின் செலவு மிகப் பெரியது. எனவே, சிறிய முறைகேடுகள் கூட பெரிய ஊழல்களுக்கு வழிவகுக்கும். பெறுகைத் திட்டமிடல் இல்லாமை, பெறுகை நடைமுறைகளைப் புறக்கணித்தல், போதிய போட்டியின்மை மற்றும் பெரிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான கோரப்படாத முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வது ஆகியவை முறைமையிலுள்ள சில முக்கிய குறைபாடுகளாகும். பெறுகை வழிகாட்டுதல்களில் பல்வேறு தற்காலிக மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் தீர்மானம் மேற்கொள்வதில் தற்போது அதிகளவிலான நிறைவேற்று தற்றுணிபுகள் காணப்படுகின்றன. இவ்வனைத்துப் பிரச்சினைகளும் மற்றும் பல பெறுகையில் பாரிய ஊழலுக்கு வழிவகுத்துள்ளது. புதிய சட்டங்களை இயற்றுவதன் மூலமும், பொதுப் பெறுகையில் நிறுவனக் கட்டமைப்பையும் வெளிப்படைத்தன்மையையும் வலுப்படுத்துவதன் மூலமும் இந்தக் குறைபாடுகளை நாங்கள் நிவர்த்தி செய்வோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **பொது பெறுகைச் சட்டம்:** உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் சட்டத்தை இயற்றி அனைத்துப் பொதுப் பெறுகையும் இப்புதிய சட்டத்தின் மூலம் கட்டாயமாக உள்ளடக்குவதை உறுதி செய்தல். சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான நிறுவனக் கட்டமைப்பை நிறுவுதல். | S |
| **மின் பெறுகை:** அனைத்துப் பொதுப் பெறுகைக் கொடுக்கல் வாங்கல்களையும் ஒரு இலத்திரனியல் அரச பெறுகைத் தளத்திற்கு நகர்த்தவும் மற்றும் பொது மதிப்பாய்வு செய்வதற்கும் அனைத்துப் பெறுகைகளையும் தொடர்புடைய விபரங்களுடன் பிரசுரித்தல். | M |

## 1.4 சொத்து மீட்புக்கான புதிய சட்டங்கள்

தற்போதைய சொத்து மீட்புச் சட்டங்கள் சிக்கலான நாடுகடந்த நிதிக் குற்றங்களைச் சமாளிப்பதற்கான முயற்சிகளைத் தடுக்கும் இடைவெளிகளைக் கொண்டுள்ளன. முன்மொழியப்பட்ட திருடப்பட்ட சொத்து மீட்புச் சட்டம் இந்த சிக்கல்களைத் தீர்ப்பதுடன் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளால் திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கும் வலுவான சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது. பின்வரும் முன்னெடுப்புகளை புதிய சட்டத்தில் நாங்கள் உள்ளடக்குவோம் சேர்ப்போம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **சர்வதேசக் கட்டமைப்புகள்:** | |
| ☎ சட்டமியற்றும் முயற்சிகளுக்கு வழிகாட்ட, பயனுள்ள சொத்து மீட்புக்கான G20 ஒன்பது முக்கியக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும். சொத்து மீட்டெடுப்பை கொள்கை முன்னுரிமையாக ஆக்குவது, கொள்கையை ஆதரிக்க வளங்களை சீரமைத்தல் மற்றும் திருடப்பட்ட சொத்துக்களை உடனடியாக கண்டுபிடிக்க, கைப்பற்ற மற்றும் பறிமுதல் செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிப்பது போன்றவற்றை இது உள்ளடக்குகிறது. | S |
| ☎ சொத்து மீட்புக்கான சட்டக் கட்டமைப்பை மேம்படுத்தவும் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்துக்கு (UNCAC) ஒப்புதலளித்தல். | M |
| **சட்ட வழக்குகள்:** ஊழல் வழக்குத் தீர்ப்புகளில் சொத்து மீட்புப் பொறிமுறைகளை ஒருங்கிணைத்தல் | S |

## 1.5 பொது நிதி நிர்வாகத்தில் (PFM) வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை

அரசிறை வெளிப்படைத்தன்மை இரண்டு நிலைகளில் முக்கியமானது. முதலாவதாக, செலவுத் திட்டங்கள், திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் படுகடன் முகாமைத்துவ மூலோபாயங்கள் உள்ளிட்ட வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகள் மற்றும் கடமைகள் பற்றிய தெளிவான தகவல்களை அரசாங்கம் வழங்குதல் வேண்டும். இரண்டாவதாக, வரி நிர்வாகம் வெளிப்படையானதாக இருத்தல் வேண்டும். IMF 2023 கண்டறியும் மதிப்பீட்டில் விபரிக்கப்பட்டுள்ளபடி, உயர் நிர்வாகம் உட்பட வருமான அதிகாரிகளிடையே ஊழல் பரவலாகக் காணப்படுகிறது. இதை மாற்ற புதிய கட்டமைப்புகள், முறைமைகள் மற்றும் தொழில்நுட்பங்களை நாங்கள் முன்மொழிகிறோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம்** (PBO): இது ஒவ்வொரு வரவுசெலவுத்திட்ட செலவுகள் மற்றும் பலன்களை மதிப்பிடும் அல்லது ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல் உள்ள ஒவ்வொரு உள்கட்டமைப்புத் திட்டமும் உட்பட அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யும் ஒரு சுயாதீனமான PBO இன் தாபனத்தை விரைவாக்குவதும் அதன் வெளிப்படுத்தல்களை பொதுவில் வெளியிடுதலும். PFM நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கு PBO உடன் இணைந்து செயல்பட சுயாதீன சிந்தனைக் குழுக்களை (think tanks) ஊக்குவித்தல். | S |
| **பொது பொறுப்புக்கூறல்:** அனைத்து வரிச் சலுகைகளினதும் செயல்திறனை மதிப்பிடும் வழக்கமான மீளாய்வுகளை வெளியிடுதலை கட்டாயமாக்குதல் மற்றும் தேவையான திருத்தங்களைக் கருத்தில் கொள்ளுதல். அனைத்து முன்மொழியப்பட்ட வரிச் சலுகைகளும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதற்கு முன்னர் அரசாங்க நிதி பற்றிய குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குதல். | S |
| **உள்ளூராட்சி வரவு செலவுத் திட்டங்கள்:** உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் மாகாண சபைகளை பொது நிதி முகாமைத்துவச் (PFM) சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வருதல் மற்றும் வருமானம், செலவுகள் குறித்த காலாண்டு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குதல். | M |

**பொருளாதாரம் முழுவதும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறனை ஊக்குவிக்கும் இந்த அனைத்து முயற்சிகளுக்கும் அடித்தளமாக "டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு"** (DPI) **தளமாகக் காணப்படும்.** இந்த முக்கிய அம்சத்திட்டத்தின் அம்சங்களைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் பிரிவு 7 இல் (பொதுத்துறை முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்) காணப்படுகின்றது.

# 02 இறையாண்மைப் படுகடன் நெருக்கடியை முகாமைசெய்தல்

இலங்கையின் இறையாண்மைப் படுகடன் நெருக்கடியானது கடுமையான பொருளாதார சவாலாகவே காணப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், படுகடன் நிலைபேறானதன்மையை அடைவது இன்னும் நீண்ட தூரமாகவே உள்ளது. தாமதங்கள் மற்றும் "மோசமான ஒப்பந்தம்" ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காரணமாக பல இலங்கையர்கள் மற்றொரு நெருக்கடிக்கு அஞ்சுகின்றனர். முக்கிய தீர்வு விரைவானது என்றாலும் நியாயமான பேச்சுவார்த்தைகள் இறுதி உடன்படிக்கைக்கு வழிவகுக்கும்.

## 2.1 படுகடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்தல்

பரிஸ் கிளப் நாடுகள், இந்தியா மற்றும் சீனா (எக்ஸிம் வங்கி) ஆகியவற்றை உள்ளடக்கிய அதிகாரப்பூர்வ கடன் வழங்குனர் குழுவுடன் (OCC) அரசாங்கம் இருதரப்புக் கடன் ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது. சர்வதேச இறையாண்மைப் பத்திரம் (ISB) வைத்திருப்பவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தற்காலிகக் குழுவுடனான ஒப்பந்தங்கள் மற்றும் சீன அபிவிருத்தி வங்கி ஆகியவை OCC மற்றும் IMF இன் கடன் நிலைபேறானதன்மை அளவுருக்களுடன் ஒப்பிடுவதற்கு மதிப்பிடப்படுகின்றன.[2] மறுசீரமைப்புப் பணிகள் அவசரமாக முடிக்கப்படுதல் வேண்டும். அனைத்துக் கடன் வழங்குநர்களையும் சமமாக நடத்துவதற்கு நாங்கள் பரிந்துரைக்கிறோம். ISB வைத்திருப்பவர்களின் தற்காலிகக் குழுவால் முன்மொழியப்பட்டபடி, எதிர்பார்த்ததை விட சிறந்த பொருளாதாரச் செயல்பாட்டின் மூலம் ISB வைத்திருப்பவர்கள் பயனடைந்தால், அரசாங்கத்திற்கும் EPF இற்கும் இடையிலான படுகடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் ஒரு திருத்தம் மூலம் சேர்க்கப்பட்டுள்ள "க்ளோவ் பெக்" ('claw back') நிபந்தனையின் மூலம் EPF இந்த தலைகீழ் நிலையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என நாங்கள் நம்புகிறோம்.[3] ஒரு SJB அரசாங்கத்தின் கீழ், கடன் மறுசீரமைப்பின் முக்கிய பொருளாதார அம்சங்களை மேம்படுத்தப்பட்ட ஆட்சியுடன் இணைப்பதன் மூலம் கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நிதிச் சந்தைகளுக்கு மத்தியில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையை நாங்கள் மீண்டும் உருவாக்குவோம். செயற்பாட்டுப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டவாக்கத்தின் (2018) கீழ் அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் திறமையான திறைசேரி முகாமைத்துவ நிறுவனம் மூலம் எங்கள் பொறுப்புகளை நாங்கள் செயலூக்கத்துடன் முகாமைசெய்வோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **கடன் பேச்சுவார்த்தைகள்:** தேர்தல் நேரத்தில் வெளிநாட்டுக் படுகடன் மறுசீரமைப்பு முழுமையடையாமல் இருந்தால், இருதரப்பு மற்றும் வணிகக் கடன் வழங்குநர்களுடன் இலங்கைக்கான சிறந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்தத் தேவையான அரசியல் தலைமையை நாங்கள் உடனடியாக வழங்குவோம். | S |
| **படுகடன் முகாமைத்துவம்:** ஒரு பொதுப் படுகடன் அலுவலகத்தை உருவாக்கி, சந்தை நகர்வுகளில் இருந்து பயனடைவதற்காக இலங்கையின் பொதுப்படுகடன் பரிணாமங்களை முகாமைசெய்யக்கூடிய உயர் திறமையான, நல்ல சம்பளம் பெறும் தொழில்வாண்மையாளர்களைக் கொண்டு நடாத்துதல். **குறிப்பு:** பாராளுமன்றம் பொதுப் படுக்கடன் முகாமைச் சட்டமூலத்தை நிறைவேற்றிய போதிலும் இன்னும் பொதுப் படுகடன் அலுவலகம் நிறுவப்படவில்லை. 2018 ஆம் ஆண்டில், நாட்டின் நிலுவையில் உள்ள படுகடனை வலுவாக முகாமைசெய்வதற்கான சட்ட அடிப்படையை வழங்கும் செயற்பாட்டுப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டது. | M |

[2] தற்காலிகக் குழுவின் ஏப்ரல் 2024 முன்மொழிவை SJB கடுமையாக எதிர்த்ததுடன் GDP இணைக்கப்பட்ட முறியின் (பேரண்டத் தொடர்புடைய பிணை) கட்டமைப்பின் கீழ் பெயரளவிலான 28% கடன் இரத்து 2028 ஆம் ஆண்டுக்குள் GDP (USD இல்) கணிப்புகளின் அடிப்படையில் 7.3% மட்டுமே இருக்கும் என்று வாதிட்டது. எங்கள் விமர்சனம், சிந்தனையாளர்கள் மற்றும் பிற எதிர்க்கட்சிகளால் எதிரொலித்ததுடன் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்ற தெளிவான செய்தியை அனுப்பியது. இந்த அழுத்தம் ஜுலை 2024 இல் 14.96% சிறந்த கடன் இரத்துக்கான பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்திற்கு உதவியது. OCC மற்றும் வணிகக் கடன் வழங்குபவர்களுக்கு இடையே கடன் இரத்து மற்றும் புதிய ISB தொடரின் தற்போதைய நிகர மதிப்பு தொடர்பாக நியாயமான கவனிப்பை உறுதி செய்வதற்காக OCC ஒப்பந்தத்தில் உள்ள 'claw back clause' குறித்தும் SJB விளக்கம் கோரியுள்ளது. ஒப்பந்தம் சரியானதாக இல்லாவிட்டாலும், இது பொருளாதார மீட்சியை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். அரசாங்கத்தின் பேச்சுவார்த்தை நிலைப்பாட்டை வலுப்படுத்துவதிலும், இலங்கைக்கு சிறந்த பலனைப் பெற்றுக் கொடுப்பதிலும் எங்களின் பங்கு குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

[3] எங்கள் நிலைப்பாட்டை IMF-க்கு தெரிவித்துள்ளோம்.

## 2.2 விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) நியதிகளைத் திருத்தியமைக்க IMF உடன் ஈடுபடல்

ஒரு SJB அரசாங்கம் தற்போதைய EFF உடன்படிக்கையில் திருத்தம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட மற்றும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்ட கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வு (DSA) அளவுருக்களுக்குள் இருக்கும் போது "நிவாரணத்துடன் கூடிய சீர்திருத்தத்தை" உறுதிப்படுத்துகிறது. இலங்கையில் ஒரு ஆழமான பொருளாதார நெருக்கடியைத் தடுப்பதற்கும் சர்வதேச நிதிச் சந்தைகளில் இஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இன்றியமையாதது என்று முதலில் (2020 ஆம் ஆண்டில்) வாதிட்டவர்கள் நாங்கள். அரசிறை ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்த பொருளாதார ஆட்சியில் இந்த EFF கவனம் செலுத்துகின்ற போதிலும் இறையாண்மைப் படுகடன் நெருக்கடிக்கு பொருளாதாரத்தை பாதிக்கக்கூடியதாக ஆக்கிய கட்டமைப்புக் குறைபாடுகளை போதுமான அளவு நிவர்த்தி செய்யவில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது முக்கியமாக நிர்மாணம், பயன்பாடுகள் மற்றும் முதன்மையாக பொது உட்கட்டமைப்பு திட்டங்களால் இயக்கப்படும் சேவைகள் போன்ற வர்த்தகம் அல்லாத துறைகளால் இயக்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70% இற்கும் மேலான அதிகரிப்பு வர்த்தகம் செய்ய முடியாத உற்பத்தியில் இருந்து வந்ததுடன் 2020 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தகத்தின் பங்கு 30% இற்கும் மேலிருந்து சுமார் 20% ஆகக் குறைந்து.

படுகடன் நிலைபேறுதன்மையுடன் நெருக்கடியிலிருந்து வெளிவர பேரண்டப் பொருளாதார இஸ்திரத்தன்மையை மீள் நிலைநாட்டுவது முக்கியமாகும் ஆனால் பொருளாதாரத்தில் வர்த்தகம் அல்லாத சார்புகளை நிவர்த்தி செய்வது இஸ்திரத்தன்மைக்கு அப்பாற்பட்ட நிலைபேறான வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும். 2027 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு $62 பில்லியன் வெளிநாட்டுக் படுகடன் இருக்கும் என IMF மதிப்பிட்டுள்ளது. இந்தக் கடனை முகாமை செய்வதற்கு முதன்மை அரசிறைக் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு இருப்பு இரண்டிலும் மிகைகளை உருவாக்குதல் வேண்டும். SJB அபிவிருத்தி மூலோபாயமானது ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை போசிப்பதன் மூலம் "உலகிற்கு பாலங்களை உருவாக்குவதற்கு" முன்னுரிமை அளிக்கிறது. நாணய, நாணய மாற்று விகிதம், வர்த்தகம் மற்றும் போட்டி சீர்திருத்தங்கள் ஊடாக வர்த்தகத்திற்கு எதிரான சார்புகளை நிவர்த்தி செய்வதன் மூலம் வர்த்தகம் அல்லாத துறைகளில் வர்த்தக உற்பத்தியை (ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி மற்றும் சர்வதேச அளவிலான போட்டி இறக்குமதி-மாற்று உற்பத்தி) நாங்கள் ஊக்குவிப்போம். இது பற்றிய கூடுதல் தகவல்கள் பிரிவு 6 இல் (ஊக்குவிப்பு வளர்ச்சி) காணப்படுகிறது. அதன்பிரகாரம், திட்டத்தின் பரந்த வரையறைகளுக்குள் ஊக்கத்தொகை கட்டமைப்பை எதிர்கொள்ள IMF EFF உடன்படிக்கையை திருத்துவதற்கு நாங்கள் முன்மொழிகிறோம்.[4] இது நிலையான மற்றும் சமமான வளர்ச்சிக்கு திறன் கொண்ட ஒரு வெளிநோக்கிய, ஆற்றல்மிக்க பொருளாதாரத்தை உருவாக்க உதவும்.

போதுமான அரசாங்க வருவாயை உறுதிசெய்து செலவினங்களைக் கட்டுப்படுத்தும் அதே வேளையில், நடுத்தர வர்க்கத்தினரின் எதிர்மறையான தாக்கத்தைக் குறைக்க வரிக் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வதும் ஏழைகளைப் பாதுகாப்பதற்காக நன்கு இலக்காகக் கொண்ட சமூகப் பாதுகாப்பு வலையை பராமரிப்பதும் முக்கியம். இது "நிவாரணதிற்கான" திருத்தங்களாக இருக்கும். விபரங்களுக்கு பிரிவு 4 (வருமான ஒருங்கிணைப்பு) மற்றும் பிரிவு 10 (வலுவான சமூகப் பாதுகாப்பு வலைகள்) ஆகியவற்றைப் பார்க்கவும்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **EFF திருத்தங்கள்:** ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமான அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு இலக்குகளை பராமரித்து கட்டமைப்பு இலக்குகளை அடையும் அதே வேளை, கீழ்க்கண்ட நோக்கங்களை பூர்த்தி செய்ய EFF ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய IMF உடன் உடன்படுதல்: | |
| ☎ பொருளாதாரத்தில் வர்த்தகம் அல்லாத சார்புகளை அகற்றுவதன் மூலம் வர்த்தக உற்பத்தியை புத்துயிர் பெற ஊக்குவிப்பு கட்டமைப்புகள் திருத்தப்பட்டன. வர்த்தகம் செய்யக்கூடிய துறைக்கான கூட்டிணைவு வருமான வரி முறையை ஒரு முழுமையான மதிப்பீட்டின் மூலம் திருத்துவது இதில் அடங்கும். | S |
| ☎ குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினருக்கு அதிக சமபங்கு மற்றும் நியாயத்தை உறுதி செய்வதற்காக தனிநபர் வருமான வரிகளுக்கான திருத்தப்பட்ட அடுக்குகள் மற்றும் விகிதங்கள். சீட்டாட்டங்கள் மற்றும் ஏனைய அத்தகைய கைத்தொழில்களின் மொத்த சூதாட்ட வருமானத்தில் பிடித்து வைத்தல் வரிகள், மது வரிகள் மற்றும் வரிகளை திருத்துவதன் மூலம் வருமான இழப்பு மீட்கப்படும். பிரிவு 4 இல் விபரிக்கப்பட்டுள்ளது (வருமான ஒருங்கிணைப்பு) | |
| ☎ தற்போதைய அஸ்வெசும திட்டம் பொருத்தமற்றதாக இருப்பதால் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைப் பாதுகாக்க சிறந்த கவனம் செலுத்தப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டத்தை உறுதிசெய்ய திருத்தப்பட்ட சமூக பாதுகாப்பு வலை அளவுகோல்கள் மற்றும் பயனாளிகள் தெரிவு. | |

[4] இந்தத் திருத்தத்தின் அவசியத்தை IMF திட்டத்தில் விளக்கியுள்ளோம். இது, குறிப்பாக, வர்த்தகத் துறைக்கான ஊக்கக் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வதை உள்ளடக்கும்.

## 2.3 NPL நெருக்கடியைக் கையாளும் போது நிதி முறைமையின் இஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல்

IMF EFF திட்டத்தின் கீழான சீர்திருத்தங்களுடன் இலங்கையின் நிதி முறைமையின் இஸ்திரத்தன்மை முன்னேற்றமடைந்துள்ளது. உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு, சொத்துத் தரச் சிக்கல்களின்[5] காரணமாக வங்கிகளை இதிலிருந்து விலகியிருந்ததுடன் மேலும் அரச வங்கிகளுக்கு மறுமூலதனம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. புதிய மத்திய வங்கிச் சட்டம் மற்றும் சிறந்த வங்கி ஒழுங்குவிதிகளும் நிதி முறைமை ஆட்சியை மேம்படுத்தியுள்ளன. இருப்பினும், செயல்படாத கடன்கள் (NPL கள்) 2019 இல் 5.2% இல் இருந்து 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 13.6% ஆக உயருவதுடன் பாதிப்படையக்கூடிய தன்மை தொடர்ந்தும் காணப்படுகின்றது.[6] நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு (MSME கள்) நிவாரணம் வழங்குவதற்காக, வங்கிகள் பிணையச் சொத்துக்களை ஏலம் விடுவதைத் தடுக்கும் வகையில், 2024 டிசம்பர் 15 வரை பாராட்டே சட்டத்தை அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ளது. கிட்டத்தட்ட 60% MSME கள் கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளன.[7] இருப்பினும், இடைநிறுத்தம் முடிவடைந்த பிறகு MSME களுக்கான தெளிவான திட்டம் எதுவும் இல்லை. கடன் மீட்பு மற்றும் நிறுவன ஆதரவை சமநிலைப்படுத்துவதற்கான மேலதிக இடைநீக்கத்திற்கு மறு மதிப்பீடு தேவைப்படுகின்றது. வைபாளர்களைப் பாதுகாக்கத் தெளிவான பயண வரைபடம் அவசியம் என்பதுடன் மேலும் கடன் வழங்குநர்களுக்கும் கடன் பெறுநர்களுக்கும் இடையே நியாயமான பேச்சுவார்த்தை வாய்ப்புகளை வழங்குவது மிகவும் முக்கியமானதாகும். பரேட்டே சட்டத்தால் மிகவும் பாதிக்கப்படும் துறைகளைப் புரிந்துகொள்வது, ஆதரவு நடவடிக்கைகளை தேவைக்கேற்றால்போல் உருவாக்குவதற்கும் மீண்டெழும்தன்மையுள்ள பொருளாதாரத்தை போிக்கவும் உதவும்.

கூட்டிணைவு மற்றும் தனிப்பட்ட முறிவினைக் கையாள்வதற்கான மிகவும் திறமையான மற்றும் எதிர்வுகூறக்கூடிய முறைமையை இலங்கை உருவாக்குதல் வேண்டும். நன்கு வடிவமைக்கப்பட்ட வங்குரோத்து முறைமைதழுவுவதற்கும், பின்னடைவுகளிலிருந்து மீளவும், வணிக இஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியைப் போசிக்கவும் நிறுவனங்களுக்கு உதவுகிறது. ஒரு வினைத்திறனான முறிவுச் (insolvency) செயல்முறையானது, தொழில்முயற்சியாளர்களை கணக்கிடப்பட்ட இடர்களை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிப்பதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான புத்தாக்கம் மற்றும் பரிசோதனையை ஊக்குவிக்கும் பாதுகாப்பு வலையை உருவாக்குகிறது.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| கடன் மீண்டெழு அலகுகள்: சாத்தியமான வணிகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் அதிகரித்த பலவீனமான சொத்துக்களை முகாமைசெய்யவும் கொவிட்-19 இக்குப் பிந்தைய மீண்டெழு அலகுகளை வணிக மீண்டெழு அலகுகளாக மாற்ற உரிமம் பெற்ற வங்கிகளுக்கான இலங்கை மத்திய வங்கியின் மார்ச் 2024 உத்தரவை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இதில் செயல்படாத கடன்களை மருசீரமைப்பதற்கு ஆலோசனை வழங்கக்கூடிய கடன் மீண்டெழு பிரிவை அனைத்து வங்கிகளும் கொண்டிருத்தலை கட்டாயமாக்குதல். | S |
| **முறிவு ஆட்சி:** | |
| ☎ MSME களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட நெறிப்படுத்தப்பட்ட முறிவுச் சட்டத்தை நிறுவுவதற்கு முன்னுரிமை கொடுத்தல். | S |
| ☎ பாரிய வணிகங்களுக்கான நிதி நெருக்கடியை மறுசீரமைக்க அல்லது தீர்க்க மிகவும் நெகிழ்வான மற்றும் வினைத்திறனான செயல்முறையை வழங்கும் ஒரு விரிவான அத்தியாயம் 11 வடிவிலான முறிவுச் சட்டத்தை[8] அறிமுகப்படுத்துதல். | M |

[5] உண்மை நிலவரம் பற்றி எதுவும் தெரியவில்லை: சொத்து தர மதிப்பாய்வு பாராளுமன்றத்தில் உள்ள அரசாங்க நிதி பற்றிய குழுவுடன் கூட பகிர்ந்து கொள்ளப்படவில்லை.

[6] இலங்கை மத்திய வாங்கி

[7] https://sustainabledevelopment.un.org/content/documents/26277Report_The_Impact_of_COVID19_to_MSME_sector_in_Sri_Lanka.pdf#:~:text=URL%3A%20https%3A%2F%2Fsustainabledevelopment.un.org%2Fcontent%2Fdocuments%2F26277Report_The_Impact_of_COVID19_to_MSME_sector_in_Sri_Lanka.pdf%0AVisible%3A%200%25%20

[8] அத்தியாயம் 11 வகை வங்குரோத்துச் சட்டம் என்பது ஒரு சட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது, இது செயல்பாட்டில் இருக்கும் போது நிறுவனங்களை நிதி மறுசீரமைப்பிற்கு உட்படுத்த அனுமதிக்கிறது. இந்த செயல்முறை நீதிமன்ற மேற்பார்வை, கடன் மறுசீரமைப்பு மற்றும் திருப்பிச் செலுத்தும் திட்டத்தை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. அத்தியாயம் 11 வங்குரோத்துநிலை குறித்த குறிப்பிட்ட விபரங்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு தனிப்பட்டவை, ஆனால் பல நாடுகளில் இதே போன்ற சட்டங்கள் உள்ளன.

# 03 நாணய மற்றும் நாணய மாற்றல் கொள்கை

நாணயக் கொள்கையானது நம்பகமான பணவீக்கக் கட்டுப்பாட்டை பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் சமப்படுத்துதல் வேண்டும். விலை ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்தல் மற்றும் சாத்தியமான நாணயமாற்று விகித நெகிழ்வுத்தன்மை ஊடாக வெளிநாட்டுக் கையிருப்புகளை மீண்டும் கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்காக இம்முயற்சிகள் முன்னெடுப்புக்களால் நிரப்பப்படுதல் வேண்டும்.

## 3.1 மத்திய வங்கியின் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் வட்டி விகிதங்களை வலுப்படுத்துதல்

IMF திட்டத்தின் ஒரு முக்கிய மைல்கல் 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி (CBSL) சட்டம் இயற்றப்பட்டதாகும். இச்சட்டம் புதிய பணவீக்க இலக்கு ஆட்சி மூலம் விலை ஸ்திரத்தன்மையை உறுதி செய்து CBSL இன் சுதந்திரம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்துகிறது. பணவீக்கப் போக்குகள், மூலங்கள், கணிப்புகள் மற்றும் இடர்கள் குறித்து வருடத்துக்கு இருமுறை அறிக்கைகளை CBSL வெளியிட வேண்டும் என்பதுடன் பணவீக்க இலக்குகளைத் தீர்மானித்து பிரசுரிக்குமாறு இச்சட்டம் அமைச்சரையும் ஆளுநரையும் கோருகிறது. பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு இந்த சுதந்திரமான ஆணை முக்கியமானது. இந்த புதிய சட்டத்தின் கீழ் CBSL இன் சுயாதீனத்திற்கு மதிப்பளிப்பது இலங்கையின் நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாததாகும்.

2023 ஜூன் மாதம் முதல், CBSL 2024 ஜூலை மாதத்திற்குள் கொள்கை வட்டி விகிதங்களை 700 அடிப்படை புள்ளிகளால் குறைத்து மிகவும் இணக்கமான நாணயக் கொள்கையைத் தழுவியது. கடன் விகிதங்கள் இப்போது 9.25% ஆகவும் மற்றும் வைப்பு விகிதங்கள் 8.25% ஆகவும் காணப்படுகிறது. அரசப் பிணையங்கள் மீது குறைந்த இடர் தவணைக்கட்டணத்துடன் சந்தைக் கடன் விகிதங்களைக் இது குறைத்துள்ளது. இருப்பினும், உணரப்பட்ட கடன் இடர்கள் காரணமாக MSME களுக்கான வட்டி விகிதங்கள் அதிகமாகவே உள்ளன.

வட்டி விகிதக் கொள்கை மீதான CBSL இன் தன்னாட்சியை அங்கீகரிக்கும் அதே வேளையில், புதிய சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளபடி, ஒருங்கிணைப்புப் பேரவையின் மூலமான ஆலோசனை செயல்முறை மூலம் CBSL அரசாங்கத்தின் பொதுவான பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பை ஆதரிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **CBSL இன் சுதந்திரம்:** நிறுவனச் சுதந்திரத்தையும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறலையும் இணைத்து தற்றுணிபுடன் பணம் அச்சிடுவதை நிறுத்துவதற்கு CBSL இன் சுதந்திரத்தை உறுதிசெய்தல். ***குறிப்பு:*** இது 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் அடையப்பட்டது. இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான அரசியல் அழுத்தங்களை நாங்கள் எதிர்ப்போம். | M |
| **பணவீக்கத்தை முகாமைசெய்தல்:** பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கான கடன் செலவுகளைக் முகாமைசெய்யக்கூடிய அளவில் பேணுவதற்கும் கொள்கை விகிதங்களைத் திருத்த CBSL இக்கு அனுமதியளித்தல். இது ஒரு சிக்கலான விடயமாகும் என்பதுடன் மேலும் அரசாங்கத்துடன் ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய பணவீக்க இலக்குகளின் அடிப்படையில், வர்த்தக-சார்பு பொருளாதார மாதிரி மற்றும் சர்வதேச போட்டித்தன்மையின் தேவை குறித்து CBSL ஐ ஈடுபடுத்துவது மிகவும் முக்கியமானது என நாங்கள் நம்புகிறோம். வெற்றியை உறுதிப்படுத்த கடுமையான அரசிறை மற்றும் நாணய ஒழுக்கம் இருத்தல் வேண்டும். | S |
| **விகிதங்கள்:** சந்தைத்-தீர்வக விகிதங்களில் சந்தையிலிருந்து வாராந்த உண்டியல் மற்றும் முறி நிதித் தேவைகளைப் பெறுவதை நோக்கிச் செல்லுதல். ***குறிப்பு:*** தற்போது, வாராந்த தேவையின் பெரும்பகுதி சந்தையால் பூர்த்தி செய்யப்படுவதுடன் CBSL இன்னும் அதன் ஒரு பகுதிக்கு நிதியளிக்கிறது. | S |

## 3.2 நாணயமாற்று விகிதக் கொள்கை

நாணய மாற்று விகித முகாமைத்துவத்திற்கான மூலோபாயம் ஒரு இடைநிலை மிதக்கும் கட்டத்தின் மூலம் சந்தை நிர்ணயிக்கப்பட்ட அளவைக் கண்டறிந்து பின்னர் ஒழுங்கற்ற விலகல்களை சரிசெய்ய மத்திய வங்கியின் தலையீடுகள் மூலம் அதை உறுதிப்படுத்துகிறது. நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்பட்ட அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் நெருக்கடியின் போது அளவுரீதியான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குதல், போதுமான இருப்புக்களை உருவாக்குதல் மற்றும் மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை மீண்டும் பெறுதல் ஆகியவற்றுடன் இது இருத்தல் வேண்டும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த (பணவீக்க இலக்குகளை முகாமை செய்வதற்கு) அல்லது வெளிநாட்டுக் படுகடன் சேவைச் செலவுகளைக் குறைக்க பெயரளவிலான நாணய மாற்று விகிதத்தை முகாமை செய்வதற்கான சந்தை சக்திகளுக்கு எதிராகத் தலையிடும், கவரும் வகையிலான முயற்சிகளை மத்திய வங்கி தவிர்த்தல் வேண்டும். சந்தை சக்திகளால் பெயரளவு மாற்று விகிதத்தை நிர்ணயம் செய்ய அனுமதிப்பது முக்கியம் என்பதுடன் இதனால் உண்மையான மாற்று விகிதம் (வர்த்தகப் பங்காளிகளுடன் எங்கள் ஒப்பீட்டு விலை வேறுபாடுகளுக்கு சரி செய்யப்பட்ட பெயரளவு மாற்று விகிதம்) நமது சர்வதேச போட்டித்தன்மையை பராமரிப்பதில் அதன் எதிர்பார்க்கப்படும் பாத்திரத்தை வகிக்கும்.

சீர்திருத்தக் காலப்பகுதியின் போது அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு மீதான கட்டுப்பாடுகளை நீக்கும் அதே வேளையில், பெரும்பாலான ஊகத்தினாலான குறுகிய கால மூலதனப் பாய்ச்சுகள் மீதான கட்டுப்பாடுகளை நாங்கள் பராமரிப்போம். குறுகிய கால மூலதனப் பாய்ச்சுகள் பொருளாதார மீட்சியின் போது பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம் மீதான தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தும்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **நாணயப் பரிவர்த்தனை சமநிலை:** சர்வதேச போட்டித்தன்மையை பராமரிக்க உள்நாட்டு பணவீக்கத்துடன் சரிசெய்து மாறுநிலைக் கட்டம் மூலம் பரிமாற்ற வீதத்தை அதன் சந்தை சமநிலையை அடைய அனுமதித்தல். **குறிப்பு:** இறக்குமதி கட்டுப்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் CBSL சில இஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது. தற்போது, நாணய மாற்று விகிதம் அதிகரித்து வருகிறது. | S |

# 04 வருமான ஒருங்கிணைப்பு

இலங்கையில் அரசாங்க வருமானம் வரலாற்று ரீதியாக குறைவாகவே உள்ளது. 1989 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளுக்கிடையில் அரசாங்க வருமானம் மற்றும் GDP இக்கு இடையிலான அதிகபட்ச சராசரி விகிதம் 23.3% ஆகும். இருப்பினும், 2004 ஆம் ஆண்டில் தொடங்கிய வீழ்ச்சி 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் வருமானம் 11.2% ஆகக் குறைந்ததுடன் பின்னர் 2018 ஆம் ஆண்டின் புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் மூலம் அது 2019 இல் 12% ஆக உயர்ந்தது. இந்த போக்கு 2019 இல் பெரிய வரிக் குறைப்புகளுக்குப் பிறகு மாற்றப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4% ஆகக் குறைந்தது இதற்கு நேர்மாறாக, 2019-2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையைப் போன்ற வளர்ந்து வரும் மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் அரசாங்க வருமானம் மற்றும் GDP இக்கு இடையிலான சராசரி விகிதம் 26% ஆகக் காணப்பட்டது. நாம் வேறுவிதமாக இருப்பது இதிலிருந்து தெளிவாகிறது. **அரசாங்க வருமானம் அதிகரித்தல் வேண்டும் என்பதுடன் 2029 ஆம் ஆண்டளவில் 15.4% என்ற IMF இன் தற்போதைய இலக்கு ஏற்கத்தக்கதாகும்.** அத்தகைய வருமானம் இல்லாமல், முக்கியமான உள்கட்டமைப்புக்கு, அது பொருளாதாரமாக இருந்தாலும், இரயில் அல்லது வீதி அல்லது சுகாதாரம் அல்லது கல்வி போன்ற சமூகம் சார்ந்ததாக இருந்தாலும், அரசாங்கத்தால் செலவிடுவது இயலாது போகும்.

இருப்பினும், 2024 UNDP ஆய்வின்படி, பெரும்பான்மையான இலங்கையர்கள் தற்போதைய வரி விதிப்பு முறையால் மகிழ்ச்சியற்றிருப்பதோடு வரிவிதிப்பு பற்றிய பொதுவான கருத்துக்கள் பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. பெரும்பாலான மக்கள் வரிக்காகப் பதிவு செய்யவில்லை (TIN இலக்கத்தை கொண்டிருக்கவில்லை) என்பதுடன் அவ்வாறு செய்ய ஆர்வமும் காட்டவில்லை (2023 இன் இறுதியில் 743,000 பேர் மட்டுமே வரிக்கு பதிவு செய்துள்ளனர் 2022 ஆம் ஆண்டில் 246,000 இல் இருந்து அதிகரிப்பு ஏற்பட்டாலும் 2019 இல் பதிவுசெய்யப்பட்ட 1,431,000 இனை விடக் குறைவாகவே உள்ளது). பெரும்பாலானோர் மறைமுக வரிகளை மட்டுமே செலுத்தினர். இருப்பினும், அவர்கள் தங்கள் வரிகளுக்காகப் பெற்ற சேவைகளில் திருப்தி அடையவில்லை. தற்போதைய வரி முறை நியாயமற்றது என்று பெரும்பான்மையானவர்கள் நம்புவதுடன் அரசாங்கம் வரிகளை உயர்த்துவதற்குப் பதிலாக படுகடன் பிரச்சினையைச் சமாளிக்க செலவினங்களைக் குறைத்தல் வேண்டும்.

இலங்கையின் வரி வருமானம் முக்கியமாக மூன்று மூலங்களிலிருந்து வருகிறது: உண்ணாட்டரசிறைத் திணைக்களம்- IRD, இலங்கைச் சுங்கம்- SLC, மற்றும் இலங்கையின் மதுவரித் திணைக்களம்- EDSL. IRD வருமானம் மற்றும் கூட்டிணைவு வரிகளைக் கையாளுவதுடன் SLC இறக்குமதி வரிகள் மற்றும் தீர்வைகளை முகாமை செய்வதுடன் மேலும் EDSL மதுபானம், புகையிலை மற்றும் ஏனைய அத்தகைய மது உற்பத்திப் பொருட்களுக்கான உரிமங்களைக் கையாள்கிறது. இருப்பினும், இந்த நிறுவனங்கள் எப்போதுமே தங்கள் வருமான இலக்குகளை அடையத் தவறிவிடுகின்றன. தற்காலிகக் கொள்கை மாற்றங்கள், நிர்வாகத் திறன் இன்மை, வினைத்திறனின்மை மற்றும் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் ஆகியவை முக்கிய பிரச்சினைகளாகும். சர்வதேச நாணய நிதியத்தின் 2023 செயலாற்றுகையைக் கண்டறியும் மதிப்பீட்டிலும் மூன்று நிறுவனங்களிலும் ஊழல் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.[9]

IRD 2014 ஆம் ஆண்டு முதல் வருமான நிர்வாக முகாமைத்துவத் தகவல் முறைமை (RAMIS) மூலம் இந்த நிலைமையை மேம்படுத்த முயற்சித்த போதிலும் அதன் நடைமுறைப்படுத்தல் மெதுவானதாகவும் சிக்கலானதாகவும் உள்ளது - குறிப்பாக முக்கிய அரசாங்கத் திணைக்களங்களுடன் RAMIS ஐ ஒருங்கிணைப்பதில். 2023 டிசம்பர் 31 ஆம் திகதிளவில், IRD ரூபா 1,000 பில்லியன் செலுத்தப்படாத வரிகளைக் கொண்டிருந்தது. தவறுகை வரிகள் தொடர்பான சுமார் 350 நடந்து வரு சட்ட வழக்குகள் காணப்படுவதுடன் மேலும் IRD மற்றும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் கிட்டத்தட்ட 5,000 மேன்முறையீடுகள் காணப்படுகின்றன.[10]

---

[9] ஒரு பெரிய ஊழல் பிரச்சினை "சீனி ஊழல்". சீனி இறக்குமதிக்கான விசேட பண்ட அறவீடு, திடீரென ரூபா 50 இலிருந்து குறைக்கப்பட்டதால், அரசு கணிசமான வருவாயை இழந்தது. அக்டோபர் 2020 இல் ரூபா 50/கிலோ இலிருந்து சதம் ரூபா 25/கிலோ வரை திடீரெனக் குறைந்தது. இது ரூபா 16 பில்லியன் நட்டத்தை அரசாங்கத்து ஏற்படுத்தியதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவருடைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இந்த குறைப்பு முக்கியமாக ஒரு சில இறக்குமதியாளர்களுக்கு (இந்த மாற்றத்தைப் பற்றி முன்னறிவிப்பு இருந்ததாகத் தோன்றியது) பயனடைந்தாலும் நுகர்வோர் பயனடையவில்லை என்பதே முடிவு. விசேடப் பண்ட அறவீடு மீண்டும் ரூபா 50/கிலோ கொண்டுவரப்படும் வரை இழந்த வருமானம் நவம்பர் 2023 இல் ரூபா 80 பில்லியன்களாகும். இதுபோன்ற பல நிகழ்வுகளில் இது ஒரு உதாரணம் மட்டுமே.

[10] இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது அமர்வு வழிகள் மற்றும் வழிமுறைகள் குழுவின் இரண்டாவது அறிக்கை. கிடைக்கும் முகவரி: 1712049750029698.pdf (parliament.lk).

மேற்கூறியவற்றைத் தவிர, சில குறிப்பிட்ட துறைகள் மற்றும் தனிப்பட்ட திட்டங்களுக்கான ஏராளமான விலக்குகள் வரிச் சேகரிப்பை மேலும் சிக்கலாக்கியுள்ளன. 2008 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்ட மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டம் மற்றும் அண்மைய துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டம் (குறைந்த தற்றுணிபு ஆனால் நீண்ட கால வரி நிவாரணம்) மூலம் 25 ஆண்டுகள் வரை கருத்திட்டங்களுக்கு வரி விலக்களிப்புக்களை வழங்க அரசியல்வாதிகளுக்குக் காணப்படும் தற்றுணிபு வருமானம் மீதான குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்றது. அரசாங்கம் அடிப்படையான வருமானக் கசிவுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது, அனைத்து வரிகளையும் (தனிப்பட்ட, கூட்டிணைவு மற்றும் VAT) அதிகரித்து புதியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் (புரள்வு வரி, அதாவது சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு) 2023 ஆம் ஆண்டிற்கான வரிவிதிக்கக்கூடிய வரம்புகளை குறைத்துள்ளது.

நேரடி வரிகளைப் பொறுத்தமட்டில், உழைக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கு அவர்கள் சம்பாதிக்கும்போதே செலுத்தும் (PAYE) வரிகளிலிருந்து தப்பிக்க முடியாத அதிகச் சுமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு ஒரு பரந்த வரித் தளம் தேவைப்படுகின்றது.

### தனிநபர் வருமான வரி சேகரிப்பிலுள்ள சவால்களும் முரண்பாடுகளும்: 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஒரு நெருக்கமான பார்வை

2023 ஆம் ஆண்டில், அதிக பணவீக்கத்திற்கு மத்தியில் PAYE மூலம் தனிநபர் வருமான வரியில் அதிக அதிகரிப்பு பல தொழில்வாண்மையாளர்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தியதுடன் அது மூளைசாலிகளின் வெளியேற்றத்தை மோசமடையச் செய்தது. ஆரம்பத்தில், PAYE வருமானம் ரூபா 68 பில்லியனாக கணிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அது ரூபா 100 பில்லியனாக மாற்றப்பட்டது. இருப்பினும், ஐசுனு 144 பில்லியன் ரூபாய்களை சேகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு ரூபா 160 பில்லியன், ஆனால் அறவீடு ரூபா 200 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த முரண்பாடு உண்மையான மதிப்பீட்டை குறைந்த விகிதங்கள் அல்லது பரந்த வரி அடுக்குகளுடன் சந் தித்திருக்கலாம் என்பதைக் குறிக்கிறது, ஆனால் ஊழியர்களுக்கு PAYE இல் இருந்து தப்பிக்க முடியாது என்பதால், சேகரிப்பை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்தது. இதற்கு நேர்மாறாக, தனிநபர் வருமான வரியில் (PIT) செலுத்தப்படாத பகுதியிலிருந்து 115 பில்லியன் ரூபாயை IRD எதிர்பார்த்தது, ஆனால் 48 பில்லியன் ரூபாய்களை மட்டுமே சேகரிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு ரூபா 80 பில்லியன், ஆனால் கணிப்பு ரூபா 40 பில்லியன். இந்த இடைவெளி குறைந்த தன்னார்வ இணக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த முடிவுகள், குறைந்த PIT விகிதங்களாலும், மேம்படுத்தப்பட்ட இணக்கத்தாலும் வருமான இலக்குகளை நிச்சயமாக சந்திக்க முடியும் என்று கூறுகின்றன.

மறைமுக வரிகளைப் பொறுத்தவரை, தற்போதைய வரி விதிப்பு அடிப்படை நுகர்வு மற்றும் முதலீட்டுத் தேவைகளைக் கூட விலக்கவில்லை. விரிவான வரி சீர்திருத்தங்கள் மற்றும் புத்தாக்கமான நிதி மற்றும் தொழில்நுட்ப மூலோபாயங்களை செயல்படுத்துவதன் மூலம் மட்டுமே நீண்ட கால அரசிறை நிலைபேறுதன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். இது ஒரு நியாயமான வரி முறையை அனுமதிப்பதுடன் தனிப்பட்ட வரி செலுத்துவோர் மீதான நியாயமற்ற அழுத்தத்தைத் தணிக்கும் அதேவேளை மிகவும் வலுவான பொருளாதாரத்தைப் போசிப்பதற்கு உதவும்.

IMF EFF கட்டமைப்பிற்குள் எங்கள் வரிக் கொள்கை சீர்திருத்தங்களை இறுதி செய்வதற்கு முன் உள்ளீட்டைச் சேகரிக்க முறையான மற்றும் முறைசாரா தனியார் துறை மற்றும் நிபுணர்களுடன் பரந்த வரி ஆலோசனை பொறிமுறையை உருவாக்குவோம். எங்கள் முக்கிய தலையீடுகள்:

| தலையீடு | கால அளவு |
|---|---|
| நிருவாக மறுசீரமைப்பு | |
| **ஒருங்கிணைந்த வருமான ஆணைக்குழு:** IRD மற்றும் அதைத்தொடர்ந்து சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வருமான ஆணைக்குழுவொன்றை நிறுவுதல். நடுத்தர காலத்தில், அத்தகைய நிறுவனம் தொழில்வாண்மை மற்றும் வருமானச் சேகரிப்பின் வினைத்திறனை மேம்படுத்துவதுடன் காலப்போக்கில் இது CBSL இக்கு இணையான சம்பள மட்டங்களுடன் ஒரு தனி அரசாங்க சேவையாக மாறும். | M |
| **நவீனமயமாக்கலும் டிஜிட்டல் மயப்படுத்தலும்:** அதேநேரம், மூன்று திணைக்களங்களையும் நவீனப்படுத்தவும், வெகுமதிகள் மற்றும் பொறுப்புக்கூறல் திட்டங்களை மேம்படுத்தி வலுப்படுத்துதலும் ஏற்கனவே உள்ள தொழில்நுட்பத் தளங்கள் (அதாவது IRD இல் RAMIS மற்றும் சுங்கத்தில் ASYCUDA) முழுமையாக தொழிற்படுவதை உறுதிசெய்யும் அதேநேரம் மதுவரிக்கு ஒரு தளத்தை அறிமுகப்படுத்துதல். | S |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| நிருவாக மறுசீரமைப்பு | |
| **அதிக வருமானம் ஈட்டுபவர்களின் பதிவு:** வரி செலுத்துவதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த அனைத்து தொழில்வாண்மை அமைப்புகளுக்குமிடையே ஒரு நாடு தழுவிய பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் TIN ஐ பதிவு செய்து வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செயல்படுத்துவதனை கொண்டு நடாத்துதல். இது இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கும்: முதலாவதாக, WHT கடமைகளைக் கொண்ட அனைத்து நபர்களுக்கும் மற்றும் வரி இல்லாத வரம்புக்கு அப்பால் பொதுத்துறை ஊழியர்களுக்கும் வரிக் கோப்புகளைத் திறத்தல் இரண்டாவதாக, தொழில்வாண்மை அமைப்புகளின் உறுப்பினர்கள் IRD உடன் வரிக் கோப்புகளைத் திறத்தல் வேண்டும். | S M |
| **ஓம்புட்சுமன்:** சட்டத்தின் மூலம், ஒரு ஓம்புட்சுமனை நிறுவுதல், அதாவது, வரி மேன்முறையீடுகள் மற்றும் நீண்ட வழக்குகள் ஆகியவற்றைக் கையாள்வதற்கு ஒரு சுதந்திரமான ஆளும் அதிகாரம். இந்த அலுவலகம் வரி மேல்முறையீட்டு ஆணைக்குழு மற்றும் IRD மீது பிணைப்பு அதிகாரத்தைக் கொண்டிருப்பதுடன் பொதுமக்களின் நம்பிக்கையை கவருவதுடன் விலையுயர்ந்த மற்றும் நீண்ட சட்டப் பிரச்சினைகளுக்கான மாற்று வழியாக மாறும். | S M |
| **பொதுச் சொத்து முகாமைத்துவம்:** அரசாங்கச் சொத்துக்களை மதிப்பிடுவதற்கும், வரி அல்லாத வருமானத்தை அதிகரிப்பதற்குமான வாய்ப்புக்களை அடையாளம் காண்பதற்கும் ஒரு செயலணியை உருவாக்குதல். அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள், கட்டணங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் வருமானம் ஆகியவற்றின் மீதான வருமானத்தை அதிகரித்தல். அதே நேரம் சேவையின் தரம் மேம்படுத்தப்படுவதை உறுதிசெய்யவும். நிறுவனம்-குறிப்பிட்ட நிதிகள் இருக்கும் போது, அது ஒருங்கிணைந்த நிதிக்கு அனுப்பப்படும். | S |
| வரைவு வரி மறுசீரமைப்பு | |
| குறிப்பிட்டுள்ளவாறு, வருமான ஒருங்கிணைப்பில் IMF உடனான நுகுகு உடன்படிக்கைக்குள் இருக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் முழுமையாக அறிந்துள்ளோம். இந்தக் கட்டமைப்பிற்குள், வரிக் கட்டமைப்பை மிகவும் சமமானதாக மாற்றவும், பொருளாதாரத்தில் வர்த்தகத்திற்கு எதிரான சார்புகளை அகற்றவும் நாங்கள் முன்மொழிகிறோம். சாத்தியமான சிறந்த கட்டமைப்பில் வெளிப்படைத்தன்மையுடன் ஒருமித்த கருத்துக்கு வருவதற்கு ஒரு செயலகமாக பணியாற்றுவதற்கு தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு சிறப்புப் பிரிவை நாங்கள் நிறுவுவோம்.<br>☎ **நடுத்தர வர்க்க வரிக் குறைப்பு:** எங்களால் முன்மொழியப்பட்ட "நடுத்தர வர்க்க" தனிநபர் வருமான வரித் திருத்தங்கள் என்பது 1% முதல் 24% வரையிலான மாதாந்த வருமானத்தை சுமார் அரை மில்லியன் ரூபாய் வரை கொண்டு செல்வதற்கும் தற்போதைய வரியில்லா வரம்பை அப்படியே வைத்திருப்பதற்கும் திருத்துவதாகும். அதன்பின்னர், தற்போதைய இறுதிநிலை வரி விகிதங்கள் அவ்வாறே தொடர்ந்து காணப்படும். தற்போதைய மட்டங்களை ஒரே மாதிரியாகப் பராமரிக்கவும் நாங்கள் எண்ணியுள்ளோம்.[11]<br>☎ இங்கு எங்கள் நோக்கம் நடுத்தர அளவிலான நிறைவேற்று உத்தியோகத்தினரின் பெரும்பகுதியை உறுதி செய்வதாகும் திருத்தம் செய்யும் காலத்தில் தங்கள் வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதில் கடுமையான சிரமங்களுக்கு உள்ளான முகாமையாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மீண்டும் ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும் எவ்வாறாயினும், உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) செலுத்துவோர் மீதான நியாயமற்ற சுமை அகற்றப்படுவதற்கு PAYE இற்கு வெளியேயும் அதற்கு அப்பாலும் வரி செலுத்துவோர் மத்தியில் இணக்கத்தை உறுதி செய்வதே சவாலாகவுள்ளது. தாங்கக் கூடிய விலைகளுடன் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் எளிதாக வரி செலுத்துதல் மற்றும் ஒரு வலுவான சமூக ஒப்பந்தத்துடன் கூடிய பிரஜைகளின் பொறுப்பை அதிகரிப்பதன் மூலம் IMF உடன் ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்குகளை எங்களால் அடைய முடியும் என்பது எங்கள் நம்பிக்கையாகும்.<br>☎ **கூட்டிணைவு வருமான வரிக்கான திருத்தங்கள்:** பொருட்கள் மற்றும் சேவைகளில் வர்த்தகம் செய்யக்கூடிய துறையால் இயக்கப்படும் வலுவான, நிலைபேறான மற்றும் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதே எங்கள் திட்ட வரைபடத்தின் கருப்பொருளாகக் காணப்படுகின்றது. ஒட்டுமொத்த இலக்குகளை வைத்துக்கொண்டு அத்தகைய யதார்த்தத்தை செயல்படுத்தும் வகையில் திருத்தங்கள் இருத்தல் வேண்டும். துறை ரீதியாக அனைத்து நிரல் உருப்படிகளுக்கும் உள்ளக பிரிக்கப்பட்ட தரவுகளுக்கு நாங்கள் அக்கறையினைக் கொண்டிருக்கவில்லை என்பதை கருத்திற்கொண்டு, CIT (மற்றும் பிற துணை கட்டணங்கள்) பற்றிய முன்மொழிவை அறிவிப்பதற்கு முன், ஒரு விரிவான பகுப்பாய்வைக் காத்திருப்பது விவேகமானது என்பதுடன் பொருளாதாரத்தில் வர்த்தகம் செய்யமுடியாத சார்பு அல்லாதவற்றை அகற்றுவதே எங்கள் நோக்கம் என்று சொன்னால் போதுமானது. மொத்த CIT இக்கு இடையூறு இல்லாமல் ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய திருத்தங்கள் அறிவிக்கப்படும். | S |

11 அண்மைய வரித் தரவைப் பயன்படுத்தியுள்ளதுடன் சில அனுமானங்களைச் செய்துள்ளோம். பதவியேற்றவுடன், நாம் அனுமானங்களை உறுதிப்படுத்த முடியும் என்பதுடன் நோக்கங்களை இடத்தில் வைத்து தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்யலாம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| ☎ **பெறுமதி சேர் வரிக்கான (VAT) திருத்தங்கள்:** முன்மொழியப்பட்ட வரி அறவீட்டு டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் DPI மூலமான தகவல் பகிர்வின் ஊடாக இணக்கத்தை மிக விரைவில் மேம்படுத்தும் போது 18% ஆக இருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலைத் தவிர VAT விகிதத்தை 15% ஆகக் குறைக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம் சமீபத்தில் சேர்க்கப்பட்ட பெரும்பாலான அத்தியாவசியப் பொருட்களின் மீதான VAT ஐ நாங்கள் அகற்றுவோம். இந்த பட்டியலில் குழந்தைகளுக்கான உயர் புரத உணவு, மருத்துவ மற்றும் கல்வி உபகரணங்கள், கால்நடை தீவனத்திற்கான உள்ளீடு (அதிக புரத உணவு உற்பத்தி செலவைக் குறைக்க) போன்ற பொருட்கள் உள்ளடங்கும். | S |
| ☎ இடைநிறுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக்கான (SVAT) திருத்தங்கள். உண்மையான SVAT (இடைநிறுத்தப்பட்ட VAT) போலியில்லாத ஏற்றுமதியாளர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்ததுடன் பின்னர் பல வகைகளை உள்ளடக்குவதற்காக திருத்தப்பட்ட SVAT (எளிமைப்படுத்தப்பட்ட VAT) அறிமுகப்படுத்தப்பட்டது. 2025 ஜனவரி 1 ஆம் திகதிக்குள் SVAT அகற்றப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இது ஒரு நேர்மறையான நடவடிக்கை என்று நாங்கள் நம்பவில்லை. மாறாக, ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வழங்கும் உற்பத்தியாளர்களுக்கான உண்மையான SVAT (இடைநிறுத்தப்பட்ட VAT) இக்கு மாற்றியமைப்பது ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம். இறுதி முடிவை எடுப்பதற்கு முன், நன்மை தீமைகள் பற்றி விரிவாக விவாதிப்போம். | S |
| **பிடித்துவைத்தல் வரிக்கான (WHT) திருத்தங்கள்:** நடுத்தர வர்க்கத்தினருக்கு நிவாரணம் வழங்க வருமானத்துக்கு ஏற்படும் இழப்பைச் சமன் செய்ய தற்போதைய நிலையிலிருந்து வட்டி மீதான WHT அதிகரிக்கப்படும். 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் வைத்திருக்கும் வைப்புத்தொகை அதிகபட்சத் தொகைக்கு உட்படும். WHT என்பது மேலதிக வரி அல்ல, ஆனால் ஒரு வரி சேகரித்தல் பொறிமுறை மட்டுமே மற்றும் கோட்பாட்டளவில் பணப் பாய்ச்சல் தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தும் என்றாலும், தானாக முன்வந்து செலுத்த வேண்டிய ஆனால் ஏய்ப்பு செய்பவர்களை வரி வலைக்குக் கொண்டுவருவதில் இது பயனுள்ளதாக இருப்பதுடன் மேம்படுத்தப்பட்ட இணக்கமும் காணப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த, IRD மீள்செலுத்தல் பொறிமுறை முழுமையாக்கப்படுதல் வேண்டும். திருப்பிச் செலுத்துவதில், உதாரணமாக 7 நாட்களுக்கு அப்பால், IRD இன் புறத்தில் காணப்படும் ஏதேனும் தாமதங்கள் வரி செலுத்துபவருக்கு செலுத்த வேண்டிய வட்டிக்கு பொறுப்பாக ஆக்கப்படும். | S |
| ☎ **மது வரிக்கான திருத்தங்கள்:** கலால் என்பது பெறுமான அல்லது சதவீத வரிக்கு மாறாக ஒரு அலகு வரியாகும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட விலை மட்டத்தில் உள்ள அதிகரிப்புக்கு சமமாக வரி அளவை அவ்வப்போது மாற்றியமைக்கப்படாவிட்டால், ஒரு அலகுக்கான வரி குறைவடையும். இதுவே பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. 2023 ஆம் ஆண்டில், அரசாங்கம் மது மற்றும் புகையிலைக்கான கலால் வரியை 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தானாகவே சுட்டெண்ணிடுவதற்கு அரசாங்கம் IMF உடன் இணங்கியிருந்தது, ஆனால் அது நடக்கவில்லை. சந்தையின் விரிவான ஆய்வின் அடிப்படையில் இதை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். போத்தலிலுள்ள பாதுகாப்பு (வரி) இஸ்டிக்கர் போலியாகப் போடப்படுவதால், மது மீதான மது வரி திரட்டல் தொடர்பான பெரும் மோசடி இடம்பெற்று வருகிறது. இழந்த வருவாயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அப்பால், மது போத்தல்கள் மீது இரு கையொப்பங்கள் கொண்ட வரி இஸ்டிக்கரைச் செயல்படுத்த நாங்கள் முன்மொழிகிறோம் அதனால் அதில் போலிகளுக்கு இனி சாத்தியமிருக்காது.<br><br>☎ மோட்டார் வாகனங்கள் மீதான மது வரி (மின்சார வாகனங்கள் உட்பட) இரு நாடுகளும் EV களை நோக்கி நகர்வதையும், நாடுகளுக்கான வருமானத்தை மேம்படுத்துவதையும் உறுதிசெய்யும் மீளாய்வு மேற்கொள்ளப்படும். வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படுதல் வேண்டும்.. | S |
| ☎ **சீட்டாட்டத் தொழில்களுக்கு ஏற்புடைய வரிகளுக்கான திருத்தங்கள்:** தற்போது சீட்டாட்டத் தொழில்கள் அதன் மொத்த சூதாட்ட வருமானத்தில் (GGR) 15% மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் இலாபத்தில் 40% வரி விதிக்கப்படுகிறது. உரிமக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் காணப்படுகின்றன, ஆனால் ஏயுவு ஓ அல்லது SSCL X இதற்குப் பொருந்தாது. மேலும், அதன் வணிகத்தின் தன்மை பணத்தில் காணப்படுவதால் முறையான கணக்காய்வு நடாத்தப்படவில்லை. GGR இல் மற்ற அதிகார வரம்புகளுடன் ஒப்பிடக்கூடிய எளிமையான ஒருங்கிணைக்கப்பட்ட வரியை வைத்திருப்பது நல்லது என நாங்கள் நம்புகிறோம். அனைத்து பங்குதாரர்களின் நலனுக்காகவும், சரியான வரித்தொகை அரவிடப்படுவதை உறுதி செய்வதற்காகவும் முன்னுரிமையின் அடிப்படையில் சூதாட்ட (சீட்டாட்ட) ஒழுங்குபடுத்துனரை நாங்கள் நிறுவுவோம். | S |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| ☎ **கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியை நியாயமான சொத்து வரியுடன் மாற்றீடு செய்தல்:** முன்மொழியப்பட்ட கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியை நாங்கள் எதிர்த்தோம், ஏனெனில் இது சராசரி வீட்டு உரிமையாளரின் ஒரே வீட்டையும் நியாயமற்ற வரிக்கு உட்படுத்தும். ஆகவே, கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியை நாங்கள் விதிக்க மாட்டோம். சொத்தின் மீது (வீடு அல்ல) விதிக்கப்படும் சொத்து வரி மிகவும் சமமானதாக இருக்கும். அடையாளம் காணப்பட்ட தொகுதிகளில் உள்ள சொத்துக்களின் மதிப்புகளைத் தீர்மானிக்க தொழில்நுட்பத்தைப் (ட்ரோன் வரைபடங்கள் போன்றவை) பயன்படுத்துவது குறித்து அனைத்து பங்குதாரர்களுடனும் முழுமையான கலந்துரையாடல்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். | M |
| ☎ **இனிப்புப் பானங்கள் மீதான வரியை 2017 ஆம் ஆண்டின் அதே நிலைக்கு மீண்டும் அறிமுகப்படுத்துதல்:** இந்த வரி அடிக்கடி மாற்றப்பட்டு வருகிறது. வருமானத்துக்கு அப்பால், இது அதிக எடை மற்றும் நீரிழிவு போன்ற தொற்றாத நோய்களுக்கு எதிரான போராட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். WHO விதந்துரைத்த வரி விகிதங்கள் பற்றிய பொது ஆலோசனையைப் பெற்று பொருத்தமான தீர்வை அடைய நாங்கள் திட்டமிட்டுள்ளோம். | S |
| ☎ **உலகளாவிய சிறந்த நடைமுறைகளைத் தழுவுதல்:** அடிப்படை அரிப்பு (Base erosion) மற்றும் இலாப மாற்றல் டிஜிட்டல் பொருளாதார கட்டமைப்பில் (BEPS) கையெழுத்திடுதல். பன்னாட்டு நிறுவனங்களுக்கு 15% உலகளாவிய குறைந்தபட்ச மாற்று வரியை அறிமுகப்படுத்துதல் (OECD BEPS தூண் 2). | M |
| ☎ **சேவைகள் மீதான வரிகளுக்கான அதிகார வரம்பாக நுகர்வு இருத்தல் வேண்டும்:** உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் நுகரப்படும் சேவைகள் VAT இக்கு உட்படும் அதேவேளை வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டில் பயன்படுத்தப்படும் சேவைகளுக்கு அது இல்லை. ஒரு சிறந்த உதாரணம் PickMe எதிர் Uber. இரு தரப்பினரையும் ஒரே வரிவிதிப்புக்கு கொண்டு வர நாங்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வோம். | M |
| **இறக்குமதித் தீர்வைகள்**<br>☎ 0%, 10% மற்றும் 15% விகிதங்களுடன், தற்போதுள்ள மூன்று-பட்டை சுங்க இறக்குமதி வரி முறைமையை முறையே 0%, 15% மற்றும் 20% ஆக மாற்றுதல்.<br>☎ 3-5 ஆண்டுகளில் அவற்றை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டு, துணைத் தீர்வைகள் (முதலில் PAL, பின்னர் CESS) படிப்படியாகக் குறைவதைத் தொடர்தல். உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மீது எதிர்மறையான தாக்கத்தை உறுதி செய்வதற்காக பொருத்தமான வர்த்தக திருத்தல் தொகுப்பு அறிமுகப்படுத்தப்படும். | M L |

வருமான சேகரிப்பு நிறுவனங்களுக்கான அனைத்து மேம்பாடுகளும் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு தளத்தின் திட்டமிட்ட செயலாக்கத்தின் பின்னணியில் நிவர்த்திசெய்யவேண்டியிருப்பதுடன், இது அத்தியாயம் 7 இல் (பொதுத்துறை முகாமைதுவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்) முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளது. வருமான அதிகாரிகளுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் DPI இல் பூர்த்திசெய்யப்படும் என் நாங்கள் கருதுகிறோம். அதைத் தாண்டி, பணக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்குச் செல்ல பங்குதாரர்களின் மிகப்பெரிய குழுவை நாங்கள் இடைவிடாமல் தொடர்வோம்.

பங்கிலாபம் மூலம் நிலையான வருமானத்தை ஈட்டுவதற்கு அரசுக்குச் சொந்தமான முயற்சியாண்மைகளின் (SOE) செயல்திறனை மேம்படுத்துவதும் அவசியம். SOE சீர்திருத்தங்கள் பிரிவு 5 இல் (செலவுக் கட்டுப்பாடு) மேலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 05 செலவினக் கட்டுப்பாடு

வீணான அரசாங்க செலவுகள், வீண்விரயம் மற்றும் ஊழல் பற்றிய பரவலான கவலைகள் இருந்தபோதிலும் IMF EFF திட்டம் வருமான அதிகரிப்பில் அதிக கவனம் செலுத்தும் அதே நேரத்தில் செலவினக் குறைப்புகளை புறக்கணிக்கிறது. சீர்திருத்தங்கள், குறிப்பாக வரி மாற்றங்கள் ஆகியவற்றில் பொதுமக்களின் அதிருப்தி, செலவினங்களை நிவர்த்தி செய்வதில் அரசாங்கத்தின் தோல்வியிலிருந்து உருவாகிறது. எனவே, நிதி ஒருங்கிணைப்பில் SOE களின் செலவினக் குறைப்புகளும் சீர்திருத்தங்களும் இருத்தல் வேண்டும். சமூக பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்தவும் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற முக்கியமான சேவைகளுக்கான செலவினங்களை அதிகரிக்கவும் இந்த நடவடிக்கைகள் அரசிறை இடத்தை உருவாக்க முடியும். UNDP ஆய்வின் பிரகாரம் (2024), பதிலளித்தவர்களில் சுமார் 30% பேர் மட்டுமே கடன் பிரச்சினையைச் சமாளிக்க அதிகரித்த வரிகளை விரும்பினர், மேலும் 90% பேர் அரசாங்கம் செலவினங்களைக் குறைக்க வேண்டும் என்றும் 80% பேர் பொதுத்துறை வேலைவாய்ப்பு குறைக்கப்பட வேண்டும் என்றும் நம்பினர்.

## 5.1 பொதுச் செலவினங்களை பகுத்தறிவிற்கு ஏற்றவாறு செய்தல்

பொதுச் செலவினங்களை முகாமைசெய்வதில் தொடர்ச்சியான சிக்கல்கள், வருமானத்தை உயர்த்துவதில் தோல்வி, வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை, அதிகரித்து வரும் படுகடன் மற்றும் உட்கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான வரையறுக்கப்பட்ட நிதி ஆகியவற்றிற்கு வழிவகுத்தது. வள ஒதுக்கீட்டில் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பொதுச் செலவினங்களை பகுத்தறிவிற்கு ஏற்றவாறு மேற்கொள்வதற்கு SJB உறுதியளிக்கிறது. மேலும், நாங்கள் பொதுத்துறை வேலைவாய்ப்பின் முகாமைத்துவ கணக்காய்வை நடாத்துவதோடு கணக்காய்வு முடியும் வரை கீழ்மட்ட ஊழியர்களுக்கான நெறிப்படுத்தப்பட்ட செயல்முறைகளுடன் புதிய பணியமர்த்தலை முடக்குவோம்.

2024 ஆம் ஆண்டின் புதிய பொது அரசிறை முகாமைத்துவச் சட்டம் (PFM) 2003 ஆம் ஆண்டின் பழைய அரசிறை முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்தை (FMRA) மாற்றியமைத்து, செலவினங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இது அரசிறை பொறுப்புக்கான அடித்தளத்தை பலப்படுத்துகிறது. FMRA அரசிறைப் பற்றாக்குறை மற்றும் அரசாங்கக் கடன் மீதான வரம்புகளை 2006 ஆம் ஆண்டுக்குள் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை GDP யில் 5% இக்கும் குறைவாகவும், படுகடனை 60% இக்கும் குறைவாகவும் வைத்திருக்கும் நோக்கத்துடன் நிர்ணயித்தது ஆனால் இவை தொடர்ந்து விளைவுகள் இல்லாமல் மீறப்பட்டன. இலக்குகளை மீறுவதற்கான தெளிவான தண்டனைகள் மற்றும் கண்டிப்பான அமுலாக்க பொறிமுறைகள் சட்டமியற்றும் கட்டமைப்புகளுக்கு அப்பால் இணக்கம் மற்றும் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் வகையில் இருப்பது அவசியமாகும். PFM சட்டத்தின் நோக்கங்களை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தத் தேவையான திருத்தங்களுடன் நாங்கள் பின்பற்றுவோம். வருமானத்துடன் தொடர்பில்லாத தன்னிச்சையான முதன்மை செலவின வரம்பு நடுத்தர கால முதன்மை சமநிலை இலக்குகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் தர்க்கரீதியான நிபந்தனையுடன் மாற்றீடு செய்யப்படும். ஒவ்வொரு பொது ரூபாயையும் மூலோபாயமாக மக்களுக்கு அதிகபட்ச மதிப்பிற்கு பயன்படுத்துவதே எங்கள் குறிக்கோளாகும்.

| தலையீடு | கால அளவு |
| --- | --- |
| **தரவு இயக்கப்பட்ட திட்டமிடல்:** PFM கட்டமைப்பிற்குள், நம்பகமான முன்னறிவிப்புகள் மற்றும் இடர் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி சரியான தரவு மற்றும் எதிர்காலக் கவனத்தை அடிப்படையாகக் கொண்ட செலவினத் தீர்மானத்துக்கு வழிகாட்டுவதற்கு ஒரு வலுவான நடுத்தர கால செலவின கட்டமைப்பை (MTEF) செயல்படுத்துதல். இந்தப் பகுப்பாய்வு, வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற நீண்ட காலத் திட்டங்களுக்கான பொது வரவுசெலவுத் திட்டத்திலிருந்து மூலதனச் செலவினங்களை மறு முதன்மைப்படுத்துவதுடன் தேசிய பௌதீகத் திட்டத்திற்கு வெளியே உள்ள அனைத்துத் திட்டங்களையும் அகற்றும். | S M |
| **பொது நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு செலவினங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்:** சமூக ஒப்பந்தத்தின் முறிவு மற்றும் விரயம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு செலவினங்களில் பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவது மிகவும் முக்கியமானது. இது, MTEF உடன் இணைந்து, அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே செலவினத்தின் திசை மற்றும் அளவுகளில் ஒரு பங்குடைமையை உருவாக்க முடியும். குறிப்பிட்ட முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது: திட்ட ஒப்புதலுக்கான அளவுகோல்கள் உட்பட அனைத்து அரசாங்க செலவினங்களுக்கும் வெளிப்படையான வழிகாட்டுதல்களை வெளியிடுதல். | S M |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| ☎ குறிப்பிடத்தக்க செலவினங்கள் பற்றிய ஆலோசனைகள் மூலம் பொதுமக்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களை ஈடுபடுத்துதல்.<br>☎ அனைத்துச் செலவு முடிவுகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை பொது அணுகல், ஆய்வு மற்றும் நடந்துகொண்டிருக்கும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை அனுமதிக்கும் அனைத்து செலவினத் தீர்மானங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை அதேநேரத்தில் பிரசுரிக்க நிகழ்நிலை நுழைவாயிலை நிறுவுதல்.<br>☎ பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதற்கும் பகிரங்கமாக வெளியிடப்பட்ட கண்டுபிடிப்புகளுடன் வழக்கமான சுயாதீன தணிக்கைகளை நடாத்துதல்.<br>☎ செயல்திறனை மேம்படுத்துவதற்கும் தாமதங்களைக் குறைப்பதற்கும் செலவினத் தீர்மானமெடுக்கும் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திற்கும் கடுமையான காலக்கெடுவை அமைத்துக் கடைப்பிடித்தல். | |
| **படுகடனை முகாமைசெய்தல்.** 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.1% லிருந்து 2029 ஆம் ஆண்டுக்குள் 6.2% ஆகக் குறையும், கடன் மறுசீரமைப்பிற்குப் பிறகும், தொடர்ச்சியான செலவினங்களின் மிகப்பெரிய கூறு வட்டியாக இருக்கும் என்பதால் கடன் முகாமைத்துவம் முக்கியமானதாகும். விவாதம் பிரிவு 2 இல் காணப்படுகின்றது (இறையாண்மை படுகடன் நெருக்கடியை முகாமை செய்தல்). | S M L |
| **செலவினக் குறைப்பு முன்னெடுப்புகள்.** வரவுசெலவுத்திட்டத்திலுள்ள ஒவ்வொரு வரி உருப்படிகளும் தேவை என்பதை உறுதிப்படுத்த நாங்கள் பரிசீலனை மேற்கொள்வோம். நீக்கக்கூடியவை நீக்கப்பட்டு மற்றவை திருத்தப்படும். | S M |
| ☎ **அமைச்சர்களின் அமைச்சரவையை பகுத்தறிவுக்குற்படுத்துதல்.** அண்மைக் காலத்தில் அமைச்சரவையின் தவறான சீரமைப்பு மற்றும் கூறுகளாகப் பிரிபடும் தன்மையை நீக்கி, புதிய அமைச்சரவைக்கான ஒரு விவேகமான கட்டமைப்பை நாங்கள் எட்டுவோம். செலவினங்களின் பகுத்தறிவு மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில், அரசியலமைப்பின் நிபந்தனைகளுக்குள் நியாயமான எண்ணிக்கையிலான அமைச்சர்கள் மற்றும் அமைச்சுகளை நாங்கள் அடைவோம். | |
| ☎ **பண அனுப்பல்கள்:** இலக்கு வைக்கப்பட்ட குடும்பங்களுக்கு மிகவும் இலக்குடைய மற்றும் வெளிப்படையான முறையில் பணத்தை அனுப்புவதற்கான வழிமுறையை மேம்படுத்துதல்தற்போதைய அஸ்வெசும திட்டம் பாதிக்கப்படக்கூடிய மற்றும் தேவைப்படுபவர்களை சரியாக இலக்குவைக்கப்படவில்லை, இதன் விளைவாக பெரிய அளவிலான நிதிக் கசிவு ஏற்படுகிறது. நடப்பிலுள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பின் அண்மைய தரவுகளைப் பயன்படுத்தி இலக்கிடுதலை மேம்படுத்துவதுடன் DPI இயங்குதளத்தைப் பயன்படுத்தி செயல்திறன் மற்றும் நிர்வாகத்தின் எளிமையை மேம்படுத்துவோம். இது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் வறுமை ஒழிப்பு திட்டத்துடன் பிரிவு 10 (வலுவான சமூக பாதுகாப்பு வலைகள்) இல் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. | S M |
| ☎ **பொது உட்கட்டமைப்பு:** தனியாரிலிருந்து பொதுப் போக்குவரத்திற்குச் செல்வதற்கு வசதியாக பொருளாதார உட்கட்டமைப்பு செலவினங்களை மறு ஒதுக்கீடு செய்தல். தனியார் போக்குவரத்திற்கான அதிகப்படியான செலவினங்களுடன் ஒப்பிடுகையில், ரயில் மற்றும் மெட்ரோ போக்குவரத்து போன்ற பொதுப் போக்குவரத்திற்கான செலவுகள் சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை உருவாக்கும் என்று பரிந்துரைக்க ஏராளமான சான்றுகள் உள்ளன. கண்டி நெடுஞ்சாலை நிறைவடையும், ஆனால் அதற்கு அப்பால் விரிவாக்கம் முன்னுரிமையின் அடிப்படையிலான விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பாழடைந்த கிராமப்புற வீதி வலையமைப்பை மேம்படுத்துவது, கிராமப்புற. விவசாயப் பொருளாதாரத்தை புத்துயிர் பெறுவதற்கான ஒரு ஒருங்கிணைந்த இயந்திரமாகவும் முதன்மையானதொரு கொள்கையாகவும் இருத்தல் வேண்டும். பொதுப் போக்குவரத்தைத் தவிர, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | S M L |
| ☎ **இராணுவச் செலவு:** உலகில் 100 நபர்களுக்கு 10 ஆவது பெரிய இராணுவ வீரர்களைக் கொண்ட நாடு இலங்கை ஆகும்.[12] எதிர்காலத்தில் பாதுகாப்புத் தேவைகள் குறித்த உறுதியான திட்டமிடலின் அடிப்படையில் இராணுவத்தில் இயற்கையாகக் குறைவடைவதை அனுமதிப்பதுடன் மேலும் மூத்த வீரர்களின், குறிப்பாக ஊனமுற்ற வீரர்களின் உயர்தர வாழ்க்கையைப் பராமரிக்க போதுமான நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்வோம். ஆசிரியர்கள் தொடங்கி, பொதுத் துறையில் சம்பளத்தை அதிகரிக்கச் செய்யக்கூடிய சேமிப்பை மறு ஒதுக்கீடு செய்வது குறித்து பரிசீலிப்போம். | M L |

[12] சமூகப் பாதுகாப்பிற்கான அரசிறை இடம். UNICEF Sri Lanka மற்றும் Verite Research, 2023

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **வாகனங்கள்:** இலகுவாக அடையக்கூடிய விடயம் அரச வாகனச் செலவாகும். வாகனங்கள் மீதான வீண் செலவுகள் நிறுத்தப்படும். உண்மையான எண்ணிக்கை தெரியாததால், பொதுச் சேவையின் சரியான தேவை மதிப்பீடு மற்றும் கிடைக்கக்கூடிய வாகனத் தொகுதிக் கணக்காய்வு நடாத்தப்படும். ஜனாதிபதி முதல் கீழ்மட்டம்வரை வாகனம் பயன்படுத்துவதில் கடுமையான வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்படும். | S M |
| **அரசியல்வாதிகளைப் பராமரித்தல்:** தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கும், சில சந்தர்ப்பங்களில் முன்னாள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் வரிப்பணத்தை “விரயம்” செய்யக் கூடாது என்று பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அரசியல்வாதிகள் மீதான செலவினங்கள் பற்றிய விரிவான கணக்காய்வை நாங்கள் மேற்கொள்வதுடன் ஒவ்வொரு தனிநபரின் மதிப்பிடப்பட்ட பாதுகாப்பு இடர்களின் அடிப்படையில் அது நியாயப்படுத்தப்படும். | S |
| **புதிய செலவின விடயங்கள்: பல புதிய செலவு உருப்படிகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். குறிப்பிடத்தக்க புதிய நிரல் உருப்படிகள்:**<br><br>**அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்பு:** தகுதியுள்ள அனைத்து பொதுத்துறை ஊழியர்களுக்கும் எங்கள் அரசாங்கம் மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ரூபா தற்போதைய தொகை ரூபா 17,800 இலிருந்து மாதம் ரூபா 25,000 வரை அதிகரிக்கும். அரச சேவை சம்பள முரண்பாடுகள் தொடர்பில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. குறிப்பு: தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகு அரசாங்கம் இந்த துல்லியமான எண்ணிக்கையை அறிவித்தது. | S |
| அரச ஊழியர்களுக்கான அடிப்படை சம்பள உயர்வு: அரசாங்க சேவைக்கான குறைந்தபட்ச ஆரம்ப மாத சம்பளம் குறைந்தபட்சம் 24% அதிகரிக்கும் (தரங்களுக்கான தற்போதைய விகிதங்களின் அடிப்படையில்). இந்தத் திருத்தம் தற்போது அனுபவிக்கும் பல்வேறு திருத்தங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கும். இது மீண்டும், அரசிறைத் தரவை ஆய்வுசெய்வதன் மூலம் இறுதித் தொகை தீர்மானிக்கப்படும். | S |
| மேலுள்ள இரண்டு திருத்தங்களும் பொதுச் சேவையில் குறைந்தபட்ச, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு உட்பட, மொத்த சம்பளத்தை ரூபா. 57,500 ஆக மாற்றும். **குறிப்பு:** இந்த புள்ளிவிவரங்கள் (சம்பள அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு) பொதுத்துறை முழுவதும் சம்பளத்தை திருத்துவது தொடர்பான விதப்புரைகளை வழங்குவதற்கு முன்னர் குறிப்பிடப்பட்ட அமைச்சரவை நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கையை முழுமையாக அடிப்படையாகக் கொண்டவை. | |
| **“பிரபஞ்சம்“ இஸ்மார்ட் வகுப்பறைகள்:** இஸ்மார்ட் ஸ்ரீலங்காவைக் கட்டியெழுப்புவதற்கு முதன்மையான முன்னுரிமை கொடுக்கப்பட்டு, பாடசாலைகளில் டிஜிட்டல் கற்றல் தளங்களின் மாணவர்களின் அணுகலை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இது அனைத்துப் பாடசாலைகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளடக்கத்தை வழங்குவதற்கான மொத்த மாற்றத்தை உள்ளடக்கும். இந்தத் திட்டம் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு விரிவுபடுத்தப்படும். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, வெளிநாடுகளில் உள்ள பாடசாலைகளுடன் இணைந்த இரட்டை நிகழ்ச்சித்திட்டங்கள் மீது ஒரு புத்தாக்கமான நிதிக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும். | S M L |
| **மருத்துவமனைகளுக்கு “மூச்சு" (ஹுஸ்ம) ஒத்துழைப்பு:** நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான எங்கள் நிகழ்ச்சித்திட்டம், தேவையின் முழுமையான மதிப்பீட்டின் அடிப்படையில் சுகாதார வரவுசெலவுத்திட்டத்தில் நெறிப்படுத்தப்படும். | S M L |
| **மகப்பேறு லீவு நன்மைகள்:** இலங்கையின் பெண் தொழிலாளர் படைப் பங்கேற்பு நீண்ட காலமாக 30% இனைவிடக் குறைவாகவே உள்ளது. மேலும், வேலையில்லாத பெண்களில் கிட்டத்தட்ட 80% பேர் 20-40 வயதுக்குட்பட்டவர்கள். நாங்கள் 1952 இல் ILO மூலம் மகப்பேறு லீவு நன்மைகளை உறுதியளித்திருந்தாலும், இந்த நோக்கத்திற்காக நாங்கள் இன்னும் எந்த நிதியையும் வழங்கவில்லை. மகப்பேறு லீவு நன்மைகளுக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இயலுமையைப் பொறுத்து நிதியளிப்போம். தொழிலாளர் படையில் பெண்களின் எண்ணிக்கையை மேம்படுத்த இது ஒரு முக்கிய உந்துதலாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம். | S M |
| **மாதவிடாய் சமத்துவம்:** பாடசாலை செல்லும் மகளிர்களுக்கான சுகாதாரத் துப்பரவுத் தயாரிப்புகளுக்கு மானியம் (சுயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையில்) வழங்குதல். இதைப் பற்றி பிரிவு 10 இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன (வலுவான சமூகப் பாதுகாப்பு வலைகள்). | S M |

## 5.2 அரச உடைமையான தொழில் முயற்சிகளின் (SOE) சீர்திருத்தம்

நீண்ட கால கருத்திட்டங்களுக்கான மூலதனச் செலவுகள் திருத்தப்பட்டுள்ளன, ஆனால் அரசாங்கம் ஏனைய மீண்டெழும் செலவினங்களை பங்கீடு செய்யவில்லை அல்லது SOE கள் மீது வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. நஸ்டத்தில் உள்ள SOE களின் ஊழியர்களுக்கு மிகையூதியம் வழங்குதல் மற்றும் பொது நிதியில் அதிக அளவு செலவு செய்தல் ஆகியவை உதாரணங்களில் அடங்கும். கீழே விவரிக்கப்பட்டுள்ள பரந்த சீர்திருத்தங்கள் மற்றும் குறிப்பிட்ட தலையீடுகள் மூலம், பல SOE களை இலங்கைக்கு வலுவான மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவி வரி செலுத்துவோர் சுமைகளில் இருந்து வருமானத்தை ஈட்டுபவைகளாக மாற்ற முடியும்.

ஒரு SOE ஹோல்டிங் நிறுவனத்தை நிறுவுவது SOE சீர்திருத்தத்தின் முக்கிய பகுதியாகும், ஏனெனில் இது SOE களை வீண் மற்றும் ஊழலுக்கு வழிவகுக்கும் அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து அகற்றும். இந்த SOE ஹோல்டிங் நிறுவனம், சிங்கப்பூரின் "டெமாசெக் மாதிரி" போன்ற கட்டமைப்பின் கீழ், SOE உரிமையை நிர்வகிப்பதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட மற்றும் மூலோபாயக் கட்டமைப்பை வழங்கும். இந்த நிறுவனத்தின் குழுவானது அரசியலமைப்புச் சபையின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் சிறந்த தொழில்வாண்மையாளர்களைக் கொண்டிருப்பதுடன் உலகளாவிய மட்டத்தில் கிடைக்கக்கூடிய சிறந்த திறமையாளர்களால் முகாமைசெய்யப்படும். திறைசேரிச் செயலாளரால் முகாமைசெய்யப்படும் உரிமையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட SOE களை இது ஒருங்கிணைக்கும்.

ஹோல்டிங் கம்பனி ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அதேவேளை ஒவ்வொரு SOE யும் தங்களுக்கான மூலோபாயத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களை உருவாக்கும். இத்திட்டங்கள் குழுக்களால் அனுமதியளிக்கப்பட்ட முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளுடன் (KPI) சந்தைப் பங்கு, உற்பத்தித்திறன் மற்றும் நிதிச் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கான இலக்குகள், வளப் பயன்பாடு மற்றும் உத்திகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஒவ்வொரு SOE களிலும் திறைசேரி செயலாளர் என்ன பங்கு வைத்திருக்க வேண்டும் என்பது சர்வதேச போட்டித்தன்மை மற்றும் வினைத்திறனுடன் தேசிய மற்றும் பாதுகாப்பு நலன்களை சமநிலைப்படுத்தி பல்வேறு பங்குதாரர்களின் பல நோக்கங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| SOE ஹோல்டிங் கம்பனி: SOE ஹோல்டிங் கம்பனியை சட்டமாக்கி செயல்படுத்தி, மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து SOE களையும் அதன் கீழ் ('Temasek' வகை மாதிரி) கொண்டுவருதல். அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் சில SOE கள் ஹோல்டிங் கம்பனிக்கு வெளியே இருக்கும் என்பதே இதன் இயற்கயான பொருளாகும். | S M |
| **ஹோல்டிங் கம்பனியின் கீழ் இல்லாத SOE களை ஒழுங்குபடுத்துதல்:**<br>☎ ஹோல்டிங் கம்பனியின் கீழ் கொண்டு வரப்படாத SOE கள் மீது கடுமையான வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடுகளை விதித்தல். அவற்றுக்கான மூலதனம் மற்றும் தற்போதைய பரிமாற்றங்களை நிறுத்துவதற்கு ஆரம்பித்தல்.<br>☎ சட்டத்தின் மூலம், ஹோல்டிங் கம்பனியின் கீழ் இல்லாத SOE களுக்கு, அடுத்த நிதியாண்டிற்குள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குதல் மற்றும் அனைத்து SOE களையும் கடன் அடிப்படையிலான கணக்கீட்டுக்கு மாற்றுதல். இந்த SOE திறைசேரிக்கு ஒரு சுமையாக மாறக்கூடாது என்பதே இதன் நோக்கமாகும். **குறிப்பு:** இது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் நடைமுறைப்படுத்தல் மற்றும் முக்கியத்துவம் தேவைப்படுகின்றது. | S M |
| **நிதியளித்தல்:** முழுமையான மாற்றம் வரை அனைத்து SOE களுக்கும் அரச வங்கிகளால் இடர்-அளவிடப்பட்ட கடன் வழங்கலைப் பயன்படுத்துதல். | S |
| **கலைப்பு:** நம்பகத்தன்மையற்ற SOE களின் உரிமையைப் பெற, ஒரு நிலையான அல்லது ஹோல்டிங் கம்பனியாக கட்டமைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் வகையற்ற SOE களை கலைத்தல். இந்த நிறுவனம் சொத்துக் கலைப்பு மற்றும் கடன்கொடுநருக்கான கொடுப்பனவைக் கையாளும். | S |
| **தாராளமயமாக்கல்:** தற்போது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் ஏகபோகமாக உள்ள பகுதிகளில் தனியார் நிறுவனங்களை நுழைய அனுமதிக்கும் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சந்தைகளை தாராளமயமாக்குதல். | M |
| **விமான நிலைய முகாமைத்துவம்:** அனைத்து விமான நிறுவனங்களையும் கவரும் வகையில் விமான நிலையங்களின் நிர்வாகத்தை மறுசீரமைத்தல். குறைந்த கட்டண விமான சேவைகளை விமான நிலையத்துக்கு ஈர்க்கும் வகையில் தரை கையாளுதல் சேவைகளை விலையிடல். **குறிப்பு:** விமான நிலையங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. | M |

# 06 வளர்ச்சியை ஊக்குவித்தல்

ஆரம்பத்தில் ஒரு மூலோபாய இருப்பிடம், வலுவான ஏற்றுமதித் துறை, வலுவான கல்வி அமைப்பு மற்றும் வளர்ந்த உள்கட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து பயனடைந்து ஒரு காலத்தில் சுய-ஆட்சிக்கு நன்கு தயாரிக்கப்பட்ட ஒரு மாதிரிக் குடியேற்ற நாடாக இலங்கை இருந்தது. ஒரு காலத்தில், இது மிகவும் வளமான ஆசிய நாடுகளில் ஒன்றாக இருந்தது. இருப்பினும், பல தசாப்தங்களாக, அதன் பொருளாதார வளர்ச்சியானது வேகமாக வளரும் கிழக்காசியப் பொருளாதாரங்களை விட பின்தங்கிக் காணப்பட்டது. 2007 ஆம் ஆண்டளவில், இலங்கை குறைந்த வருமானத்தில் இருந்து குறைந்த-நடுத்தர வருமான நிலைக்கு மாறியதுடன் 2019 ஆம் ஆண்டில் மேல்-நடுத்தர வருமானம் என்ற நிலைக்கு தற்காலிகமாக மாறி அதன்பிறகு பின்னோக்கித்தள்ளப்பட்டது.

1960 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து, இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மெதுவான வளர்ச்சியின் காரணமாக கவர்ச்சி குறைந்ததாகவே காணப்பட்டது. பொருளாதாரம் அடிக்கடி IMF தலையீடுகளுக்கு வழிவகுத்து பேரண்டப் பொருளாதார உறுதியற்ற காலங்களை எதிர்கொண்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தாத ஒரே ஆசிய நாடாக இலங்கை ஆனதுடன் கொவிட்-19 உலகத் தொற்றுநோய் முன்னெப்போதும் இல்லாத இறையாண்மைக் கடன் நெருக்கடியைத் தூண்டியது.

தடையற்ற சந்தைக் கொள்கைகள் மற்றும் அரசு தலைமையிலான அபிவிருத்தி உத்திகள் ஆகியவற்றுக்கு இடையே நிலையான, ஒத்திசைவான தேசிய அபிவிருத்தி அணுகுமுறை இல்லாமல் இலங்கையில் உள்ள அரசியல் ஆட்சிகள் மாறி மாறி வருகின்றன. 1977 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சந்தை சார்ந்த மறுசீரமைப்புக்கள் நம்பிக்கைக்குரியதாக இருந்தாலும் முழுமையடையவில்லை. 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து அதிகரித்த இனக்கலவரம் பொருளாதார முன்னேற்றத்திற்கு மேலும் தடையாக இருந்தது. இவ்வகையான சவால்கள் இருந்தபோதிலும், 1960 முதல் 1977 ஆம் ஆண்டு வரையிலான 2.5% பொருளாதார அபிவிருத்தியுடன் ஒப்பிடும்போது மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து இரண்டு தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 4% என்ற விகிதத்தில் வளர்ந்தது. குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி விரிவாக்கப்பட்டதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடு முக்கிய பங்கு வகித்தது. இருப்பினும், இம்மறுசீரமைப்புக்கள் பொருளாதாரத்தை நிலைபேறான வளர்ச்சிப் பாதையில் வைத்துக்கொள்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை.

2009 ஆம் ஆண்டில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், முந்தைய தாராளமயக் கொள்கைகளிலிருந்து விலகி பாதுகாப்புவாத மற்றும் தலையீட்டுக் கொள்கைகள் உத்வேகமடைந்தன. இறக்குமதிக்கான கூடுதல் கட்டணங்கள் மற்றும் அரசியல் மயமாக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டு ஒப்புதல் செயல்முறைகளுடன் வர்த்தகக் கொள்கைகள் அதிக தலையீடுகளுக்கு உட்பட்டதாக மாறியது. “வெள்ளை யானைகள்” என்று கருதப்படும் பாரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் பெரும்பாலும் முன்னுரிமையளிக்கப்பட்டதுடன் அவை உள்நாட்டு கடன் மற்றும் பண அச்சிடுதல் ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டு பணவீக்கத்தை தூண்டியது. இது வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்தியை விட (உற்பத்தி மற்றும் விவசாயம்) வர்த்தகம் செய்ய முடியாத உற்பத்திக்கு சாதகமாக இருந்து ஒரு “வியாபாரத்திற்கு எதிரான சார்புக்கு” வழிவகுத்தது. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்தியின் பங்கு 2019 ஆம் ஆண்டளவில் 20% இக்கும் குறைவாக சுருங்கியதுடன் GDP இன் சதவீதமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சுமார் 30% இலிருந்து 15% ஆகக் குறைந்தது. இந்த ஏற்றத்தாழ்வு, பாரிய கடன் திரட்சியுடன் இணைந்து இறையாண்மைக் படுகடன் நெருக்கடிக்குப் பங்களித்தது.

## திறந்த உள்ளூர் சந்தைகள்

வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக பெரிய மற்றும் சிறிய தனியார் நிறுவனங்களைக் கொண்டு, உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்ட சமூக சந்தைப் பொருளாதாரமாக இலங்கையை மாற்றுவதற்கு எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இந்த மாற்றத்திற்கு இரண்டு முக்கிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன: வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மூலம் உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி மற்றும் தொழிலாளர் சந்தைகள் உட்பட உள்நாட்டு சந்தைகளைத் திறந்துவிடுதல். வினைத்திறனான சந்தைச் சமிக்ஞைகளை உறுதி செய்வது, தேசிய வளர்ச்சியில் முழு தனியார் துறை ஈடுபாட்டை செய்வது என்பனவாகும்.

தன்னிச்சையான விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் உரிமத் தேவைகள் போன்ற அரசாங்கத் தலையீடுகள் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் உற்பத்தியில் தனியார் துறையின் திறமையான செயல்பாட்டைத் தடுக்கின்றன. SJB மூலோபாயம் இந்தத் தலையீடுகளை படிப்படியாக அகற்றி சந்தைகள் தோல்வியடையும் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஆதரவு தேவைப்படும் பகுதிகளில் நேரடி அரசாங்க ஈடுபாட்டைக் கட்டுப்படுத்துவதை உள்ளடக்குகிறது.

கிராமப்புற வீதி வலையமைப்புகள், விநியோக-பெறுகை வலையமைப்புகளை மேம்படுத்துவதற்கான பொது-தனியார் முயற்சிகள், அரை-பழுதடையும் விவசாய உற்பத்திகளுக்கான காலநிலைக் கட்டுப்பாட்டு-சேமிப்பு வசதிகளை நிறுவுதல் மற்றும் டிஜிட்டல் முறையில் வழங்கப்படும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியன சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களை பரந்த தேசிய சந்தைகளுடன் இணைக்கும் ஏற்பாட்டுக் கட்டமைப்புகள் மூலம் மேம்படுத்தப்படும்.

விவசாயத் துறையில் நீண்டகால விலை ஆதரவுகள் மற்றும் உர மானியங்கள் போன்றவற்றை நிவர்த்தி செய்வது சந்தை சார்ந்த சீர்திருத்தங்களில் காணப்படும் சிக்கலான பிரச்சினையாகும். இந்த நேரடித் தலையீடுகளை பங்கீடு செய்து, விவசாய விரிவாக்க சேவைகள், நீர்ப்பாசன உள்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சிக்கு அரசு செலவினங்களை அதிக அளவில் திருப்பிவிடுவதே இலக்காகும் என நாங்கள் நம்புகிறோம். இருப்பினும், இந்த ஆதரவை விவசாயிகள் நம்பியிருப்பதைக் கருத்தில் கொண்டு, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், பெறுநர்களிடையே பலன்களை சமமாக விநியோகிக்கவும் நாங்கள் சீர்திருத்தங்களை கருத்தில் கொள்வோம்.

தாராளமான துண்டிப்பு ஊதிய விதிகள் உள்ளிட்ட இலங்கையின் தொழிலாளர் சட்டங்கள் உலகளாவிய போட்டித்தன்மைக்கான சீர்திருத்தத்தைக் கோருகிறது. தொழிலாளர் சந்தை நெகிழ்வுத்தன்மை மற்றும் உலகளாவிய வாய்ப்புகளுக்கு பதிலளிக்கும் தன்மையை அதிகரிப்பதை SJB நோக்கமாகக் கொண்டுள்ளது. எங்கள் முன்மொழியப்பட்ட தொழிலாளர் சந்தை சீர்திருத்தங்கள் பற்றிய கூடுதல் தகவல்கள் பிரிவு 8 இல் (காரணிச் சந்தை சீர்திருத்தங்கள்) உள்ளன.

## உற்பத்தித்திறன் வளர்ச்சி

குறைந்த அல்லது எதிர்மறையான உற்பத்தித்திறன் வளர்ச்சி - மூலதனம், உழைப்பு மற்றும் இடைநிலை உள்ளீடுகள் போன்ற உள்ளீடுகளின் வளர்ச்சியைக் கணக்கிட்டு உற்பத்தியின் வளர்ச்சி அளவிடப்படுகிறது - இலங்கைப் பொருளாதாரத்தில் ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக உள்ளது.[13] நீண்ட காலத்திற்கு, உற்பத்தித்திறன் வளர்ச்சி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய நிர்ணயமாகும் அதிகரிக்கும் உள்ளீடுகளை மட்டுமே நம்பியிருப்பது இயற்கையான வரையறைகளைக் கொண்டிருக்கும்.

குறிப்பிட்ட உற்பத்தித்திறன் இலக்கை அடைவதற்கான ஒரு குறித்த திட்டத்தை வடிவமைக்க இயலாது செய்யும் பொருளாதாரம் தழுவிய ஒரு நிகழ்வாக உற்பத்தித்திறன் வளர்ச்சி காணப்படுகிறது. உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளில் இருந்து அதிக இலாபத்தை தனியார் துறைக்கு அனுமதிக்கும் ஒரு சாதகமான சூழலை உருவாக்குவதே உற்பத்தித்திறன் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அரசாங்கத்திற்குக் காணப்படும் பங்காகும். SJB கொள்கை தொகுப்பு குறிப்பாக இதை எளிதாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத் தாராளமயமாக்கல் நிறுவனங்களை சர்வதேச போட்டிக்கு வெளிப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் உற்பத்தித்திறனை அதிகரித்து பரந்த உலகளாவிய சந்தைகளை அணுகுவதனூடாக அளவுத்திட்டச் சிக்கனங்களைசிறந்த முறையில் சுரண்ட அனுமதிப்பதுடன் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளில் உட்பொதிக்கப்பட்ட சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் உதவுகிறது. உள்நாட்டு உற்பத்தியில் நுழையும் வெளிநாட்டு நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பம், முகாமைத்துவ நடைமுறைகளை கொண்டுவருவதுடன் உலகளாவிய சந்தைகளை ஊடுருவி புதிய சந்தைப்படுத்தல் இணைப்புகளை உருவாக்குகின்றன.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு தாராளமயமாக்கல் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான இந்த இயற்கையான செயல்முறையை ஆதரிக்க, நமது வளர்ச்சி மூலோபாயத்தின் மையமாக மனித மூலதன மேம்பாட்டை நாங்கள் வலியுறுத்துவோம். தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்கள் அதேபோல தொழில்வாண்மை பயிற்சித் திட்டங்களை தொடங்குவதற்கு பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிதி மற்றும் நிறுவன ஆதரவை வழங்குதல் இதில் அடங்கும்.

---

[13] உற்பத்தித்திறனின் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் குறிகாட்டியானது "தொழிலாளர் உற்பத்தித்திறன்" ஆகும். இது ஒரு தொழிலாளிக்கு உற்பத்தி (பொதுவாக மதிப்பு சேர்க்கப்பட்டது) என அளவிடப்படுகிறது. இந்த அளவீட்டின் சிக்கல் என்னவென்றால், அளவிடப்பட்ட உற்பத்தித்திறனின் ஒரு பகுதியாக இது ஒரு தொழிலாளிக்கான மூலதனத்தை போலித்தனமாகப் காட்டுகிறது ("புல்டோசரைக் கொண்ட ஒரு மனிதன் ஒரு மண்வெட்டியைக் காட்டிலும் வேகமாக ஒரு பள்ளத்தைத் தோண்ட முடியும்"). இங்கே நாம் மொத்த காரணி உற்பத்தித்திறன் (TFP), அனைத்து (ஒருங்கிணைந்த) உள்ளீடுகளுக்கான உற்பத்தியின் வளர்ச்சியின் கருத்தைப் பயன்படுத்துகிறோம்.

## 6.1 வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் (FDI) கொள்கை

அதிகளவான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஏற்றுமதி உற்பத்தியை ஊக்கமிழக்கச்செய்வதன் மூலம் தன்னிறைவான வளர்ச்சியைத் தடுப்பதுடன் இறக்குமதிப் போட்டியிலிருந்து அதனைப் பாதுகாப்பதன் மூலம் இறக்குமதிப் போட்டி உற்பத்தியிலுள்ள உற்பத்தித்திறனையும் தடுக்கிறது. வினைத்திறனற்ற உள்நாட்டு உற்பத்திக்கான செலவை உள்நாட்டு நுகர்வோர் ஏற்க வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டுப்பாடுகளை படிப்படியாகக் குறைக்க எங்கள் அரசு உறுதிபூண்டுள்ளது.

முதலில், அளவு கட்டுப்பாடுகளை (QR) நியாயமான உயர் (WTO சீரான) கட்டணங்களுடன் மாற்றுவோம், பின்னர் கட்டணச் சமநிலை நிலைமை மேம்படுவதால் ஒரே மாதிரியான குறைந்த நிலைக்கு கட்டணங்களைக் குறைப்போம். ஏற்றுமதி உற்பத்திக்கான இறக்குமதி உள்ளீடுகளுக்கான வரியில்லா அணுகலை எளிதாக்க கவனமான இறக்குமதித் தீர்வை விலக்குத் திட்டங்களை (இப்போது பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் வரும் முதலீட்டு சபையின் (BOI) விதிகள் உட்பட) இறக்குமதித் தீர்வை ஆட்சியுடன் இணைப்பது அவசியமாகும். ஞசு களை கட்டணங்களால் மாற்றுவது இரண்டு முக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது: (m) கட்டண வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் அரசாங்க வரவுசெலவுத்திட்டடத்தில் பங்களிக்கிறது (QR களின் கீழ், ஒதுக்கீடு வாடகை இறக்குமதியாளர்களுக்குச் செல்கிறது) மற்றும் (M) இது இறக்குமதி ஒதுக்கீட்டாளர்களின் (அடிப்படையில் நண்பர்களான) நேர்மையற்ற நடைமுறைகளைத் தடுக்கிறது. பெரும்பாலான (அனைத்தும் இல்லாவிட்டாலும்) குறிப்பிட்ட இறக்குமதி வரிகளை (சிறப்பு வரிகள், அதாவது ஒரு யூனிட்டுக்கு வசூலிக்கப்படும்) பெறுமான வரிகளுடன் மாற்றீடு செய்வது முக்கியம். நுகர்வோர் பொருட்கள் மீதான பலவிதமான தீர்வைகள் ஏழைகளுக்கு எதிரானது என்பதுடன் தேவையற்றமுறையில் குறைந்த தரமான உள்நாட்டு உற்பத்திகளையும் பாதுகாக்கிறது.

2022 ஆம் ஆண்டில், ஏற்றுமதிப் பெருகைகளை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட கடுமையான விதிமுறைகள் கட்டாயமான பணம் அனுப்புதல் மற்றும் 180 நாட்களுக்குள் மாற்றுதல் மற்றும் வாராந்தம் இலங்கை மத்திய வங்கிக்கு 25% அந்நிய செலாவணி விற்பனை ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்த விதிகள் மாற்று விகித இஸ்திரத்தன்மையை சீர்குலைத்து ஏற்றுமதியை திருப்பி அனுப்புவதை ஊக்கப்படுத்தியதுடன் வங்கி பணப்புழக்கத்தை குறைத்தது. இந்த விதிமுறைகளை தளர்த்தியமை அந்நியச் செலாவணி உட்பாய்ச்சலை அதிகரித்து மாற்று விகிதத்தை நிலைப்படுத்தியுள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) மேம்படுத்துவதற்கான உயர்மட்ட அரசியல் முயற்சியுடன் வர்த்தகக் கொள்கை சீர்திருத்தங்களை எங்கள் அரசாங்கம் குறைநிரப்பு செய்யும். 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட தாராளமயமாக்கல் சீர்திருத்தங்களின் கீழ் இலங்கையின் அனுபவம், குறிப்பாக 1990 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இரண்டாம் அலை சீர்திருத்தங்கள், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்மயமாக்கலின் செயல்பாட்டில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு தாராளமயமாக்கலின் நிரப்புத்தன்மையை தெளிவாக நிரூபித்துள்ளது.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **பொருளாதார ஆணைக்குழு (EC) மற்றும் ஊக்குவிப்பு மறுசீரமைப்பு:** இலங்கையின் உற்பத்தித் துறையை உலகளாவிய உற்பத்தி வலையமைப்புகளுடன் இணைக்க, வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்காக EC அதன் உண்மையான “வன்-இஸ்டொப் - சொப்“ நிலைக்கு இப்போது BOI ஐ மீட்டெடுப்பது இன்றியமையாததாகும். இந்தச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, ஏற்றுமதி சார்ந்த முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் நிதிச் சலுகைகளை அகற்றுவதற்குப் பதிலாக, பங்கீடு தொடர்பாக பகுத்தறிவு ரீதியாகச் செயற்படுவது அவசியம். அவை கண்டிப்பாக நேரகாலத்தோடுடனும் வெளிப்படைத்தன்மையுடன் செய்யப்படாவிட்டால் FDI இனை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்புகளை வழங்குவதன் நோக்கம் நிறைவேறாதுபோகும். | S M |
| **EC இல் முதலீட்டு வசதி மையத்தை (IFC) மீள்நிறுவுதல்:** இலங்கையின் ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலோபாயங்களின் செயல்திறனை மேம்படுத்துதல். முதலீட்டு அனுமதி செயல்முறையை சீரமைத்து, வினைத்திறனை மேம்படுத்தி மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தி நிறுவனங்களுக்கிடையிலான பல்வேறு சேவைகளை ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைக்கும் “வன்-இஸ்டொப் - சொப்“ ஆக இந்த மையம் செயல்படும். | S M |
| **கட்டணப் பகுத்தறிவாக்கல்:** கட்டணக் கட்டமைப்புகளை பகுத்தறிவு செய்ய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் இரண்டினதும்விமர்சன மதிப்பாய்வை மேற்கொள்ளவும். உலகளாவியப் போட்டித்தன்மையுடன் இருக்க வேண்டிய தேவையுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை சமநிலைப்படுத்தும் வர்த்தக ஆட்சியை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இறக்குமதி வரிகளுக்கான பாதை வரைபடம் பிரிவு 4 (வருவாய் ஒருங்கிணைப்பு) இல் கொடுக்கப்பட்டுள்ளது. | S |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **தேசிய ஏற்றுமதி மூலோபாய (NES) இற்றைப்படுத்தல்:** உலகளாவிய சந்தைத் தரங்களைச் சந்திக்க NES ஐ இற்றைப்படுத்தி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் போன்ற வளர்ச்சிக்குத் தயாராகும் துறைகளைச் சேர்க்கவும். இந்த துறைகளை பரந்த பொருளாதார கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைத்து, அவை சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இணைவதை உறுதிசெய்து, பொருளாதார பல்வகைப்படுத்தலுக்கு திறம்பட பங்களிப்பதை இது உள்ளடக்குகிறது. | S M |
| **ஒப்பந்தப் பேச்சுவார்த்தை மற்றும் மறுபேச்சுவார்த்தை:** முதலீட்டு சூழலை மேம்படுத்த, சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகவும், குறிப்பிடத்தக்க வகையில் அதிக அளவு FDI இனை ஈர்க்கக்கூடிய போட்டித்தன்மை வாய்ந்த, வெளிப்படையான மற்றும் பாதுகாப்பான ஒழுங்குமுறை சூழலை உறுதிசெய்யவும் முதலீடு மற்றும் வரி ஒப்பந்தங்களை மதிப்பாய்வு செய்யவும், பேச்சுவார்த்தை நடத்தவும், மறுபரிசீலனை செய்யவும் ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்வோம். | S M |
| **பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகள் (MRA கள்) மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTA கள்):** சந்தை அணுகல் மற்றும் ஏற்றுமதி கவர்ச்சியை மேம்படுத்தும் வகையில் இலங்கை தரநிலைகள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்த பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகளைப் பயன்படுத்துங்கள். இது இலகுவாக அடையக்கூடியது என்பதுடன் மேலும் இது பல தசாப்தங்களாக காலந் தாழ்த்துவதை நினைத்துப் பார்க்க முடியாதது. நாங்கள் இந்தியாவிலிருந்து தொடங்கி, எங்களிடம் ஏற்கனவே சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைக் கொண்ட ஏனைய நாடுகளுக்குச் செல்வோம். நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தும் ஒவ்வொரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் இலங்கைக்கான நன்மைகளை அதிகப்படுத்துவதற்காக செய்யப்படுவதை உறுதி செய்வோம். | S M |
| **தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழு (NTFC):** வர்த்தக வசதி (TF) என்பது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகளை எளிதாக்குதல், நெறிப்படுத்துதல் மற்றும் தன்னியக்கமானதாக மாற்றுதல் மற்றும் அவற்றை இன்னும் வெளிப்படையானதாக மாற்றுதல். நமது ஏற்றுமதியாளர்களின் போட்டித்தன்மையை மேம்படுத்த செயல்முறைகளின் செலவு மற்றும் நேரத்தைக் குறைக்க நாம் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். மிக உயர்மட்ட அரசியல் அதிகாரத்தின் தலைமையில் NTFC மூலம் TF மீதான மிகத் தாமதமாக செயல்படும் உலக வர்த்தக அமைப்பின் (WTO) உறுதிமொழிகளுக்கு எமது அரசாங்கம் முன்னுரிமை அளித்து அதனை விரைவுபடுத்தும். | S M |
| **தேசிய ஒற்றை ஜன்னல் (National Single Window) (NSW):** வர்த்தகக் கொள்கை சீர்திருத்தங்களின் மையமானது வர்த்தகம் தொடர்பான பல்வேறு நடைமுறைகளை ஒரே இலத்திரனியல் தளத்துக்கு ஒருங்கிணைப்பதாகும் ஒரு தேசிய ஒற்றை ஜன்னல் (NSW). வர்த்தக நோக்கத்திற்காக அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் தரவைச் சமர்ப்பிக்க NSW ஐ நிறுவி பராமரிப்பது WTO இன் கீழ் ஒரு சட்டரீதியான கடமையாகும் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் கப்பல் மாற்றி ஏற்றல். இலங்கை TF உடன்படிக்கையை 2016 ஆம் ஆண்டில் அங்கீகரித்ததுடன் NSW ஐ நடைமுறைப்படுத்துவது 2017 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் முடிக்கப்பட இருந்தது. ஆனால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திகதி, பல்வேறு அரசாங்க மூலங்களின் பிரகாரம், தங்களை தடுமாற்றமடையச்செய்து அல்லது அறியாமல், 2030 ஆம் ஆண்டுக்கு பிற்போடப்பட்டுள்ளது. இதைத் தடுப்பவர்களுக்கு நன்கு தெரிந்த காரணங்களுக்காக இந்த இலத்திரனியல் வர்த்தக நுழைவாயிலை முடிக்க அரசியல் விருப்பம் இல்லை என்பது வெளிப்படையானது. எங்கள் அரசாங்கம் NSW க்கு முன்னுரிமை அளிக்க சொந்த அக்கறைகளுடன் காணப்படும் எதிர்ப்புகளையும் ஊக்கமற்ற உயரதிகாரிகளுடைய நடத்தைகளையும் முறியடிக்கும். வரையான எண்ணிக்கையிலான நிறுவனங்களுடன் சரி நடைமுறைப்படுத்தி NSW இன் வெற்றியை உறுதி செய்வதற்கு PDI மிகவும் பயனுள்ளதாக இருக்கும். | S M |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **வர்த்தகச் செலவு திருத்தங்கள்:** ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரக் கட்டமைப்பை வளர்ப்பதற்கு முக்கியமான வேலைவாய்ப்பின்மை அல்லது வளங்களின் மறு ஒதுக்கீடு போன்ற சாத்தியமான சமூகப் பொருளாதார தாக்கங்களைத் தணிக்க வர்த்தகத் திருத்தங்கள் வசதிகளை செயல்படுத்துவது மிகவும் முக்கியமானது. இந்த வசதிகள் தனியார் மற்றும் பொதுத்துறை திருத்தச் செலவுகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். | M |
| **மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டம்:** நியாயமற்ற வெளிநாட்டுப் போட்டியிலிருந்து இலங்கைக் கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை நாங்கள் கொண்டு வருவோம். ஏற்றுமதியை ஊக்குவிப்பது மற்றும் வர்த்தகத்திற்குத் திறந்திருக்கும் தேசிய பொருளாதார மாதிரியை மறுசீரமைப்பது சாத்தியமில்லை என்றால், உள்ளூர் வணிகங்களை சமமாக செயற்படுவதை உறுதிசெய்து நியாயமான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிக்க முடியாது. | M |
| **புலமைச் சொத்து (IP) முகாமைத்துவம் மற்றும் மெட்ரிட் நெறிமுறை:** உள்நாட்டு வர்த்தகக் குறியீடுப் பதிவை நெறிப்படுத்தி இலங்கையின் மெட்ரிட் நெறிமுறையின் அணுகலை எளிதாக்குதல். இந்த நடவடிக்கைகள் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் (NIPO) வினைத்திறனை அதிகரிப்பதையும், சர்வதேச வர்த்தகக் குறியீட்டு அமைப்பில் இலங்கையின் ஒருங்கிணைப்பை விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கை சார்ந்த சீர்திருத்தங்கள் செய்யப்படாவிட்டால், புதிதாக வளரும் நிறுவனங்கள் (startups) மற்றும் SME அல்லது பெரிய நிறுவனங்கள் சர்வதேச சந்தைகளுக்கு விரிவடைவது சாத்தியமற்றுவிடும். | M |
| **ஏற்றுமதி செயன்முறை வலய உள்கட்டமைப்பு நவீனமயமாக்கல்:** தொழில்துறை பூங்காக்கள் (IP) மற்றும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை (EPZ) நிறுவுதல் மற்றும் தரமுயர்த்துதல். 1978 ஆம் ஆண்டு கட்டுநாயக்காவில் முதல் EPZ இஸ்தாபிக்கப்பட்ட பின்னர், கடந்த 46 வருடங்களில் 15 EPZ கள் மாத்திரமே சேர்க்கப்பட்டுள்ளன. ஒப்பீட்டு நோக்கங்களுக்காக: பிலிப்பைன்ஸில் 460 EPZ கள் உள்ளன, வியட்நாம் 410 மற்றும் இந்தியாவில் 615 மற்றும் 92%, 89% மற்றும் 74% ஆகியவை தனியாருக்குச் சொந்தமானவை, அதேசமயம் இலங்கையில் 1 EPZ (MAS Fabric Park) மட்டுமே அரசாங்கத்திடமிருந்து நீண்ட குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.<br><br>EPZ உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதில் இலங்கை பல தவறுகளை செய்துள்ளது. EPZகளின் அளவு மற்றும் தரம் ஆகிய இரண்டிலும் அடுத்தடுத்து வரும் அரசாங்கங்கள் குறைவாக முதலீடு செய்தன் EPZகளை உருவாக்குவதற்கும் முகாமைசெய்வதற்கும் அவர்கள் பிரத்தியேகமாக பொது வளங்களை நம்பியிருந்தனர், மேலும் அவற்றின் வினைத்திறனான முகாமைத்துவத்துக்காக பொருத்தமான ஒழுங்குமுறையை அவர்கள் நிறுவவில்லை. ZonesSL எனப்படும் ஒரு புதிய நிறுவனத்தின் கீழ் தனியார் அல்லது PPP வலயங்களாக EPZ களுக்கான புதிய கட்டமைப்பை அமைக்கும் வகையில் பொருளாதார நிலைமாற்றச் சட்டத்தை அரசாங்கம் சமீபத்தில் நிறைவேற்றியது. இந்த நடவடிக்கை பொதுவாக நேர்மறையானதாக இருந்தாலும், எங்கள் EPZ கள் பிராந்தியத்தில் போட்டியிடும் வகையில் சட்டத்தை மேலும் மேம்படுத்த வேண்டும். எங்கள் அணுகுமுறை மூன்று விதமாக இருக்கும். ஒன்று EPZ களை ஆட்சிசெய்வதற்கான வேறான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய சட்டத்தை இயற்றுதல் இரண்டாவதாக, முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குறைந்தபட்ச தரநிலைகள் மற்றும் குறைந்தபட்ச அளவுகோல்களை இணைப்பதன் மூலம் EPZ களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் மூன்றாவது, ஒழுங்குமுறை சுதந்திரத்தை உறுதி செய்வதன் மூலம் அக்கறைகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தடுத்தல்.[14]<br><br>இந்தச் சீர்திருத்தங்கள், விரிவான வசதிகள் மற்றும் ஆதரவு முறைமைகளை (மேம்படுத்தப்பட்ட கழிவுகள் மற்றும் உக்கலடையச் செய்தல் முகாமைத்துவம் மற்றும் ஏற்பாட்டியல் சேவைகள் போன்றவை) வழங்குவதன் மூலம் உயர் தொழில்நுட்பம் மற்றும் உயர் மதிப்புக் கூட்டப்பட்ட தொழில்களை ஈர்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் EPZ களை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும். | M |

[14] Verite Research. பொருளாதார மாற்றச் சட்டமூலத்திற்கு அப்பால் நோக்குதல்: உயர்தர முதலீட்டு வலயங்களின் விநியோகத்தை அதிகரிக்க இலங்கை மூன்று படிகளை எடுக்கலாம். ஜுலை 2024

## 6.2 விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைகள்: பல பரிமாண சீர்திருத்தங்கள்

### டிஜிட்டல் மயமாக்கல் மூலம் விவசாயத்தை நவீனமயப்படுத்துதல்

சனத்தொகையில் 26% இக்கும் அதிகமானோரை வேலையில் அமர்த்துவதுடன் கிராமப்புற மக்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு ஆதரவளிக்கும் விவசாயம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமானது. இருப்பினும், கடந்த நான்கு தசாப்தங்களில் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் சுமார் 1% மட்டுமே காணப்படும் விவசாய செயலாற்றுகை ஏமாற்றமளிப்பதுடன் இது உற்பத்தி மற்றும் சேவைகளுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைந்த உற்பத்தித்திறனாகக் காணப்படுகின்றது. இதன் விளைவாக கிராமப்புற விவசாயப் பகுதிகளில் வறுமை பெரிதும் அதிகரித்துள்ளது.

பல நிலைகளில் உள்ள சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். தொன்மையான சட்டங்களின் நவீனமயமாக்கல் தேவைபடுகின்றது. சீர்திருத்தங்கள் பிம் சவிய திட்டத்தின் மூலம் விவசாயச் சந்தைகளை அகற்றி புதுப்பிக்கப்பட்ட நீர்ப்பாசன தொட்டிகள் மூலம் சமமான நீர் அணுகலை வழங்கி மேலும் நிதி மற்றும் காப்பீட்டுக்கான அணுகலை வழங்கும். தனிப்பட்ட விவசாயிக்கு, என்ன, எவ்வளவு, எப்போது உற்பத்தி செய்ய வேண்டும் என்ற தகவலைப் பெறுவது முதல், உள்ளீடுகளுக்கு நிதியளிப்பது மற்றும் பயிரிடல் சுழற்சியை முகாமைசெய்தல் வரையிலான முழு மதிப்புச் சங்கிலி தொடர்பாகவும் மேம்பாடு தேவைப்படுகின்றது. அதன்பிறகு, சேமிப்பு முதல் விற்பனைக்கான ஏற்பாட்டியல் வரை அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

கிராமப்புற வறுமையைக் குறைப்பதற்கும், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், துறை வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் விரைவான, தொழில்நுட்பம் சார்ந்த விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்துவோம். இதில் நெல், காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களில் - நடுகை முதல் விற்பனை வரை, பாதுகாக்கப்பட்ட விவசாயம், சொட்டு நீர் பாசனம் மற்றும் AI-உதவியளிக்கப்பட்ட நீரியல் வளர்ப்பு விவசாயம் போன்றவையும் அடங்கும்.

இந்த நவீனமயமாக்கல் திட்டத்தின் மையமானது கொவி ஞான சேவா திட்டம் (GGC, அதாவது "விவசாயி அறிவு சேவை") ஆகும் என்பதுடன் விவசாயத் தகவல் மற்றும் தற்போதைய தற்காலிக முறைகளை மற்றி பரிவர்த்தனைசெய்து மாற்றுவதற்கான விரிவான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பாக மாறும். GGS விவசாயிகளுக்கிடையிலான தகவல் சமச்சீரற்ற தன்மையை நீக்குவது மட்டுமல்லாமல் அதன் மூலம் குறிப்பிட்ட இட மற்றும் முன்னோக்கிய விலைகள் மற்றும் உற்பத்திக்கான வழங்கல் மற்றும் தேவை, வானிலை முறைகள், மண் நிலைமைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் மற்றும் வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் ஏற்பாட்டியலுக்கான இணைப்புகள் பற்றிய முக்கியமான தரவுகளை வழங்குகிறது. GGS இக்கான அணுகல் எங்கும் செல்லிடத்தொலைபேசியில் காணப்படும். GGS டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பு உற்பத்தியாளர்கள் எதிர்கால அறுவடை ஒப்பந்தங்களை விற்கவும், உத்தரவாத விலைகள் மூலம் நிதி இஸ்திரத்தன்மையை வழங்கவும் அனுமதியளிக்கும். ப்லொக் செயினால் (Block Chain) இயக்கப்படும் இஸ்மார்ட் ஒப்பந்தங்கள் கடன் சுறாக்களிடமிருந்து விவசாயிகள் சுதந்திரமாக இருக்க உதவிசெய்து, கொடுக்கல்வாங்கல்களை தன்னியக்கப்படுத்துவதுடன் மோசடி அபாயங்களையும் குறைக்கும். இந்த தகவல் முறைமை காலநிலை கட்டுப்பாட்டில் உள்ள சேமிப்புக் களஞ்சியங்கள் மற்றும் போக்குவரத்து தேர்வுகளின் DPI அடிப்படையிலான வலையமைப்புகளுடன் இணைக்கும். தனியார் துறையுடன் இணைந்து, இலாபகரமான ஏற்றுமதிச் சந்தை அணுகளை வசதிப்படுத்தி அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும், உற்பத்தியாளர்களின் இலாபங்களை அதிகரிப்பதற்கும், சில்லறைச் செலவுகளைக் குறைப்பதற்கும் இந்த வலையமைப்பை உருவாக்குவோம். முழு செயல்முறையும் DPI இல் இயங்கும். நாடு தழுவிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டம் பங்குதாரர்களுக்குத் தேவையான திறன்களை வழங்கும்.

#### கொவி ஞன சேவா எவ்வாறு செயல்படும்?

மிகவும் பொதுவான தொடக்க அம்சம் என்னவெனில் பல்வேறு சந்தைகளில் நேரடி விலைகளை சரிபார்த்தல் வேண்டும். மாத்தளையைச் சேர்ந்த விவசாயி ஒருவருக்கு தனது இஸ்மார்ட் தொலைபேசியைப் பயன்படுத்தி தம்புள்ளை சந்தையில் தற்போதைய வெங்காய விலையை சரிபார்த்து, அதனைக் கொண்டு செல்வதா அல்லது உள்ளூரில் விற்பனை செய்வதா என்பதைத் தீர்மானிக்க உதவுகிறது. GGS விவசாயிகளை நீர்ப்பாசன அட்டவணைகள், விதை விற்பனையாளர்கள், உர முகவர்கள், வானிலை அறிவிப்புகள் ஆகியவற்றுடன் இணைக்கும். இது விவசாயிகளுக்கு எதிர்காலத் தேவையை ஆய்வு செய்து, பல்பொருள் அங்காடிக் கொள்வனவாளர்களுடன் விற்பனை ஒப்பந்தங்களை (FSA) பிற்காலத்தில் மேற்றக்கொள்ள அனுமதிக்கும். இந்த FSA கள், இடைத்தரகர்களின் பிடியில் இருந்து விவசாயிகளை விடுவித்து, வங்கிகளிடமிருந்து தொழிற்படு மூலதனக் கடன்களைப் பெறுவதற்கு பிணையமாகப் பயன்படுத்தப்படலாம். பயிர்க் காப்பீட்டிற்கான கட்டணத்தை காப்பீட்டு நிறுவனங்கள் நிர்ணயம் செய்வதை FSA சாத்தியமாக்கும். விவசாயிகள் பாதுகாப்பான முறையில் பொதி செய்யப்பட்ட கொள்கலன்களில் உள்ள விளைபொருட்களை காலநிலை கட்டுப்பாட்டில் உள்ள களஞ்சியங்களுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டியல் ஒப்பந்தங்களையும் கண்டுபிடித்து அதிலும் ஈடுபடலாம். GGS இன் பயன்பாடுகள் கற்பனையால் மட்டுமே வரையறுக்கப்படும்.

மொத்தத்தில், இலங்கையின் விவசாய, மீன்பிடி மற்றும் கால்நடைத் துறைகளின் முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப மாற்றம் பங்குதாரர்களுக்கு அதிக வருமானத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் நுகர்வோருக்கு புதிய, உயர்தர உணவுக்கான அணுகலை முன்னேற்றுவதுடன் கிராமப்புற சமூகங்களின் பொருளாதார செழிப்பை மேம்படுத்துகிறது..

விவசாயம் பற்றிய விரிவான கலந்துரையாடல் ஒரு தனி விவசாயக் கொள்கை ஆவணத்தில் வழங்கப்படும். அரசிறை ஆதரவின் பக்கத்திலிருந்து, விவசாய நவீனமயமாக்கலுக்கான முதலீட்டு நிவாரணத்தை நாங்கள் வழங்குவதுடன் விவசாய இயந்திரங்கள் மீதான VAT ஐ திருத்தியமைப்போம். சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு ஒரு முக்கிய ஆதரவானது, சோதனை செய்யப்பட்ட அடிப்படையில் QR அடிப்படையிலான பணப் பரிமாற்ற வழிமுறையின் மூலம் எரிபொருள் மற்றும் உர மானியங்களை வழங்குவதாகும்.

### பிரபாஷ்வர காலநிலைக் கட்டுப்பாட்டு களஞ்சியப்படுத்தல் தீர்வு, தம்புள்ளை

இலங்கையின் விவசாயத் துறை அதிக அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளையும் (40% என மதிப்பிடப்பட்டுள்ளது) மற்றும் விலை ஏற்ற இறக்கத்தையும் எதிர்கொள்கிறது. இதை நிவர்த்தி செய்ய, அரசாங்கம் தம்புள்ளையில் (2019 ஆம் ஆண்டில்) 5,000 மெட்ரிக் டொன் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தும் களஞ்சியசாலையை கட்டத் தொடங்கியது. பிரபாஷ்வர என்று பெயரிடப்பட்ட இது, அரசு, தனியார் துறை, விவசாய சமூகம் மற்றும் இந்திய அரசு (இது ஆரம்ப நிதியுதவி வழங்கியது) ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பாகும் என்பதுடன் மேலும் இது நவீன காலநிலைக் கட்டுப்பாட்டு விவசாய ஏற்பாட்டியலின் வினைத்திறனுக்கான கருத்துருவாக இருந்தது. அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், சந்தை அடைவினை விரிவுபடுத்துதல், தனியார் முதலீட்டைத் தூண்டுதல் மற்றும் நிலைபேறான நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் விவசாய விநியோகச் சங்கிலியில் புரட்சியை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக இது காணப்பட்டதுமுந்தைய அரசாங்கம் 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரை கட்டுமானப் பணிகளை நிறுத்திய போதிலும், 2022 ஆம் ஆண்டு முதல் புதிய அரசாங்கம் திட்டத்தை தொடர்ந்து புறக்கணித்தாலும், எதிர்க்கட்சியிலிருந்து எங்கள் முயற்சிகள் கிட்டத்தட்ட அதை நிறைவு செய்துள்ளன. களஞ்சியத்தை முகாமைசெய்வதற்கு தொழிற்பாட்டாளர்களை அழைப்பது மற்றும் விவசாயிகள் பிரபா'வரவில் களஞ்சியத்துக்காக (GAP) இணங்கிய நல்ல விவசாய நடைமுறைகளில் ஈடுபடுவதை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி பிரச்சாரத்தை தொடங்குவது அடுத்த படிகளில் அடங்கும்.

### மீன்பிடியில் முதலீடுசெய்தல்

இலங்கையின் மீன்பிடித் தொழில் விலை ஏற்ற இறக்கங்கள், சீரற்ற தரம் மற்றும் விநியோகச் சங்கிலிச் சிரமங்கள் போன்ற சவால்களை எதிர்கொள்கிற போதிலும் குறிப்பிடத்தக்க ஆற்றலைக் கொண்டுள்ளது. துல்லியமான, உள்ளூர் மயமாக்கப்பட்ட வானிலை முன்னறிவிப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட Dialog DEWN செயலியின் மூலம் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது மற்றும் மீன் இடம்பெயர்வு மற்றும் சந்தை விலைகள் குறித்த அதேநேரத் தரவுகளுக்கு GGS திட்டத்தை விரிவுபடுத்துவது ஆகியவை எங்கள் மூலோபாயத்தில் அடங்கும். உயர்தர மீன்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை அடைவதை உறுதி செய்வதற்காக, கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கான நிலையான நடைமுறைகள் மற்றும் பொறுப்பான மீன்பிடி முறைகளை ஊக்குவிப்பதற்காக குளிர் சங்கிலி உள்கட்டமைப்பில் தனியார் நிறுவன முதலீடுகளுக்கு நாங்கள் அழைப்புவிடுப்போம்.

### கால்நடைத் துறையைப் புதுப்பித்தல்

உணவுப் பாதுகாப்பு, கிராமப்புற அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் நிலைபெறுத்தன்மை ஆகியவற்றுக்கு கால்நடைத் துறை மிக முக்கியமானது. GGS திட்டத்தில் இந்தத் துறையை ஒருங்கிணைப்பதன் மூலம் 600,000 சிறு விவசாயிகளுக்கு விலங்குகளின் ஆரோக்கியம், சிறந்த நடைமுறைகள் மற்றும் சந்தை விலைகள், உற்பத்தித்திறன் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை அதேநேரத் தகவல்களுக்கான அணுகலை வழங்கும். நிலைபேறான கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பு, தீவன உற்பத்தி மற்றும் விநியோக மேம்பாடு மற்றும் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவின் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத அதிகரிப்பு ஆகியவற்றை இலக்குவைக்கப்பட்ட கொள்கைகள் ஊக்குவிக்கும்.

### அகில இலங்கை சக்தி அரிசிக் கூட்டுறவு, பொலன்னறுவை

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான (SME) அரிசி ஆலைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் விவசாயிகள் மற்றும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் 2019 மார்ச் மாதத்தில் அரசாங்கம் "சக்தி அரிசி" ஐ அறிமுகப்படுத்தியது. சுமார் 300 SME ஆலை உரிமையாளர்களின் கூட்டுறவாகக் கட்டமைக்கப்பட்ட இந்த முயற்சியானது ரூ. 1 பில்லியன் தொழிற்பாட்டு மூலதன நிதியை வழங்கியதுடன் இது ஆலை உரிமையாளர்களுக்கு போட்டி விலையில் நெல்லை வாங்கவும், நூற்றுக்கணக்கான SME அரிசி ஆலைகளில் அரைக்கவும் மற்றும் மலிவு விலையில் அரிசியை விற்கவும் உதவியது. இந்த முயற்சியால் மூடப்பட்ட SME ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டதுடன் அரிசியின் தரம் மேம்பட்டு விலை உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டு பெரிய ஆலைகள் அவற்றின் விலைகளைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதில் வெற்றி இருந்தபோதிலும், இத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது ஆனால் 2022 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு மீண்டும் தொடங்கப்படவில்லை. எங்கள் அரசாங்கம் சக்தி மாதிரியை மீண்டும் அறிமுகப்படுத்தி, முடிந்தவரை பல ஆலை உரிமையாளர்களை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தும்.

## அரிசி ஆலைகளின் சிலரின் ஆதிக்கத்தை உடைத்தல்

லங்கையர்களின் பிரதான உணவான அரிசியின் விலை உயர்விற்கான முக்கிய காரணங்களில் ஒன்று அரிசி அரைக்கும் தொழிலில் போட்டியின்மையாகும். அரிசிக்கான சந்தையைக் கையாளும் ஒரு சில ஆலை உரிமையாளர்களால் சந்தை கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த "மாபியா" உடைக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்குச் சொந்தமான நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக சந்தையில் தலையிட அரசாங்கம் பல வருடங்களாக முயற்சித்து வந்த போதிலும் ஊழல், அரசியல்மயப்படுத்தல் மற்றும் ஆர்வமின்மை காரணமாக மோசமாகத் தோல்வியடைந்தது. சிலரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான SME கூட்டுறவை உருவாக்குவதிலேயே எங்கள் தீர்வு தங்கியிருக்கிறது. இந்தச் சந்தையில் ஒரு நிலையான போட்டியை உறுதி செய்வதற்காக சக்தி அரிசிக் கூட்டுறவுத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம் சுழலும் தொழிட்படு மூலதன வசதி மூலம் தேவையான ஆரம்ப நிதி உதவியை எங்கள் அரசாங்கம் வழங்கும்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **ஐகாணிகளுக்கான அணுகலை அதிகரித்தல்:**<br>பிம் சவிய திட்டத்தை விரைவுபடுத்துதல் அல்லது பாதுகாப்பான நிலத்தின் உறுதி மற்றும் உரிமையினை வழங்குவதற்கான மாற்றுவழியுடன் அதனை மாற்றீடு செய்தல். இது ஒரு விரிவான மற்றும் ஆலோசனை செயல்முறையின் அடிப்படையில் நில பயன்பாட்டுத் திட்டத்தால் பிரிக்கப்படும் மொத்த நிலத் தரவுத்தளமாக இது பின்னர் மாறும். இது விவசாயிகள் தங்கள் நிலத்தைப் பற்றித் தீர்மானமெடுக்கும் சுயாட்சியைப் பெறவும் நிதி மூலங்களை சுதந்திரமாக அணுகவும் உதவும்.<br><br>தற்போதுள்ள சட்டத்தை மீளாய்வு செய்து அரசுக்குச் சொந்தமான மிகை நிலங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் மேலும் தனியார் நில உரிமையை அறிமுகப்படுத்துதல். இலவச உரிமை உறுதியை வழங்க தற்போதைய உறுமய திட்டத்தைத் தொடருதலும் விரிவுபடுத்துதலும். | M |
| **தாராளமயமாக்கல்:** PPP களை நிறுவுதல், FDI ஐ ஊக்குவிப்பதுடன் பன்னாட்டு ஈடுபாட்டுடன் ஒத்துழைக்க விவசாயிகளுக்கு நிதியுதவிக்கான அணுகலை உறுதி செய்தல், உலகம் முழுவதும் சந்தை வழிகளைத் திறந்து, நமது விவசாயிகளை சர்வதேச தரத்திற்கும் ஏற்றுமதிக்கும் இயலச்செய்தல். | M |
| **போட்டித்தன்மை:** போட்டித்தன்மையை மேம்படுத்த ஒழுங்குவிதிகளைத் திருத்துதல் (உதாரணம், நடவுப் பொருள் மற்றும் விதை இறக்குமதியை தாராளமாக்குதல், ஏற்றுமதியை தாராளமயமாக்க உணவுச் சட்டம் மற்றும் மீன்பிடிச் சட்டத்தில் திருத்தம் செய்தல்). | M |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **நவீனமயமாக்கல்:** விளைச்சலை மேம்படுத்தவும், அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைக்கவும், விநியோகத் தரத்தை மேம்படுத்தவும் நவீன தொழில் நுட்பங்களைத் தழுவுவதை ஊக்குவித்தல். | M |
| **பெறுமதி மேம்பாடு:** அதிக மதிப்புள்ள பயிர்கள், கால்நடைகள் மற்றும் மீன்பிடிப் பொருட்கள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட தேர்வுக்கான மாற்றலை ஊக்குவித்தல் (உதாரணம் பதப்படுத்தல், உலர்த்துதல், சேதன உற்பத்தி). | M |
| **பெருந்தோட்டச் சீர்திருத்தங்கள்:** பெருந்தோட்டத் திறனை மேம்படுத்துதல், சிறு உடமையாளர்களுக்கு ஆதரவளித்தல், தொழிலாளர் நிலைமைகளை மேம்படுத்துதல், தோட்டத் தொழிலாளர்களிடையே வீட்டு உரிமையை அதிகரித்தல், மேலும் சமமான மாதிரியின் கீழ் பிராந்திய தோட்டக் கம்பனிகளை விலக்குவதற்கு தேசிய PPE திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். | L |
| **GGS திட்டத்தை நாடு தழுவிய அளவில் செயல்படுத்துதல்:** DPI உடன் ஒருங்கிணைக்கப்படும் இந்த தளம், என்ன, எவ்வளவு, எப்போது பயிரிட வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுப்பது முதல் அறுவடை செய்வது முதல் சேமித்து வைப்பது மற்றும் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இறுதிக் கொள்வனவாளர்களுக்கு விளைபொருட்களை விற்பனை செய்வது வரை முழு விவசாயச் சூழலிலும் முற்றிலும் புரட்சியை ஏற்படுத்தும் என்று நாங்கள் கருதுகிறோம். சந்தை நிர்ணயிக்கப்பட்ட கடன் உத்தரவாத திட்டங்கள், பயிர் காப்பீட்டுத் திட்டங்கள், நிதி மற்றும் சட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாட்டியல் ஆதரவுக்கான தளமாகவும் GGS மாறும். | S M |
| **சிறப்பு விவசாயக் கூட்டுறவு:**<br>நாடு தழுவிய சக்தி அரிசி கூட்டுறவு திட்டத்தை மீண்டும் தொடங்குதல். 2019 ஆம் ஆண்டில் திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு, கற்றுக்கொண்ட பாடங்களை உள்ளடக்கிய திட்டத்தை நாங்கள் ஒழுங்கமைப்போம்.<br>பெறுமதி செயலை ஊக்குவிக்கும் அதேவேளை சந்தை அணுகலை வலுப்படுத்தவும், நியாயமான விலையை உறுதிப்படுத்தவும் மற்றும் இடைத்தரகர்களின் சுரண்டலைக் குறைக்கவும் பிராந்தியக் கூட்டுறவு பால்சார் சங்கங்களை உருவாக்குதல். | S |
| காலநிலை கட்டுப்பாட்டில் உள்ள விவசாய உற்பத்தி களஞ்சியசாலைகள்: நாடளாவிய ரீதியில் பிரபர்'வர காலநிலை கட்டுப்பாட்டு விவசாய உற்பத்திக் களஞ்சியசாலை வலையமைப்பை நடைமுறைப்படுத்துதல். தம்புள்ளையில் இலங்கையின் முதல் 5,000 மெட்ரிக் டொன் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தும் உற்பத்திக் களஞ்சித்தின் நிர்மாணப் பணிகளை (4 வருடங்கள் தாமதமடைந்த) முடித்து, நாடு முழுவதும் அத்தகைய களஞ்சியங்களின் வலையமைப்பை விரைவில் உருவாக்குவோம். இந்த களஞ்சியங்கள் பகுதி-அடிப்படையிலான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பானதாக்கப்படும். இந்தக் களஞ்சியங்கள் தரவு வலையமைப்பு மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, விவசாயிகள் வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், ஏற்பாட்டியல் தொழிற்பாட்டாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களுடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் GSS தளத்துடன் இணைக்கப்படும். | S M |

## 6.3 கைத்தொழில் அபிவிருத்தி: உலகளாவிய பெருமதிச் சங்கிலிகளுடன் இணைத்தல்

### சுவர்களை உடைத்து உலகிற்கு பாலங்கள் கட்டுதல்

கடந்த அரை நூற்றாண்டில் உலகளாவிய உற்பத்தி பெருமத்திச் சங்கிலிகள் (GMVC கள்) அல்லது உலகளாவிய உற்பத்தி வலையமைப்புகள் (GPN கள்) விரிவாக்கத்துடன் உலகளாவிய உற்பத்தி நிலப்பரப்பு வியத்தகு முறையில் மாற்றமடைந்துள்ளது. இப்போது, குறிப்பாக இலத்திரனியல், வாகனம், இயந்திரங்கள் மற்றும் துல்லியமான பொருட்கள் கைத்தொழில்களில் இறுதித் தயாரிப்புகள், பெரும்பாலும் பல நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் கூறுகளைக் கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வு, அதன் தேசிய எல்லைகளுக்குள் தொடக்கம் முதல் இறுதி வரை ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, GMVC இல் குறிப்பிட்ட பிரிவில் தங்கள் ஒப்பீட்டுச் செலவு நன்மையைப் பொறுத்து நாடுகள் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளைத் திறக்கிறது. உயர் செயலாற்றுகை கொண்ட கிழக்கு ஆசியப் பொருளாதாரங்களிலிருந்து உற்பத்தி ஏற்றுமதியின் பெரும்பகுதி GMVC களுக்குள் நடைபெறுகிறது.

இலங்கையில் நாம் ஆடைகளில் அனுபவித்தது போன்று வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் அல்லது இல்லாமலேயே சர்வதேச கொள்வனவாளர்களுடன் பிணைக்கப்பட்ட இணைப்புகள் மூலம் உலகளாவிய சந்தைகளில் ஊடுருவுவதற்கான வாய்ப்பை உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் கொண்டுள்ளனர். ஆனால் இலத்திரனியல் மற்றும் மின் கைத்தொழில்களில் உள்ள GMVC களில், உற்பத்திப் பகிர்வு தொடர்பில்லாத தரப்பினருக்கிடையே இடம்பெறுவதை விட உள் நிறுவன இணைப்புகள் மூலம் நடைபெறுகிறது. தொழில்நுட்ப இரகசியத்தைப் பாதுகாப்பதற்கும், இறுதி உற்பத்தியின் தர நியமங்களைப் பேணுவதற்கு மிகவும் இன்றியமையாத கொடுக்கப்பட்ட இடத்தில் உற்பத்தி செய்யப்படும் பாகங்கள் மற்றும் கூறுகளின் தரத்தை உறுதி செய்வதற்கும் நிறுவனங்களுக்கு இடையேயான இணைப்புகள் இன்றியமையாதவை. எனவே, இந்தக் கைத்தொழில்களில் GMVC களில் ஒரு நாட்டின் பங்கேற்பதில் FDI முக்கிய பங்கு வகிப்பதுடன் இவை பொதுவாக உற்பத்தியாளர் இயக்கப்படும் GMVC கள் என குறிப்பிடப்படுகிறது.

இச்செயல்முறைகள் பொதுவாக நாடு முழுவதும் உள்ள துணை நிறுவனங்கள் அல்லது துணை ஒப்பந்தக்காரர்களுடன் பன்னாட்டு நிறுவனங்களால் (MNE கள்) ஒழுங்கமைக்கப்படுகின்றன. GMVC களுக்குள் உள்ள வர்த்தகம் உலக வர்த்தகத்தில் பாதி முதல் மூன்றில் இரண்டு பங்கும் வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இடையே உற்பத்தி வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்கும் ஆகும்.

GMVC கள் ஒவ்வொரு நாட்டின் செலவு அனுகூலத்தின் அடிப்படையில் செயல்படுவதால், இலங்கை, அதன் ஏராளமான பயிற்சியளிக்கக்கூடிய உழைப்பு மற்றும் மூலோபாய இருப்பிடத்துடன், GMVC களுக்குள் உழைப்பு மிகுந்த பணிகளில் வலுவாக ஈடுபட முடியும்.

எவ்வாறாயினும், வெற்றிகரமான பங்கேற்பானது “சேவை இணைப்புகளின்“ செலவினங்களைப் பொறுத்தது - GMVCகளுக்குள் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான ஏற்பாடுகள் - வெளிநாட்டில் உற்பத்தி செய்யும் செலவு சேமிப்புகளை விட குறைவாக இருக்கும். கப்பல் தாமதங்கள், அரசியல் இடையூறுகள் அல்லது தொழிலாளர் தகராறுகள் போன்ற “நாட்டின் இடர்களை“ தணிக்க ஒரு சாதகமான கொள்கை ஆட்சி மற்றும் முதலீட்டுச் சூழல் ஆகியவை முக்கியமானவை.

எங்கள் சவால் என்ன என்பதை கீழே உள்ள வரைபடம் தெளிவாகக் காட்டுகிறது. உலகளாவிய ஏற்றுமதியில் வளரும் நாடுகளின் பங்கு, 1976 ஆம் ஆண்டில் சுமார் 17% இலிருந்து 2020 ஆம் அன்டுக்குள் 50% ஆக அதிகரித்த அதேவேளை, இலங்கையின் பங்கு 0.02% இலிருந்து 0.3% வரை 1990 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் அதிகரித்ததுடன் 2020 ஆம் ஆண்டளவில் பொருளாதாரம் வர்த்தகத்திற்கு எதிரான (ஏற்றுமதிக்கு எதிரான) சார்பு நிலையில் கட்டமைக்கப்பட்டு 0.15% இக்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. அத்தியாயம் 6.1 இல் (வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கொள்கை) முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளபடி, இந்தப் போக்கை மாற்றியமைத்து, வர்த்தகத் (அத்தியாவசியமாக ஏற்றுமதி) துறையை ஊக்குவிப்பதே எங்கள் அரசாங்கங்களின் கொள்கையாகும்.




உலகளாவிய உற்பத்தியாளர்களுக்கு கவர்ச்சிகரமான சூழலை உருவாக்குவதன் மூலம் GMVC களில் இலங்கையை ஒருங்கிணைப்பதை SJB இன் ஏற்றுமதி சார்ந்த கைத்தொதொழில்மயமாக்கல் மூலோபாயம் நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கிய கவனம் உள்ளடக்குவது

- வர்த்தகம் செய்யக்கூடிய துறையில் கவனம் செலுத்தும் நிலையான கொள்கை சூழல் மற்றும் சொத்து உரிமைகள் மீதான அரசியலமைப்பு உத்தரவாதங்களை நிரூபிக்கிறது.
- சர்வதேச போட்டித்தன்மையை உறுதி செய்வதற்காக சாதகமான உண்மையான நாணய மாற்று விகித ஆட்சியுடன் நிலையான பேரண்டப்-பொருளாதாரத்தை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்.
- வணிக-நட்பு சூழலை உருவாக்குவதற்கான ஒழுங்குவிதிகளை ஒழுங்குபடுத்துதல், முன்னர் குறிப்பிட்ட வர்த்தக வசதி மற்றும் ஒற்றை ஜன்னல் (single window) நிறுவப்படுவதை உறுதி செய்தல்.
- அனைத்துத் தரப்பினர்களுக்கும் சமமாக சட்டத்தை அமுல்படுத்துவதில் நியாயமான கவனிப்பு மற்றும் வர்த்தகத் தகராறுகளை மத்தியஸ்தம் மூலம் விரைவாக முடித்தல் என்பவற்றை உறுதி செய்தல்.
- சிறப்பு வாய்ந்த உலகளாவிய உற்பத்திப் பணிகளில் ஈடுபட, திறமையான மற்றும் பயிற்சியளிக்கக்கூடிய தொழிலாளர் மற்றும் முகாமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க பெரிய தொகுப்பை உருவாக்குதல்.
- புதிய உயர்தர தனியார் அல்லது PPP இனால் நடாத்தப்படும் ஏற்றுமதி செயலாக்க வலயம் (EPZ கள்) உட்பட தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குதல்.
- உற்பத்தியாளர் உந்துதல் தொழில்நுட்ப அடிப்படையிலான FDI களை EPZகளில் ஈர்ப்பதில் கவனம் செலுத்துதல். கிடைக்கக்கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தி முதலீட்டாளர்களுக்கு இலங்கையை மேம்படுத்துவதற்கு எமது அரசாங்கம் உயர் மட்டத்தில் ஈடுபடும். ஒரு பாரிய முதலீட்டாளரைக் கொண்டு வருவது இலங்கையைக் கருத்தில் கொள்ள மற்றவர்களை ஊக்குவிக்கும்.
- உலகளாவிய சந்தைப்படுத்தல் கண்காட்சிகள் மற்றும் இருதரப்பு சந்திப்புகள் ஆகியவற்றில் சாத்தியமான கொள்வனவாளர்களுடன் ஈடுபட நிறுவனங்களுக்கு உதவும் நன்கு செயல்படும் ஏற்றுமதி மேம்பாட்டு சபை மூலம் ஏற்றுமதி மற்றும் ஒத்துழைப்புகளை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்.
- போட்டிகரமான ஊக்குவிப்புகளை வழங்குதல்.

உலகளாவிய பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் பகிரப்பட்ட பெருமதிச் சங்கிலிகளில் பங்கேற்பது நமது ஏற்றுமதி திறனை அதிகரித்து, முதலீடுகளை ஈர்த்து உலகளாவிய போட்டித்தன்மையை அதிகரிக்கும். மேலும், இந்தப் பங்குடைமைகள் அறிவு மாற்றல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் திறமையான மனித மூலதனத்தின் வளர்ச்சி போன்றவற்றுக்கு உதவும்.

## உலகளாவிய இலத்திரனவியல் பெறுமதிச் சங்கிலியில் ஒருங்கிணைத்தல்

1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தாராளமயமாக்கல் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, பன்னாட்டு நிறுவனங்கள் உலகளாவிய இலத்திரனியல் பெருமத்திச் சங்கிலியில் இலங்கையின் திறனைக் கண்டன. இரண்டு பெரிய இலத்திரனியல் பல்தேசிய நிறுவனங்களான மோட்டோரோலா மற்றும் ஹரிஸ் கூட்டுத்தாபனம் கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் (KEPZ) செயற்பாடுகளை அமைத்தன. இருப்பினும், அரசியல் இஸ்திரமின்மை காரணமாக இரு கம்பனிகளும் 1980 களின் முற்பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறின. இந்த இரண்டு பன்னாட்டு நிறுவனங்களும் KEPZ இல் வெற்றிகரமாகச் செயல்பட்டிருந்தால், பன்னாட்டு இலத்திரனியல் நிறுவனங்களின் தளத் தேர்வில் நன்கு அறியப்பட்ட "கூட்ட மனப்பான்மையை" மற்ற இலத்திரனியல் பன்னாட்டு நிறுவனங்கள் பின்பற்றியிருக்கும். இருந்த போதிலும் 30 இக்கும் மேற்பட்ட நடுத்தர அளவிலான ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் இலங்கையின் இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள் மற்றும் வாகன உதிரிபாகத் தொழில்களில் வெற்றிகரமாக இயங்கி 20,000 இக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ளதுடன் 2010 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சுமார் $1 பில்லியன் மதிப்பிலான ஏற்றுமதிகளை உருவாக்கியுள்ளன. இந்த நிறுவனங்கள் பல்வேறு கூறுகளை உற்பத்தி செய்வதுடன் அவை ஜப்பான், ஜெர்மனி, ஸ்வீடன், அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சொந்தமானவை. இந்த முதலீட்டாளர்களின் கூற்றுப்படி, பயிற்சியளிக்கக்கூடிய தொழிலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் மற்றும் முகாமைத்துவப் பணியாளர்கள் கிடைப்பது இந்த முதலீட்டாளர்களுக்கு ஒரு முக்கிய ஈர்ப்பாகக் காணப்படுகிறது.

அவர்களின் வெற்றி, ஒரு சவாலான சூழலிலும் கூட, முறையான கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புகளுடன் இலத்திரனியல் மையமாக மாறுவதற்கான இலங்கையின் திறனை சுட்டிக்காட்டுகிறது. அமெரிக்க-சீனா வர்த்தகப் போர் மற்றும் உலகளாவிய சிப் (chip) பற்றாக்குறைக்கு மத்தியில், குறிப்பாக உலகளாவிய குறைக்கடத்தி சந்தை 2030 இல் $1 டிரில்லியன் டாலர்களை எட்டும் என்று கணிக்கப்படும் போது இலங்கை ஒரு கவர்ச்சிகரமான மாற்று உற்பத்தி இடமாக இருக்கலாம். வியட்நாம் மற்றும் கம்போடியா மேலும் சமீபத்தில் இந்தியா ஏற்கனவே செய்து வருகிற உலகளாவிய உற்பத்தியின் பின்னணியில் GMVC இன் தற்போதைய மூலோபாய மறுசீரமைப்பின் செயல்முறையிலிருந்து நன்மையினைப் பெறுவதற்கான நல்ல நிலையில் இலங்கை உள்ளது. சமீபத்தில் ஆப்பிள் நிறுவனத்தின் முக்கிய ஒப்பந்தத் தயாரிப்பாளரான பெக்ஸ்கொன், ஐபோன்களை ஒன்றுகூட்டுச்செய்யும் தொழிற்சாலையை சென்னையில் அமைத்தது. அமெரிக்க-சீனா உறவுமுறையில் ஏற்பட்ட விரிசல்களுக்குப் பதிலாக, சீனாவை அதன் ஒன்றுகூட்டுச்செய்யும் தளமாகச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான பெக்ஸ்கொன் மூலோபாய நடவடிக்கையின் ஒரு பகுதியாக இது இருந்தது.

## ஆடைத் துறையின் வெற்றியை மேலும் மேம்படுத்துதல்

1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தாராளமயமாக்கல் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, இலங்கையின் ஆடைத் தொழில் நவீன, போட்டித் துறையாக பரிணமித்ததுடன் 2004 ஆம் ஆண்டு பல-இழை ஏற்பாட்டின் (Multi-Fibre Arrangement) கீழ் ஒதுக்கீடுப் பாதுகாப்பு நீக்கப்பட்ட பின்னரும் செழித்து வளர்ந்தது. இது நேரடியாக 350,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% மற்றும் மொத்த சரக்கு ஏற்றுமதியில் 40மூ இக்கும் பங்களிப்புச் செய்கின்றது. தற்போது ஆடை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் 60% துணி உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. பல ஆண்டுகளாக, தொழில்துறையானது ஆடை பெருமத்திச் சங்கிலியின் மேல் முனையில் ஒரு பணக்கார வாடிக்கையாளர் தளத்தை உருவாக்கியது, மேலும் இது "அடிப்படை ஆடை"யிலிருந்து நிலையான ஆண்களின் சட்டைகள் மற்றும் கால்சட்டைகளை "நாகரீக அடிப்படை" வரை தைப்பதில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளதுடன் உள்ளாடைகள் மற்றும் நெருக்கமான உடைகள் போன்றவை நாகரீகக் கூறுகளைக் கொண்ட அடிப்படைத் தயாரிப்புகளின் மாறுபாடுகளாகும். இது இப்போது அணியக்கூடிய தொழில்நுட்பம் மற்றும் பலவற்றுடன் இன்னும் அதிநவீனத்திற்கு நகர்கிறது. இச்செயல்பாட்டில், பெரிய ஆடை நிறுவனங்கள் தங்கள் சொந்த வடிவமைப்பு மையங்களை நிறுவியுள்ளதுடன் அவை வர்த்தகச் சின்ன உரிமையாளர்களின் வடிவமைப்புக் குழுக்களுடன் நெருக்கமாக செயல்படுகின்றன. பெரும்பாலான பாரிய நிறுவனங்கள் கணினி உதவியுடனான உற்பத்தி மற்றும் இலத்திரனியல் பொருத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றன. இருப்பினும், இலங்கையின் ஆடைத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் உலகளாவிய போட்டித்தன்மைக்கு வலுவான கொள்கை மற்றும் தலைமைத்துவ அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கோரும் முக்கிய சவால்களை தொழில்துறை எதிர்கொள்கிறது.

## முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம்

எமது இளைஞர்களுக்காக இலங்கையில் நாம் உருவாக்க விரும்பும் எதிர்காலம் அவர்கள் வாழ விரும்புவதாகும். உற்சாகமான புதிய துறைகளில் அவர்கள் வேலை செய்ய அல்லது தொழில்முயற்சியாளர்களாக, செல்வத்தை உருவாக்க, வாழ்க்கையை அனுபவிக்க மற்றும் நல்லது செய்யக்கூடிய அந்த இடம். இந்த தேசத்தை உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் மையமாக மாற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். அடுத்த ஐந்து வருடங்களுக்குள் இலங்கையை அடுத்த கூகுள், சம்சங் அல்லது டெஸ்லாவின் பிறப்பிடமாக மாற்றுவதற்கு எமது இளம் தொழில்நுட்ப தொழில்முயற்சியாளர்களுக்கு எமது அரசாங்கம் முழுமையாக ஆதரவளிக்கும்.

தகவல் தொழில்நுட்பத்துக்கு அப்பாற்பட்ட தொழில்நுட்பத்தில் ஏனைய பல துறைகளில் கவனம் செலுத்துவோம், அது விவசாயத் தொழில்நுட்பமாக இருக்கலாம் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, விவசாயத்தை மிகவும் திறம்பட செய்ய, களக் கண்காணிப்பு முதல் உணவு விநியோகச் சங்கிலி, பயோடெக் வரை மனித ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய தயாரிப்புகள், முறைகள் மற்றும் உயிரினங்களை உருவாக்க உயிரியலின் பயன்பாடு, நனோ தொழில்நுட்பம் நனோ அளவிலான அல்லது அணியக்கூடிய தொழில்நுட்பத்தில் அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளை கையாளுவதன் மூலம் கட்டமைப்புகள் மற்றும் சாதனங்களை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் பயன்படுத்துதல் அணிகலன்களாக அணியக்கூடிய, ஆடைகளில் உட்பொதிக்கப்பட்ட, பாவனையாளரின் உடலில் பொருத்தப்பட்ட, அல்லது தோலில் பச்சை குத்தக்கூடிய மற்றும் புதுமையின் பல பகுதிகளில் இலத்திரனியல் சாதனங்களைத் தயாரித்தல் போன்றவையாகும். உற்பத்தித்திறனை பல மடங்கு அதிகரிக்க தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் பல பகுதிகள் உள்ளன.

நமது காரியத்தின் (graphite) திறனைத் திறப்பதில் நாம் பயன்படுத்தக்கூடிய மற்றொரு அற்புதமான வாய்ப்பு காணப்படுகிறது. 99% தூய்மையான அளவுகளுடன், உலகின் தூய்மையான காரியகத்தை இலங்கை கொண்டுள்ளது. வரலாற்று ரீதியாக முன்னணி விநியோகத்தர் தற்போதைய உற்பத்தி உலக சந்தையில் 1% இக்கும் குறைவாக உள்ளது. இந்த உயர்-தூய்மைக் காரியம், இலத்திரனியல் சாதனங்கள், கட்டுமானப் பொருட்கள், வண்ணப்பூச்சுகள், பிளாஸ்டிக், நீர் சுத்திகரிப்பு மற்றும் உராய்வு நீக்கியை மேம்படுத்தும் கிரபைனின் (graphine) உற்பத்திக்கு ஏற்றது. கிரபைனின் லித்தியம்-அயன் மின்கலம் ஆயுளை நீட்டிக்கவும் மற்றும் மின்னூட்டல் செய்யும் நேரத்தை விரைவுபடுத்தவும் முடியும். கச்சா காரியத்தை அதிக மதிப்புள்ள கிரபைனாக செயலாக்குவதன் மூலம் இலங்கை இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் கிரபீன் தொழில்நுட்பங்கள் தொடர்பாக உள்ளூர் ஆரம்ப அமைப்புகளுடன் (startup) ஒத்துழைத்துச் செயற்படுகின்றது. பெறுமதி சேர்க்கப்பட்ட செயலாக்கம், நிலைபேறான நடைமுறைகள் மற்றும் முக்கிய கிரபீன் நுகர்வோருடனான பங்குடமைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது புதிய சந்தைகளைத் திறந்து, நம்பகமான வழங்குநராக இலங்கையின் நிலையை உறுதிப்படுத்த முடியும். விநியோக, முக்கியமான பொருட்களைப் பயன்படுத்துவதற்கான சட்டத்தை இயற்றுதல் மற்றும் பொறுப்பான நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் எங்கள் அரசாங்கம் இந்த மாற்றத்தை முழுமையாக ஆதரிக்கும்.

### தன்னாட்சிப் போக்குவரத்து, விமான போக்குவரத்து மற்றும் ரோபோட்டிக்ஸ் ஆகியவற்றுக்கான வரைபடத்தில் இலங்கையை இணைத்தல்.

“கடந்த சில ஆண்டுகளில், Qbits இல் நாங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளோம்எங்கள் அதிநவீன முறைமை உள் கேமராக்களைப் பயன்படுத்தி தன்னாட்சி முடிவுகளை எடுக்க ட்ரோன்களை அனுமதிக்கிறது. இந்த ட்ரோன்கள், மரங்களுக்கு இடையே குறுகிய இடைவெளிகள் போன்ற சிக்கலான சூழல்கள் முழுவதுமாக தாமாகவே செல்லக் கூடியதாகவுள்ளன. எங்களின் அடுத்த கட்டம், கடினமான நிலப்பரப்புகளில் விரைவான முடுக்கம் மற்றும் வேகத்தை குறைத்து, விரைவான முடிவுகளை எடுப்பதன் மூலம், இந்த ட்ரோன்களை அதிக வேகத்தில் இயக்குவதற்கு மேம்படுத்துவதாகும். மேலும், ட்ரோன் ஒரு முட்டுக்கட்டை பாதையை எதிர்கொண்டால், அது நிலப்பரப்பைப் பற்றிய முன் அறிவு இல்லாமல் கூட, அதன் போக்கை மறுபரிசீலனை செய்து மாற்றும். காட்சி ஓடோமெட்ரி, சென்சார் இணைவு, உள்ளூர்மயமாக்கல் மற்றும் மெப்பிங், தடைகளை கண்டறிதல் மற்றும் பாதை திட்டமிடல் உள்ளிட்ட முக்கியமான செயல்பாடுகளை எங்கள் அல்கரிதம்கள் கையாளுகின்றன. இந்த திறன்கள் அடுத்த தலைமுறை ட்ரோன்கள் மற்றும் உள் AI பொருத்தப்பட்ட ரோபோக்களுக்கு அவசியம். எங்களால் வடிவமைக்கப்பட்ட மற்றும் உருவாக்கிய தனிப்பயன் ஊர்தி பலகையில் எங்கள் அமைப்பு இயங்குகிறது. இது 384 CUDA கோர்கள், 48 டென்சர் கோர்கள், 6-கோர் CPU மற்றும் 21 TOPகள் ஆகியவற்றைக் கொண்டு, கிட்டத்தட்ட 2 GHz வேகத்தில் இயங்கும் ஈர்க்கக்கூடிய உள் செயலாக்க சக்தியைக் கொண்டுள்ளது. கலாநிதி ஹர்ஷ சுபசிங்க, தொழில்நுட்ப தொழில்முயடற்சியாளர். CodeGen, AiGrow, Vega, ChargeNet, Qbits போன்றவற்றின் நிறுவனர் (அனுமதியுடன் வெளியிடப்பட்டது)

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **நிலையான வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை:**<br>☎ இலங்கையின் பொருளாதாரத்தை உலகளாவிய உற்பத்தி வலையமைப்புடன் தேவையான பாதுகாப்புகளுடன் ஒருங்கிணைப்பதே எமது நோக்கெல்லையாகும். எனவே, இந்த மூலோபாயத்திற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளதுடன் உற்பத்தி செய்யப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிக்க நிலையான கொள்கைகளை நாம் தொடர்புகொள்வோம். கொள்கைகள் திருத்தப்படுவதற்கு முன் அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாலோசிக்கும் செயல்முறை இதில் அடங்கும்.<br>☎ வரிச் சலுகைகள் என்பது ஒரு நாட்டிற்குள் முதலீட்டுத் தீர்மானங்களைத் தூண்டுவதற்கான அடிப்படையான காரணியல்ல என்பதை நாம் புரிந்து கொண்டாலும், இலங்கை பிராந்தியத்தில் போட்டித்தன்மையுடன் இருக்க, காலஅடிப்படையிலான குறித்த ஊக்கங்கள் அவசியமாகும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காக ஒரு ஊக்கப்பொதி வழங்கப்படுவதை எங்கள் அரசாங்கம் உறுதி செய்யும். முன்கூட்டியே மூலதன கொடுப்பனவுகள், ஒருவேளை 300% வரை கிடைக்கப்பெறச் செய்யப்படும்.<br>☎ இரத்தினம் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் தனித்தன்மையைக் கருத்தில் கொண்டு, கடினமான கல் இறக்குமதி மற்றும் இலாபத்தின் மீதான வரியைக் கையாள்வதற்கான அர்த்தமுள்ள முறைக்கு நாங்கள் வருவோம்.<br>☎ தற்போதுள்ள “பெறுமதி கூட்டல்” கொள்கையில் இருந்து குறிப்பிடத்தக்க நகர்வில், குறைந்தபட்ச (30%) மதிப்புக் கூட்டல் தேவையை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பகுதி பெறுமதி சேர்த்தலை வரவேற்கிறோம். GMVC களை ஒருங்கிணைப்பதிலிருந்து நமது தொழில்முயற்சியாளர்களுக்கு இடையூறாக இருக்கும் வழக்கற்றுப் போன நடைமுறைகளை நாங்கள் தொடர முடியாது.<br>☎ ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான இடைநிலை உள்ளீடுகளை விரைவாகக் கொள்முதல் செய்வதற்கான தீர்வைத் தள்ளுபடி வசதிகளை சீராகச் செயல்படுத்த எங்கள் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கும்.<br>☎ “எதிர்மறை பட்டியல்“ கட்டுப்பாடுகள், மற்றும் தொழிற்சாலைகளை கட்டுவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் தேவையான கட்டுமான பொருட்கள் மற்றும் தொடர்புடைய பொருட்களின் மீதான துணைக்-கட்டணங்கள் அறிவிக்கப்பட்ட திட்டத்தில் நீக்கப்படும். (பிரிவு 6.1 இல் வர்த்தகக் கொள்கை முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளது) | M |
| **வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈரத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஊழியர்களின் கொள்திறன் அபிவிருத்தி**<br>☎ உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான முதலீட்டு ஊக்குவிப்பு பிரச்சாரத்திற்காக நாங்கள் முக்கியத்துவம் கொடுப்போம் பூகோள அரசியல் அனுகூலங்கள் மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய அரசியல் சீரமைப்புகள் ஆகியவற்றின் மீதான செல்வாக்கினைப் பெறுதல். வெளிநாட்டு அமைச்சு, நிதி அமைச்சு, வணிகத் திணைக்களம் (அல்லது சர்வதேச வர்த்தகத்திற்கான புதிய அலுவலகம்), பொருளாதார ஆணைக்குழு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அவர்களது சொந்த நாடுகளில் சந்தைகளைத் தேடுவதற்கும் ஈடுபட்டுள்ள தூதரகங்களின் தலைவர்கள் அல்லது சிரேஸ்ட இராஜதந்திரிகளுக்கான “பொருளாதார இராஜதந்திரம்“ தொடர்பான 18 வார இணைய மற்றும் நேரடி (தூதரகம் அமைந்துள்ள நாட்டில்) நிகழ்ச்சித் திட்டம் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலுள்ள கென்னடி கல்லூரியில் ஆரம்பிக்கப்படும். (இத்திட்டம் 2017 இல் தொடங்கப்பட்ட போதிலும் பின்னர் நிறுத்தப்பட்டது.)<br>☎ வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் முதலீடு செய்வதை கவர்ச்சிகரமானதாக மாற்ற “கோல்டன் விசா திட்டம்” அறிமுகப்படுத்தப்படும்: குறைந்தபட்ச முதலீட்டு வரம்புக்கு உட்பட்டு 10 ஆண்டுகள் வரை நீண்ட கால வதிவிட விசாக்கள். | S M L |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| ☎ முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் உயர்தர தயாரிப்பாளராக எமது பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்தின் முதலீட்டு ஊக்குவிப்பு பிரச்சாரத்தில் இலங்கையில் வெற்றிகரமான வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களின் சிரேஷ்ட நிர்வாகிகளை ஈடுபடுத்தும் வகையில் ஒரு வேலைத்திட்டம் உருவாக்கப்படும்.<br>☎ அரசியல் காரணங்களுக்காக சீனாவை விட்டு வெளியேறும் முதலீடுகளை இலங்கையில் இஸ்தாபிக்க அழைப்பதற்காக, சாத்தியமான மிக உயர்ந்த அரசியல் மட்டத்தில் ஒரு சிறப்புப் பிரிவு இஸ்தாபிக்கப்படும். | |
| **பொருளாதார ஆணைக்குழுவில் இந்திய மற்றும் சீனப் பிரிவுகள்**<br>☎ GMVC களில் ஒருங்கிணைக்க இந்தியா மற்றும் சீனாவில் இருந்து FDI பெற இரண்டு பிரத்தியேக அலகுகள் EC இல் அமைக்கப்படும். முழுமையான EPZ களை நிறுவுவது முதல் தற்போதுள்ள உற்பத்தி வலையமைப்புகளுடன் ஒருங்கிணைப்பது வரை பல பகுதிகளில் அடைவுகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு KPI கள் வழங்கப்படும். தென்னிந்தியா அடுத்த பல ஆண்டுகளுக்கு இரட்டை இலக்க அளவில் வளர்ச்சியடையும் நிலையில் தென்னிந்தியாவை அடிப்படையாகக் கொண்ட GMVC களுடன் ஒருங்கிணைக்க குறிப்பிடத்தக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. சைனா மேர்சன்ட் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்துள்ள ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் வெற்றிடமாக உள்ளது. இந்த வலயத்தில் சீன அன்னிய நேரடி முதலீட்டை பெற சீனப் பிரிவுக்கு சிறப்பு அதிகாரம் வழங்கப்படும். | S M |
| **துறைமுக நகரம், கொழும்பு**<br>☎ துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (PCEC) இப்போது முழுமையாகச் செயல்பட்டு வருவதுடன் PCEC சட்டம் பெரும்பாலும் செயல்படும். இருப்பினும், துறைமுக நகரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடு மிகக் குறைவு. இந்நிலைமை திருப்பப்படுதல் வேண்டும். அதற்காக, விவாதிக்கப்பட்ட வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திருத்தங்களைத் தவிர, இந்த சவாலான பணியை மேற்கொள்வதற்கு சரியான பணியாளர்கள் PCEC இக்கு நியமிக்கப்படுவதை உறுதி செய்வோம். அவர்கள் துறைமுக நகருக்கு வெளியே இருக்கும் வணிகத்தை அழிக்காமல், உலகளவில் இந்த இடத்தை சந்தைப்படுத்துதல் வேண்டும்.<br>☎ தற்போதைய தடைகளை நீக்குவதற்கு PCEC சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வோம். துறைமுக நகரத்தை சேவைக்கான சிறப்புப் பொருளாதார வலயமாக ஆசியப் பிராந்திய தொழில்நுட்ப மையமாக மாற்ற நாங்கள் எண்ணுகிறோம்.<br>**உலகளாவிய முதலீட்டாளர் நிகழ்வுகளில் பங்கேற்றல் மற்றும் நடாத்துதல்.** பணம் உள்ளவர்கள் மட்டுமே முதலீடு செய்ய நினைப்பார்கள். எனவே, இலங்கைக்கு முதலீட்டாளர்களாக இருக்கும் இவர்களை ஒன்றிணைக்க, வெளிநாடுகளில் நடக்கும் நிகழ்வுகளில் நாம் தவறாமல் பங்கேற்க வேண்டும். உதாரணமாக, கடந்த மே மாதம் லண்டனில் நடைபெற்ற உலகளாவிய செல்வவள மாநாட்டில் (Global Wealth Conference) 250 பில்லியனர்கள் 18 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்தனர். இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். | S M |
| **வர்த்தகம் செய்ய இலங்கை தயாராகவும் ஆர்வமாகவும் உள்ளதை உலகுக்கு வெளிப்படுத்துதல்:** "வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கான சுட்டி" நிறுத்தப்பட்டுவிட்டதால், இது புதிய குறியீட்டால் மாற்றப்படும்போது, ஒரு சிறந்த நிலைக்குத் செல்வதற்கான வாய்ப்பாக இதைப் பயன்படுத்துவோம். இதை நோக்கி, உலக வங்கிக்கு மிகவும் துல்லியமான தொழில்முயற்சியாளர் தரவுகளை அளிக்கும் "உலகளாவிய தொழில் முயற்சியாளர் கண்காணிப்பு" என அழைக்கப்படும் ஒரு குழுவை உருவாக்குவோம். இது இலங்கையில் தொழில்முயற்சியாளர் பற்றிய சிறந்த நுண்ணறிவுகளை எமக்கு வழங்குவதுடன் இத்தரவுகள் தொழில்முயற்சியாளர் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை மேம்படுத்தும். இந்த இணைக்கப்பட்ட வலையமைப்பு இலங்கையின் தொழில்முயற்சியாளர்களுக்கு (குறிப்பாக ஆரம்ப வணிகங்கள் (satrtups) சர்வதேச நிதிகளை அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்கும் (ஏஞ்சல் நிதிகள் போன்றவை.,) | S M |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **வர்த்தகத் தாராளமயமாக்கல் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள்:** எங்கள் கவனம் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கையின் ஒருதலைப்பட்ச தாராளமயமாக்கலில் இருக்கும். இருதரப்பு அல்லது பலதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை (FTA) விட அவை சிறந்தவை என்று நாங்கள் நம்புகிறோம்.<br><br>☎ குறுகிய காலத்தில் பல FTA களில் ஏற்கனவே தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை நாங்கள் தொடர்வோம், ஆனால் அவை இரு தரப்புக்கும் சமமான பரஸ்பர நன்மையை கொண்டுவந்தால் மட்டுமே நாங்கள் உறுதியாகவும் அர்ப்பணிப்புடனும் செயட்படுவோம். சமச்சீரற்ற அடிப்படையில் பெரிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். இந்தப் பேச்சுவார்த்தைகளில் எங்களின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்த எங்கள் அரசாங்கம் சிறந்த வளங்களை ஈடுபடுத்தும். வணிகத் திணைக்களத்தில் பயிற்சி பெற்ற ஊழியர்களின் சிக்கல்களை நாங்கள் அறிந்துள்ள்ளதுடன் மேலும் OIT இல் இருக்கும் திறமை உள்வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வோம்.<br><br>☎ EU மற்றும் UK உடனான விரிவான வர்த்தக உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகளை தொடங்குவதன் மூலம் EU GSP மற்றும் UK DCTS இழப்பிற்கு நாங்கள் தயார் செய்வோம். (பிரிவு 6.1 இல் வர்த்தக தாராளமயமாக்கல் பற்றி மேலும் தரப்பட்டுள்ளது) | S M |
| **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி:** நாம் தகவல் யுகத்திலிருந்து அறிவு யுகத்திற்கு மாறும் ஒரு புதிய தொழில்நுட்ப சகாப்தத்தின் உச்சத்தில் இருக்கிறோம். உலகம் எளிமையான பயன்பாடுகளில் இருந்து அறிவார்ந்த பொட்களுக்கு, நிலையான வலைத்தளங்களிலிருந்து மாறும், AI- உந்துதல் தொடர்புகளுக்கு, மற்றும் வழக்கமான CPU களில் இருந்து சிறப்பு AI சிப் (chip) வரை, ஒவ்வொரு தொழிற்துறையும் முன்னோடியில்லாத மாற்றத்திற்கு தயாராக உள்ளது. சுய-ஓட்டுநர் கார்கள், EVTOL கள், பறக்கும் கார்கள் மற்றும் புத்திசாலித்தனமான தன்னாட்சி ரோபோக்கள் போன்றன இனியும் எதிர்காலத்தின் நோக்கெல்லைகள் அல்ல ஆனால் அவை அடிவானத்தில் உள்ள உண்மைகள். மனித உருவங்கள் மற்றும் முன்னேற்றகரமான AI இன் வருகை நம் உலகில் மேலும் புரட்சியை ஏற்படுத்தும். உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக பல்கலைக்கழகங்களுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் நிதியளிப்போம். ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு நிறுவன மற்றும் நன்கு இலக்கு வைக்கப்பட்ட ஊக்கங்களை நாங்கள் வழங்குவோம். | M |
| ☎ துறைகள் இணைந்து ஆராய்ச்சியை வணிகமயமாக்குவது வெற்றி என நாங்கள் நம்புகிறோம், ஆனால் அதற்கு அதிக ஆதரவு தேவை. SLINTEC அவர்களின் ஆராய்ச்சித் துறையை விரிவுபடுத்துவதற்கும் மேலும் இதுபோன்ற பல கலப்பு நிறுவனங்களை நிறுவுவதற்கும் தேவையான கூடுதல் வளங்களை வழங்குவதற்கு நாங்கள் பொறுப்பேற்போம்.<br><br>☎ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் அடையாளம் காணப்பட்ட திறன் பயிற்சி ஆகியவற்றில் உற்பத்தி சொத்துக்களுக்கு 200% மேம்படுத்தப்பட்ட மூலதன கொடுப்பனவை வழங்குவதன் மூலம் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வலுவான அடித்தளத்தை உருவாக்குவதே எங்கள் திட்டமாகும். புலமைச் சொத்துரிமைகளுக்கான மெட்ரிட் நெறிமுறையை அணுகுவதை விரைவுபடுத்துவதுடன் இது புத்தாக்கம் மற்றும் தன்னியக்கமாக்கல் போன்றவற்றுக்குத் தேவையான முதலீட்டை ஊக்குவிப்பதற்காக தற்போதுள்ள மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறைக்கு முக்கியமானது. (மேட்ரிட் நெறிமுறை என்பது ஒருவரின் சொந்த நாட்டிற்கு வெளியே வர்த்தக நாமங்களை பதிவு செய்வதற்கான உலகளாவிய பொறிமுறையாகும். இது வர்த்தக முத்திரைகளின் சர்வதேச அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய முயற்சிக்கும் நிறுவனங்களால் ஏற்படும் நேரம், சிரமம் மற்றும் செலவைக் குறைக்கிறது.) | |
| **நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்:**<br><br>குறிப்பாக புதிதாக நிறுவப்பட்ட பொருளாதார ஆணைக்குழு (முன்னர் BOI), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் ஏற்றுமதி உற்பத்தித் துறையின் செயல்பாடு தொடர்பான ஏனைய நிறுவங்கள் போன்ற சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிர்வாக நடைமுறைகளை ஒருங்கிணைக்க வலுவான பொறிமுறைகளை உருவாக்குவோம். வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்துதல். தேசிய ஒற்றை ஜன்னலை கூடிய விரைவில் செயல்படுத்துவதே எங்கள் நோக்கம். | M L |

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **கப்பல் போக்குவரத்தை தாராளமயமாக்கல்.** கப்பல் முகவர் வணிகத்தின் 50% இக்கும் அதிகமான பங்குகளை உரிமையாளர்களுக்கு அனுமதிப்பதற்காக FDI நுழைவுக் கொள்கையில் வழங்கப்பட்டுள்ள முகவர் மற்றும் வணிக நடவடிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச முதலீட்டை முதலீடு செய்ய முன்மொழிந்தால் கப்பல் முகவர்களின் உரிமம் வழங்கும் சட்டத்தில் திருத்தம் செய்வது குறித்து கப்பல் வணிகத்திலுள்ள அனைத்துப் பங்குதாரர்களுடனும் இறுதிச் சுற்று விவாதத்தில் நாங்கள் ஈடுபடுவோம். தற்போதுள்ள முகவர் வணிகத்தை எதிர்மறையாகப் பாதிக்காமல் சர்வதேச வர்த்தகத்திற்கு மேலும் செயல்திறனை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். மேலும், கப்பல் முகவர்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை துறைமுக அமைச்சருக்கு வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்வதை நாங்கள் எதிர்த்தோம். போட்டியை கொண்டு வர இச்சட்டத்தை நாங்கள் திருத்துவோம். | S |

## 6.4 சேவைகள்: ஒரு முக்கிய பொருளாதார இயக்கி

சுற்றுலா, ஏற்பாட்டியல், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கிய இலங்கையின் சேவைத் துறையானது பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இவற்றில், IT/BPM துறையானது, 2022 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 7.4% பங்களிப்பை வழங்கி, வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் முன்னணியில் உள்ளது. இத்தகைய முன்னேற்றம் இருந்தபோதிலும், இலங்கையின் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வளர்ச்சியடையாமல் உள்ளதுடன் இது ஒரு சவாலாகவும் வாய்ப்பாகவும் காணப்படுகிறது.

SJB அரசாங்கம் இலங்கையின் ஆற்றல்மிக்க சேவைத் துறையை உலகளாவிய டிஜிட்டல் அதிகார மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்ளூர் தொழில்வண்மையாளர்கள் உலகளாவிய வாடிக்கையாளர்களுடன் இணையும் பரபரப்பான நிகழ்நிலைச் சந்தையுடன், புதுமையான நிகழ்நிலைத் தளங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகள் சிரமமின்றி அனுபவங்களை முன்பதிவு செய்வதைக் கற்பனை செய்து பார்க்கின்றது. இணையத்தளத்தை உருவாக்குபவர்கள், வரைகலை வடிவமைப்பாளர்கள், தரவுப் பகுப்பாய்வாளர் மற்றும் ஏனைய திறமையான தொழிலாளர்கள் உலகளாவிய டிஜிட்டல் பொருளாதாரத்திலிருந்து பயனடைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த மாற்றமானது புதிய வேலை வாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கு உருவாக்குவது மட்டுமன்றி, இலங்கையை உலக சந்தையில் ஒருங்கிணைத்து பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தும். டிஜிட்டல் முறையில் வழங்கப்படும் சேவைகளுக்கான செழிப்பான சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதன் மூலம், நமது இயற்கை மற்றும் கலாச்சார சொத்துக்களை அதிநவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த நோக்கெல்லையை உணர முடியும்.

### முன்னேற்றமடையும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் வர்த்தகம்

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு தகவல் தொழில்நுட்பம் முக்கியமானது என்பதை கடந்த நான்கு ஆண்டுகளாக நாங்கள் எதிர்க்கட்சியாக நிரூபித்துள்ளோம். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு இஸ்மார்ட் வகுப்பறையை நிறுவுவதன் மூலம் 385 பாடசாலைகளுக்கு பங்களிப்பை வழங்கிய எங்களது “சக்வல”/ “பிரபஞ்சம்“ திட்டத்தில் இதை மேற்கொண்டோம். உலகளாவிய சந்தையிலுள்ள சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள மாணவர்களை தகவல் தொழில்நுட்பத் திறன்களுடன் தயார்படுத்துவதில் எங்களின் அர்ப்பணிப்பைச் சொல்ல வேண்டியதில்லை.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, எங்கும் நிறைந்த DPI அறிமுகமானது இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் மகத்தான வாய்ப்புகளை உருவாக்கும். இதுவரை கிடைக்காத சேவைகள் சாத்தியமாகும். அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ளூராட்சி மன்றம் வரை நூற்றுக்கணக்கான அரசாங்கத்திலிருந்து பிரஜைக்கான சேவைகள் மற்றும் வணிகம் மற்றும் வணிகம் மற்றும் நுகர்வோர் இடையே ஆயிரக்கணக்கான ஏனைய சேவைகள் இதில் அடங்கும். வரையறை என்பது கனவு காணும் திறன் மட்டுமே.

கொள்கைக் கண்ணோட்டத்தில், ஒழுங்கு விதிகளை எளிமையாக்குதல், புதிதாக நுழைபவர்களுக்கான தடைகளைக் குறைத்தல் மற்றும் வணிகங்களுக்கான செயல்பாடுகளை நெறிப்படுத்துதல் ஆகியவை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த நிலப்பரப்பை உருவாக்கும். சர்வதேச நியமங்களுடன், குறிப்பாக கட்டணச் செயலாக்கத்தில், இலங்கையானது பாதுகாப்பான, உலகளாவிய அங்கீகாரம் பெற்ற கட்டண நுழைவாயில்களை ஒருங்கிணைத்து, நுகர்வோர் மற்றும் வணிகர்களின் நம்பிக்கையை மேம்படுத்த முடியும்.

கடைசி மைல் ஒப்படைப்பு (last-mile delivery) சேவைகள் மற்றும் சர்வதேச-தரமான களஞ்சியம் உள்ளிட்ட தேசிய ஏற்பாட்டியல் வலையமைப்பை மேம்படுத்துவது போட்டித்தன்மையை பராமரிக்க இன்றியமையாததாக்கும். பொது-தனியார் பங்குடைமை மூலம் இரத்திறனால் வர்த்தக ஏற்றுமதி வளையங்களின் மேம்பாடு, சிறந்த உள்கட்டமைப்புடன் கூடிய

செறிவான செயல்பாடுகளை உருவாக்குவதுடன் புதுமை மற்றும் செயல்திறனை மேம்படுத்தும். "டிஜிட்டல் ஏற்றுமதி சம்பியன் திட்டம்" உள்ளூர் வணிகங்களுக்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச நடைமுறைகளில் பயிற்சி அளிப்பதுடன் இது உலகளாவிய சந்தைகளை அதிகரிக்கவும் அணுகவும் உதவும்.

செழிப்பான IT/BPM புதிய வணிக (startup) சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதும் முக்கியம். இலங்கையின் IT-BPM துறையானது கணிசமான மற்றும் விரைவான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன் வருமானம் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளதுடன் 80,000 நபர்களுக்கு மேல் பணியமர்த்தி இலங்கையின் சேவை ஏற்றுமதி வருமானத்தில் 12% பங்களிப்பைக் கொண்டுள்ளது.

மென்பொருள் அபிவிருத்தி மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற தொடர்புடைய திறன்களுடன் பணியாளர்களை தயாராக்குவதற்கு கல்வி மற்றும் பயிற்சியில் முதலீடு செய்வதும் முக்கியமானதாகும். புதிய வணிகங்கள் (startup), நல்ல நிலையில் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அமைப்புகளுக்கிடையிலான ஒத்துழைப்பானது, இலங்கையை உலகளாவிய டிஜிட்டல் பொருளாதாரத்தில் முன்னணியில் நிலைநிறுத்துவதற்கான வளர்ச்சியை ஏற்படுத்தும்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **தொழில்நுட்பத்தில் புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்:** முன்னேற்றகரமான தொழில்நுட்பத்திற்கான தலையீடுகள் தவிர, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இரத்திறனால் வர்த்தகக் கைத்தொழில் துறையில் மனித வளங்களை மேம்படுத்துவதற்கு நாங்கள் தாராளமான ஆதரவை வழங்குவோம். குறிப்பாக,<br>☎ புத்தாக்கமான யோசனைகள் மற்றும் தீர்வுகளைத் தேடுவதற்கு தேசிய அளவிலான போட்டிகள் மற்றும் சவால்களைத் தொடங்குவதன் மூலம் திறமைகளைத் தேடுவதற்கும் ஆதரவை வழங்குவதற்கும் உதவுதல்.<br>☎ புதிய வணிக (startup) மையங்களை அமைப்பதன் மூலமும், மாணவர் தலைமையிலான புதிய வணிகங்களை ஊக்குவிப்பதன் மூலமும் கல்வி நிறுவனங்களில் தொழில்முயற்சியாளர்களை ஒருங்கிணைத்தல். மாணவர்களின் புதிய வணிகங்கள் முதலீட்டாளர்களிடமிருந்து ஆதரவு தரக்கூடிய நிதியைத் தேடும் "முதலீட்டாளர் நாட்களில்" முடிவடையும் நடைமுறை தொழில்முயற்சியாளர் திட்டங்களில் குறுகிய விரைவான படிப்பினை உருவாக்க உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஒத்துழைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவோம்.<br>☎ புதிய வணிகங்களுக்கு, யோசனை முதல் முன்மாதிரி வரை மற்றும் அதற்கு அப்பால் விரிவான ஆதரவை வழங்குதல்.<br>☎ புத்தாக்கங்களை சாத்தியமான வணிகங்களாக மாற்றுவதற்கு வசதியாக தொழில்நுட்ப வணிகப் பாதுகாப்புப் பொறிமுறைகளை உருவாக்குதல்.<br>☎ உள்நாட்டு மென்பொருள் மற்றும் ஏற்கனவே இருக்கும் மென்பொருள் நிறுவனங்களை உருவாக்க ஊக்குவிப்புகளை வழங்குவதுடன் முன்னேற்றத்தை கண்காணித்து அதற்கேற்ப ஊக்கத்தொகையை புதுப்பித்தல். | S M |

## இலங்கையை ஒரு ஏற்பாட்டியல் மையமாக மாற்றுதல்

மிதமான ஆற்றலை வழங்குவதுடன் உலக வர்த்தக அளவின் 50% இக்கும் அதிகமானவை நமது கடற்கரையிலிருந்து 12 கடல் மைல்களுக்குள் பயணிக்கின்றன. எவ்வாறாயினும், கொழும்பு துறைமுகமானது அதன் போட்டித்தன்மையை உலகளாவிய ரீதியில் நிலைநிறுத்த முயற்சிசெய்துவருகிறது: இதற்கு குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப மாற்றம் மற்றும் மூலோபாய கூட்டணிகள் தேவைப்படுகின்றன.

டிஜிட்டல் துறைமுக முன்னெடுப்பால் இயக்கப்படும் ஒரு ஏற்பாட்டியல் ஆற்றல் மையமாக இலங்கையை மாற்றுவதே எங்கள் நோக்கெல்லையாகும் என்பதுடன் இது செயல்முறைகளை நெறிப்படுத்துதல், அனுமதி நேரத்தைக் குறைத்தல் மற்றும் துறைமுக உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கிய செயல்முறைகளை தானியக்கமாக்குவதன் மூலமும், அதிநவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலமும், இலங்கை துறைமுகங்கள் சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற முடியும். மேலும், திருகோணமலையில் உள்ள

இயற்கை ஆழ்கடல் துறைமுகமானது, முக்கிய துறைமுகங்கள் மற்றும் சந்தைகளுடன் உற்பத்தி மையங்களை இணைக்கும் ஒரு முக்கிய வழியாக கொழும்பு-திருகோணமலை பொருளாதார தாழ்வாரமாக (CTEC) அபிவிருத்தி செய்யும் திட்டத்துடன், விரிவாக்கத்திற்கான குறிப்பிடத்தக்க சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

முக்கிய கப்பல் கூட்டிணைவுகளை ஈர்க்க, இலங்கை மூலோபாய கூட்டாண்மைகளை கட்டியெழுப்ப வேண்டும் என்பதுடன் உலகளாவிய வலையமைப்புகளுடன் சிறப்பாக ஒருங்கிணைக்க அதன் சலுகைகளை வடிவமைத்தல் வேண்டும். இந்தக் கூட்டணிகளுடன் ஒத்துழைப்பதற்கும், அவர்களின் தேவைகள் மற்றும் கவலைகளைப் புரிந்துகொள்வதற்கும், இஸ்மார்ட் பயண வசதி அமைப்புகள் மூலம் பணியாளர்கள் மற்றும் சரக்கு நடமாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் நாங்கள் முன்னுரிமை அளிப்போம். உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுடன் ஒருங்கிணைப்பது பற்றிய விவாதம் இங்கேயும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

இலங்கையை இந்து சமுத்திரத்தில் ஒரு செழிப்பான ஏற்பாட்டியல் மையமாக மாற்றுவது கணிசமான வருவாயை உருவாக்குவது மட்டுமல்லாமல் அதிக சம்பளம் தரும் வேலைகளை உருவாக்கி, நமது பொருளாதாரத்தை உயர்த்தி, உலக கடல்சார் நிலப்பரப்பில் இலங்கையின் முக்கிய இடத்தை உறுதிப்படுத்தும்.

## பொருளாதார வளர்ச்சிக்காக சுற்றுலாவை புத்துயிர் பெறச் செய்தல்

சுற்றுலாத்துறையானது வரலாற்று ரீதியாக இலங்கையின் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருந்து வருவதுடன் இது மூன்றாவது பெரிய அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் துறையாகும். இருப்பினும், கொவிட்-19 உலகத்தொற்றுநோய் மற்றும் பொருளாதார சவால்கள் 2020 ஆம் ஆண்டில் இல் கடுமையான வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் இது சுற்றுலா விநியோகச் சங்கிலியை முடக்கியது. சுற்றுலாவை புதுப்பிக்க, மீள்நாமமிடுதல் மற்றும் டிஜிட்டல் மாற்றம் மூலம் இலங்கை தன்னை வேறுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

கைத்தொழிலின் கலாச்சார மரபுரிமை, இயற்கை அழகு மற்றும் தனித்துவமான அனுபவங்களை முன்னிலைப்படுத்துவது போன்ற விலை அடிப்படையிலான உத்திகளைப் பயன்படுத்துவதற்கு நாங்கள் உதவுவோம். இதன் மூலம் நாடு ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கி, உண்மையான மற்றும் அதிவேக அனுபவங்களைத் தேடும் பயணிகளை ஈர்க்க முடியும். இது மூலோபாய சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள், கதைசொல்லல் மற்றும் இலக்குச் சந்தைகளுடன் எதிரொலிக்கும் அனுபவமிக்க சுற்றுலா சலுகைகளை உள்ளடக்கியது. சிறப்பு சந்தைகளை வழங்குவதன் மூலமும் ஆன்மீக சுற்றுலா, ஆயுர்வேத சுற்றுலா மற்றும் ஆரோக்கிய சுற்றுலா போன்ற முக்கிய சுற்றுலாப் பிரிவுகளை மேம்படுத்துவதன் மூலமும், தனித்துவமான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட அனுபவங்களைத் தேடும் அதிக பெறுமதியுள்ள பயணிகளை இலங்கை ஈர்க்க முடியும். உயர் அங்கீகாரம் பெற்ற சர்வதேச விளையாட்டு வர்த்தக நாமத்துடன் இலங்கையின் முதலாவது ஒருங்கிணைந்த உல்லாச விடுதியின் பிரவேசத்துடன், நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் மேலும் ஏற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கலாம். எவ்வாறாயினும், அனைத்து சீட்டாட்டத் தொழில்களும் ஒரு சூதாட்ட விதிப்பனவு ஒழுங்குபடுத்துனரின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பது எங்கள் வலுவான நிலைப்பாடாகும் என்பதுடன் அது தாமதமின்றி சட்டம் இயற்றப்பட்டு செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

டிஜிட்டல் மாற்றத்தைத் தழுவுவது சுற்றுலாத் துறைக்கு அவசியம். டிஜிட்டல் தீர்வுகள் மூலம் விசா செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல், எல்லைக் கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும். மேலும், Internet of Things (IoT), செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் Block chain போன்ற தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் இஸ்மார்ட் இடங்களை உருவாக்குவது சுற்றுலாப் பாய்ச்சலை முகாமை செய்யவும், தனிப்பயனாக்கப்பட்ட அனுபவங்களை உருவாக்கவும் மற்றும் திறமையான வள நிர்வாகத்தை உறுதி செய்யவும் உதவும். டிஜிட்டல் கட்டண முறைகளின் பரவலான தழுவுதலை ஊக்குவிப்பது, நாணய பரிமாற்றம் மற்றும் தன்னியக்க டெல்லர் இயந்திரக் கட்டணங்களின் தேவையை நீக்கி சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்தும். பணியாளர்களுக்கான டிஜிட்டல் திறன் பயிற்சித் திட்டங்களில் முதலீடு செய்வது மற்றும் சுற்றுலாவை மையமாகக் கொண்ட புதிய வணிகங்களை ஆதரிப்பது இத்துறையில் புத்தாக்கங்களை வளர்க்கும்.

சராசரியாக 15-20 வயதுடைய இலங்கையின் ஹோட்டல் உள்கட்டமைப்பு, மாலைதீவு மற்றும் தாய்லாந்து போன்ற பிராந்திய போட்டியாளர்களுடன் போட்டியிடுவதில் சவால்களை எதிர்கொள்கிறது. வசதிகளை நவீனப்படுத்தவும் போட்டித்தன்மையை அதிகரிக்கவும் மூலோபாய முதலீடுகள் தேவை. மேலும், சுற்றுச்சூழல் சுற்றுலா நோக்கிய உலகளாவிய போக்கை அங்கீகரித்து, இலங்கை நிலைபேறான பயண நடைமுறைகளில் முன்னணியில் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலா முன்னெடுப்புகளை ஊக்குவிப்பதன் மூலமும், பொறுப்பான சுற்றுச்சூழல் நடைமுறைகளை உறுதி செய்வதன் மூலமும், விழிப்புணர்வுள்ள பயணிகளுக்கான சிறந்த இடமாக இலங்கையை நிலைநிறுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| சுற்றுலாத் துறை சீர்திருத்தங்கள் | |
| **ஒழுங்குவிதிகள்:** சுற்றுலாத் துறையில் புதிய வணிகங்கள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களுக்கான நுழைவுத் தடைகளை குறிப்பாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) கீழ் வணிகப் பதிவுக்கான கடுமையான தேவைகளை நீக்குவதற்கான விதிமுறைகளின் சீர்திருத்தம். வெளிப்படைத்தன்மை மற்றும் அணுகல்தன்மையை மேம்படுத்த, உரிமம் வழங்கும் செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொடுக்கல்வாங்கல்களை டிஜிட்டல் மயமாக்குதல். | S |
| **நிதி ஆதரவு:** சுற்றுலாத் துறையில் உயர் நிலை 3 கடன்களைக் கருத்தில் கொண்டு, வங்கிகளால் கடன் தவணைகள் அல்லது பாராட்டே நடவடிக்கைகளைத் தொடங்கும் போது, இந்த முக்கிய அந்நியச் செலாவணி உருவாக்கும் துறைக்கு சிறப்புக் கவனத்தைச் செலுத்தி சில நிலைகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். இந்த சொத்துக்களில் கடனை மூலதன இடமாற்றம் செய்ய சட்டத்தில் திருத்தம் செய்யவும் திட்டமிட்டுள்ளோம். | S |
| **உள்கட்டமைப்பு முதலீடு:** உயர்தர அனுபவங்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக, சுற்றுலாத் துறையில் புதுப்பித்தல், தங்குமிட தரமுயர்த்தலுக்காக நீண்ட கால நிதிகளை நீண்ட காலத்துக்கு திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை நீட்டிக்க நாங்கள் செயல்படுவோம். | M |

## 6.5 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் (MSME கள்) மற்றும் புதிய வணிகங்கள் (startups)

இலங்கையின் பொருளாதாரத்திற்கு நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (MSMEs) இன்றியமையாதவையாகும் என்பதுடன் இது 80% தொழில்முயற்சிகளையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% பங்களிப்பையும், 45% வேலை வாய்ப்புகளையும் வழங்குகின்றது. அவற்றின் முக்கியத்துவம் இருந்தபோதிலும், இலங்கையில் SME துறையானது முக்கியமாக முறைசாரா முறையில் இயங்குவதுடன் மேலும் வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையைத் தடுக்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறது. புத்தராக்கம், வளர்ச்சி மற்றும் வேலை உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் துடிப்பான MSME சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் எங்கள் நோக்கெல்லை கவனம் செலுத்துகிறது. இது MSME களை ஒழுங்கமைக்கப்பட்ட கைத்தொழில் துறைகளுடன் இணைக்கப்பட்ட மதிப்பு சங்கிலிகளில் ஒருங்கிணைத்தல், சந்தை அணுகலை மேம்படுத்துதல், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

MSME களின் உற்பத்தித்திறன் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்த, நாங்கள் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை மறுசீரமைப்போம். பயிற்சி வசதிகளை மேம்படுத்துதல், கைத்தொழில் நிபுணர்களுடன் ஒத்துழைத்தல் மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் வேலையில் பயிற்சிக்கான கூட்டாண்மைகளை நிறுவுதல் ஆகியவை இதில் அடங்கும். மக்கள் தொகையில் 50% இக்கும் அதிகமான பெண்கள் இருந்தபோதிலும், அவர்கள் 25% தொழில்முயற்சியாளர்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். கொள்திறன் அபிவிருத்தி, நிதி அணுகல் மற்றும் வலையமைப்பு வாய்ப்புகள் மூலம் MSME களில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஆதரவளிக்க சிறப்பு முயற்சிகள் அறிமுகப்படுத்தப்படும்.

MSME துறை எதிர்கொள்ளும் நிதிச் சிக்கல்கள் மற்றும் SJB அரசாங்கத்தின் கீழ் முன்மொழியப்பட்ட தீர்வுகள் பற்றிய கலந்துரையாடல் பிரிவு 2.3 இல் காணப்படுகின்றது. (NPL நெருக்கடியைக் கையாளும் போது நிதி இஸ்திரத்தன்மையை உறுதி செய்தல்). MSME மற்றும் ஏனையவற்றிற்கான “அபிவிருத்தி வங்கித் தொழில்“ பற்றிய பிரச்சினை பிரிவு 9.3 இல் விபரிக்கப்பட்டுள்ளது (மூலதனம்: உட்பாய்ச்சலை அதிகரிக்கவும் உள்நாட்டுக் கடன் சந்தையை வலுப்படுத்தவும்). மேற்கூறியவற்றைத் தாண்டி பின்வரும் தலையீடுகளை நாங்கள் திட்டமிடுகிறோம்:

### ☎ பராட்டே செயல்படுத்தலின் இடைநீக்கத்தின் நீடிப்பு

2024 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு இடைநிறுத்தத்தை நீடிக்க திட்டமிட்டுள்ளோம். அதன்பிறகு, கடன் சேகரிப்பு மற்றும் நிறுவன ஒத்துழைப்பின் அடிப்படையில், நிதி நிறுவனங்கள் மற்றும் திறைசேரியுடன் இணைந்து நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காண, சட்ட மற்றும் நிதிக் கட்டமைப்புகள் உள்ளடக்கியதாக செயல்படுவோம்.

## புதிய வணிக (startup) புரட்சியை உருவாக்குதல்

நமது வருங்கால அரசாங்கத்தில், தொழில் பயிற்சியாளர்களை வளர்ப்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மையமாக இருக்கும். திறமை மற்றும் நிதியுதவி ஆகிய இரண்டு முக்கியமான வளங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் இலங்கையில் ஒரு புதிய வணிகப் புரட்சியைத் தூண்டுவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். நிதியுதவியைத் திறக்க, ஏஞ்சல் நிதியுதவி போன்ற ஆரம்ப கட்ட முதலீடுகளுக்கான அணுகலை மேம்படுத்துவதுடன் பங்கு நிதி மற்றும் திறமையான தொழில்முயற்சியாளர்களை ஈர்க்கும் கொள்கைகளை உருவாக்குவோம். நாங்கள் ஒரு வலுவான தயாரிப்பு மற்றும் புலமைச் சொத்து (IP) சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதுடன் IP மற்றும் காப்புரிமை சட்டங்களை மேம்படுத்தி மேலும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க சாதகமான வரி மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குவோம்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு, வரிச் சலுகைகளுக்காக இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தங்களை (DDAA) பயன்படுத்திக் கொள்ள நாங்கள் அவர்களுக்கு உதவுவோம். மேலும், VC நிதிகளை முகாமைசெய்வதற்காக உயர்மட்ட தொழில்வாண்மையாளர்களை ஈர்ப்பதற்காக, இரட்டை வரிவிதிப்புகளை அகற்றி, மூலதன ஆதாயங்கள் என வகைப்படுத்தப்பட்ட வட்டியை நாங்கள் சீர்திருத்துவோம். இந்த அணுகுமுறையானது ஆரம்ப முதலீடு மற்றும் VC செயற்பாடுகளுக்கான ஒரு செழிப்பான மையமாக இலங்கையை நிலைநிறுத்தும்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **தொழில்முயற்சியாளர் கல்வி:** தொழில்முயற்சியாளர் கல்வி: தொழில் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் தொழில்முயற்சியாளர் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல். ஆலோசனைமற்றும் வழிகாட்டுதலை வழங்க வெற்றிகரமான தொழில்முயற்சியாளர் மற்றும் தொழில்துறை தலைவர்களுடன் கூட்டு சேருதல். தொழில்நுட்ப மற்றும் நிதி கல்வியறிவை மேம்படுத்த கிரமீன் வங்கியின் கிராமிய தொலைபேசி திட்டம் போன்ற வெற்றிகரமான திட்டங்களுக்குப் பிறகு மாதிரி முயற்சிகள்.<br><br>**நிதிகளுக்கான தடைநீக்கல்:** பாரம்பரிய நிதி மூலங்களைத் தாண்டி புதிய நிதி மூலங்களை உருவாக்க நாங்கள் சட்டங்களைத் திருத்துவோம். | M |
| ☎ சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) சிறப்புக் கடன் தயாரிப்புகள் மற்றும் பங்கு நிதி தேர்வுகளை உருவாக்க நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.<br><br>☎ உயர்-வளர்ச்சித் துணிகர மூலதனச் (VC) சுற்றுச்சூழலை உருவாக்க (வெற்றிகரமான புது வணிகங்களைக் கொண்ட பெரும்பாலான நாடுகளில் இத்தகைய வழிமுறைகள் உள்ளன), மீதமுள்ள நிலுவைத் தொகையுடன் மூலத்தில் உள்ள வரி முதலீட்டாளர்களுக்குத் திரும்பும் வகையில் வரிகளைக் கழிக்க VC களை அனுமதிக்கும் வரி கடந்து செல்லும் வழிகள் உட்பட சாத்தியமான புதிய கட்டமைப்புகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க ஒரு சிறப்பு படையணியை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். | M |
| **"உள்ளூர் கொள்வனவு"** பிரச்சாரம்: உள்நாட்டில் சொந்தமான வணிகங்களை மேம்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதற்கும் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கும் அதேவேளை அவற்றை சர்வதேச அளவில் போட்டித்தன்மையுடையதாக மாற்ற உதவி செய்தல்.<br><br>**உள்ளூர் வளப்பெருக்கைக்கான ஊக்கங்கள்:** உள்ளூர் SME களில் இருந்து வளங்களைப் பெறுவதற்கு அரச நிறுவனங்கள் மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு சலுகைகள் மற்றும் முன்னுரிமை பெறுகைக் கொள்கைகளை வழங்குதல். | S M<br><br>M |
| **நிதிக் கல்வியறிவு ஊக்குவிப்பு: நிதிக் கல்வியறிவு ஊக்குவிப்பு:** நிதிக் கல்வியறிவு மற்றும் பொறுப்பான முதலீட்டு நடைமுறைகளை மேம்படுத்த கல்விப் பிரச்சாரங்கள் மற்றும் பட்டறைகளை நடாத்துதல். | M |
| **உள்ளூர் பங்குச் சந்தை:** சமபங்கு மூலதனத்தை திரட்டுவதற்கும், புத்தாக்கங்களை ஆதரிப்பதற்கும், பிராந்தியப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், SME களுக்கு ஒரு தளத்தை வழங்க, கொழும்புப் பங்குச் சந்தைக்குள், உள்ளூர் பரிமாற்றங்களை நிறுவுதல். பட்டியல் செயல்முறையை எளிமையாக்கி, உள்ளூர் உரிமை, நியாயமான ஊதியம் மற்றும் நிலைபேரானதன்மை தரநிலைகளுக்கான அளவுகோல்களை அமைத்தல். | M L |
| **நிதி அணுகலை மேம்படுத்துதல்:** பிணையத் தேவைகள் மற்றும் அதிக வட்டி விகிதங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் SME களுக்கான நிதி அணுகலை மேம்படுத்துதல். சாதகமான சூழ்நிலையில் தனியார் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காக இத்துறையை வலுப்படுத்த திருத்தப்பட்ட நுண்நிதிச் சட்டத்தை செயல்படுத்துதல். | M |

## 6.6 பசுமை வளர்ச்சி: ஒரு காலநிலை நடவடிக்கை முன்மொழிவு

எங்கள் பசுமை செழிப்பு முன்னெடுப்பின் மூலம் நிலைபேறான இலங்கையை நாங்கள் கற்பனை செய்கிறோம். எங்களின் மூலோபாயத்தின் மையமானது காலநிலை மாற்ற தாக்கங்களுக்கான தேசிய தழுவல் திட்டம் (NAP) ஆகும். பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைப் பாதுகாப்பதற்கும் நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் வலுவான தழுவல் மற்றும் மீளெழுந்தன்மையை உருவாக்குவதை இத்திட்டம் வலியுறுத்துகிறது.

எங்கள் அணுகுமுறை உள்ளூர் சமூகங்கள் மற்றும் எமது அணுகுமுறை காலநிலை-மீளெழும் ஆற்றலையுடைய உள்கட்டமைப்பை ஆதரிக்க நீல கார்பன் கடன்கள் மற்றும் சர்வதேச நிதியைப் பயன்படுத்தி உள்ளூர் சமுதாயம் மற்றும் தனியார் துறையை ஒருங்கிணைக்கிறது. NAP ஆனது, புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு முன்னுரிமை அளிப்பதில் கவனம் செலுத்துவதுடன் வள ஒதுக்கீட்டை மேம்படுத்தி உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்தும் அதேநேரம் கல்வி மற்றும் தொழில் பயிற்சி மூலம் மனித மூலதனத்தை மேம்படுத்துகிறது. இதை செயல்படுத்துவதன் மூலம் முதலீடுகளை ஈர்ப்பது, வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் நிலைபேறான வளர்ச்சியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **மேம்படுத்தப்பட்ட நிர்வாகம்:** காலநிலை மாற்ற செயலகத்தை NAP இக்கான தேசிய மையப் புள்ளியாக வலுப்படுத்துதல், துறைசார் மற்றும் குறுக்கு வெட்டு நடவடிக்கைகளுக்கான பொறிமுறைகளை உருவாக்குதல். | M L |
| **புத்தாக்கமான நிதியுதவி:** காலநிலை தழுவல் திட்டங்களுக்கு ஊளுசு நிதியை ஈர்ப்பதற்காக பொது-தனியார் பங்குடைமை நம்பிக்கை நிதியத்தை நிறுவுதல் மற்றும் காலநிலை முன்னெடுப்புகளை ஆதரவாக நீலக் கார்பன் கடன்களைப் பயன்படுத்துதல். | M L |

# 07 பொதுத்துறை முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்

## 7.1 பொதுத்துறைச் சீர்திருத்தம்

வினைத்திறனானதும் சமமானதுமான சுகாதாரம், கல்வி மற்றும் சமூக சேவைகளின் பொது வழங்கல் பொருளாதார வளர்ச்சி மற்றும் சிவில் பாதுகாப்பின் முக்கிய வடிவமாகும். இந்த சேவைகளை வழங்குவது இலங்கையின் பொதுத்துறையின் பொறுப்பாகும். இருப்பினும், இது மிகப்பெரியதாக இருந்தாலும், கிட்டத்தட்ட 1.5 மில்லியன் ஊழியர்களுடன், ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்துதலுடனான பாத்திரங்கள், பணிநீக்கம் மற்றும் குறைவான ஊதியம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது. பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் பொதுப் பெறுகை முதல் சேவை வழங்கல் வரை ஊழல் மற்றும் பொறுப்புக்கூறல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தவறிவிட்டன. பெரும்பாலும் தேர்தல் வாக்குறுதிகளால் உந்தப்பட்ட ஆட்சேர்ப்பிலுள்ள அரசியல் தலையீடு, பெருமளவிலான வேலை வாய்ப்புகளுக்கு வழிவகுத்து பொதுத்துறை வேலைகளுக்கான உரிமை உணர்வை உருவாக்கியிருப்பதுடன் இதன் விளைவாக சில நேரங்களில் முற்றிலும் நியாயமற்ற கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தங்கள் மற்றும் சட்டப்படியான வேலை ஆகியவற்றுக்கு வழிவகுத்துள்ளது.

தலைமைத்துவத்தில் தொடங்கி பொதுத்துறை பணி கலாச்சாரத்தில் முழுமையான மறுசீரமைப்பு தேவைப்படுகிறது. துண்டாடுதல் மற்றும் பணிநீக்கத்தை குறைக்க அமைச்சரவை மற்றும் அமைச்சுகளை சீரமைப்பது முதல் படியாகும். கிட்டத்தட்ட 27 அமைச்சுகளின் தர்க்கரீதியான கட்டமைப்பை நாங்கள் முன்மொழிகிறோம். நகல்கள் மற்றும் தேவையற்ற அதிகாரத்துவ இணைப்புகளை நீக்குதல் மற்றும் அமைச்சுகள் மற்றும் முகவரகங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல், செயல்திறனை மேம்படுத்தி செலவு மற்றும் விரயத்தை குறைக்கும்.

நிர்வாகச் சீர்திருத்தங்களை உள்ளடக்கிய பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நோக்கத்தை விரிவுபடுத்துதல் மற்றும் சுயாதீன ஒழுங்குமுறை அமைப்புகளை வலுப்படுத்துதல் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத்துக்கு அவசியமானதாகும். SOE மற்றும் ஓய்வூதிய சீர்திருத்தங்கள் இந்த முயற்சியை ஆதரிக்கும். மிக அதிக ஊதிய விகிதங்களைக் கொண்ட நிதியில்லாத பொதுத்துறை ஓய்வூதியங்கள் இனி நிலைபேறானதாக இருக்காது என்பதுடன் மேலும் பொதுத் துறைக்கு மட்டும் அல்லாமல் தேசிய அளவில் நிதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்களை நோக்கி நகர்தல் வேண்டும்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **பொதுத் துறை ஆட்சேர்ப்பு:** நாடு, ஆயுதப் படைகள் மற்றும் SOE கள் முழுவதிலுமுள்ள பணியாளர்களின் தேவைகள் பற்றிய விரிவான கணக்காய்வு மென்கொள்ளுதல். எந்தவொரு கீழ்மட்ட ஆட்சேர்ப்பும் தற்போதுள்ள அரசின் அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கைக்கு அமைய (green sheeting) பணியமர்த்தப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கபடுதல் வேண்டும். பாதுகாப்பு செலவினங்களை மீள்பரிசோதனை செய்து மறுமதிப்பீடு செய்தல். | S |
| **முக்கிய செயலாற்றுகைச் சுட்டிகள்:** முக்கிய செயலாற்றுகைச் சுட்டிகள்: வெற்றியை அளவிடுவதற்கும் செயல்திறன் மேம்பாடுகளை இயக்குவதற்கும் பொதுத்துறைக்கான விளைவு அடிப்படையிலான முக்கிய செயலாற்றுகைச் சுட்டிகளை உருவாக்குதல். | M |
| **திறன் விருத்தி:** தக்கவைக்கப்பட்ட பொதுத்துறை ஊழியர்களுக்கு, குறிப்பாக உயர்மட்ட ஊழியர்களுக்கான திறன் விருத்தியில் ஈடுபடுதல் மற்றும் பொது சேவைப் பணிகளில் இடைக்கால தொழில்வாண்மையாளர்களை பணியமர்த்துவதற்கான வழிமுறைகளை நிறுவுதல். | M |
| **நிதி முகாமைத்துவம்:** பொதுத்துறையை பண அடிப்படையிலான கணக்கியலில் இருந்து திரட்டல் அடிப்படையிலான கணக்கியலுக்கு படிப்படியாக மாற்றுதல். | L |

## 7.2 டிஜிட்டல் பொதுத்துறை முன்னெடுப்பு

செயல்திறனை மேம்படுத்துதல், ஊழலைக் குறைத்தல், சேவை வழங்கல் செலவுகளைக் குறைத்தல் மற்றும் தற்போதைய சீரற்ற தன்மையை நிவர்த்திக்கும் மிக முக்கியமான விடயமாக டிஜிட்டல் மயப்படுத்தல் காணப்படும். இந்தச் சேமிப்புகள், மேம்பட்ட சேவை வழங்கலுடன் இணைந்து, குடிமக்கள் மீதான வரிச் சுமையைக் குறைத்து, பொருளாதார மீட்சி மற்றும் நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிக்கும். டிஜிட்டல் மயமாக்கலைத் தழுவுவது நிதிப் பொறுப்பு மற்றும் பொருளாதார மீட்சிக்கு இன்றியமையாததுடன் மேலும் பதிலளிக்கக்கூடிய, பொறுப்புணர்வு மற்றும் திறமையான அரசாங்கத்தை உருவாக்க பொதுத்துறை சீர்திருத்தங்களை இணைக்கிறது.

டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI) முன்னெடுப்பானது இந்த மாற்றத்திற்கு அடிப்படையாகக் காணப்படுவதுடன் இது 'Lanka Stack' எனப்படும் திறந்த API களின் தொகுப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒன்றோடொன்று இயங்கக்கூடிய தளம் ஒரு பொது நன்மையாகச் செயல்படுவதுடன் பொது மற்றும் தனியார் துறைகள் பிரஜைகளுக்கான பல்வேறு தினசரி பிரச்சினைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைப்பதன் மூலம் தீர்வு காண அனுமதிக்கிறது.

DPI மூன்று கூறுகளைக் கொண்டிருக்கும்: ஒவ்வொரு நபரின் தனிப்பட்ட சரிபார்க்கக்கூடிய அடையாளம் மதிப்பை மாற்றியும் பெறுவதற்குமான திறன் (கட்டணம்) மற்றும் தனிப்பட்ட தரவுகளின் ஒப்புதல் பகிர்வு.

DPI பொதுத்துறையை முழுமையாக மாற்றும் ஆட்பதிவுடன் DPI இயங்குதளமானது அரசு, வணிகம் மற்றும் பிரஜைகள் இடையேயான ஒவ்வொரு கொடுக்கல் வாங்களுக்கும் முதன்மையான இடைமுகமாக மாறும். ஆரம்பகால சேவைகளானது, நலன்புரி நன்மைகள் சபையுடன் கூடிய திறமையான சமூகப் பாதுகாப்பு வலை விநியோகத் தொகுதியை நடைமுறைப்படுத்தலாகக் காணப்படுவதுடன் அனைத்து வகையான அரசாங்க ஆதரவையும் குடும்பங்களுக்குப் பணப் பரிமாற்றம் செய்வதற்கும், வரிகள், வரிப்பணம், அபராதங்கள், அறவீடுகள் என அனைத்து வகையான அரசாங்க நிலுவைத் தொகைகளையும் செலுத்தும் முறைமையாகவும் காணப்படும். ஒவ்வொரு பிரச்சனைக்குமான தனித்தனியான தீர்வுகளுக்குப் பதிலாக, பகிரப்பட்ட தொழில்நுட்பக் கூறுகள் வெவ்வேறு பயன்பாடுகளில் மீண்டும் பயன்படுத்தப்படும்.

இந்தியாவின் "ஆதார்" திட்டத்தால் ஈர்க்கப்பட்டு, வருமான சேகரிப்பு, நன்மைப் பரிமாற்றங்கள் மற்றும் பொது பெறுகை ஆகியவற்றில் ஊழலை அகற்றுவதற்கான அம்சங்களை முதலில் செயல்படுத்துவோம். DPI தழுவல் திறமையான, பாதுகாப்பான தரவு கையாளுதலை செயல்படுத்துவதுடன் சேவை வழங்கலை மேம்படுத்தி சம்மதித்தால் உந்தப்பட்ட தரவுப் பகிர்வு மூலம் பிரஜைகளின் தனியுரிமையைப் பாதுகாக்கிறது. டிஜிட்டல் மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிப்பது, பொதுத்துறையை அதிநவீன தொழில்நுட்பத்துடன் சீரமைத்து, இலங்கையில் நிர்வாகத்தை மிகவும் பயனுள்ளதாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், ஊழலுக்கு எதிராக மீள்தன்மையுடனும் ஆக்குகிறது.

DPI மற்றும் Lanka Stack ஆகியவை தனிப்பட்ட தரவைப் பகிர்வதற்கும், தனியுரிமை பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மற்றும் தடையற்ற நிதி தொடர்புகளை செயல்படுத்துவதற்கும் சம்மதத்தால் இயங்கும் சுற்றுச்சூழல் அமைப்பாக உருவாகும். இறுதியில், இது தினசரி மில்லியன் கணக்கான மக்களிடையே பரந்த அளவிலான பொது மற்றும் தனியார் கொடுக்கல்வாங்கல்களை ஆதரிக்கும் உங்கள் வீட்டில் அமர்ந்து வாகனப் பதிவுக்கு பணம் செலுத்துவது முதல் காட்சியறையை விட்டு வெளியேறும் முன் தொலைக்காட்சியினை வாங்க வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்துவது வரை.

DPI ஐ ஏற்றுக்கொள்வதன் மூலம், இலங்கையின் பொதுத்துறையை மாற்றியமைப்பது, சேவை வழங்கலை மேம்படுத்துவது மற்றும் வெளிப்படையான, பொறுப்புடைமை மற்றும் திறமையான ஆட்சி முறைமையை உருவாக்குவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

செயற்கை நுண்ணறிவை (AI) மேம்படுத்துவதும் முக்கியமானது. AI இன் ஒரு முக்கிய அம்சம், பெரிய தரவுத்தொகுப்புகளிலிருந்து வடிவங்களை அடையாளம் கண்டு விளைவுகளைக் கணிக்கும் திறன் ஆகும். இது அரசாங்கங்கள் பொதுத்துறை தரவுகளின் விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளவும், போக்குகளை அடையாளம் காணவும், முடிவுகளை எதிர்பார்க்கவும், மற்றும் ஆதார அடிப்படையிலான கொள்கைகளை உருவாக்கவும் அனுமதிக்கிறது. அதேநேர தரவு மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வுகளை வழங்குவதன் மூலம், AI பொதுக் கொள்கையின் செயல்திறனை கணிசமாக மேம்படுத்த முடியும்.

### சுகாதாரப் பராமரிப்புத் துறையில் டிஜிட்டல் புத்தாக்கம்: 1990 சுவ செரிய (சுகாதார சேவை)

1990 சுவ செரிய இலங்கையில் பொதுச் சேவைகளில் டிஜிட்டல் மயமாக்கலின் உருமாறும் சக்தியை எடுத்துக்காட்டுகிறது. அதிநவீன படிமுறைகள் (அல்கோரிதம்களின்) தடையற்ற ஒருங்கிணைப்பு அதன் வெற்றிக்கு அடிப்படையானதுடன் இது அவசரநிலைகளுக்கு விரைவாக கிடைக்கக்கூடிய நோயாளர் காவு வண்டி வரிசைப்படுத்தப்படுவதுடன் அண்மித்தத்தன்மையிலும் பார்க்க வேகம் மற்றும் செயல்திறனுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இந்த அணுகுமுறை 1990 சுவ செரியவுக்கு உலக வங்கியிடமிருந்து உலகளவில் டிஜிட்டல் ரீதியில் மேம்பட்ட மற்றும் வேகமான நோயாளர் காவு வண்டி சேவைகளில் ஒன்றாக அங்கீகாரம் பெற்றுத்தந்தது (சிறந்த ஆரோக்கியத்திற்கான புத்தாக்கம், உயிர்களைக் காப்பாற்றுதல்: இலங்கையின் நோயாளர் காவு வண்டிக் கதை, மார்ட்டின் ரைசர், தெற்காசியாவுக்கான துணைத் தலைவர், மார்ச் 2024). பிரத்தியேக பயன்பாட்டின் மூலம் மேம்பட்ட இருப்பிட கண்காணிப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அழைப்பாளர்களின் இருப்பிடங்களைத் துல்லியமாக அடையாளம் கண்டு, அவசரகாலச் சேவைகளை விரைவாகவும் துல்லியமாகவும் அனுப்புவதைச் செயல்படுத்துகிறது.

மேலும், 1990 சுவ செரியவின் செயல்பாட்டுத் தயார்நிலைக்கான அர்ப்பணிப்பு, விபரங்கள் மற்றும் செயலூக்கமான பராமரிப்பு மூலோபாயங்களில் அதன் உன்னிப்பான கவனம் மூலம் தெளிவாகத் தெரிகிறது. “இணைக்கப்பட்ட ஆம்புலன்ஸ்“ பைலட் திட்டத்தில் AI மற்றும் கலப்பு நிதர்சன தொழில்நுட்பங்களின் அறிமுகம் அவசரகால சிகிச்சையை மேலும் மேம்படுத்துகிறது. இந்தக் கண்டுபிடிப்பு இலங்கையில் அவசரகால மருத்துவ சேவையில் புரட்சியை ஏற்படுத்தி, போக்குவரத்தின் போது நோயாளிகளுக்கு சிகிச்சையை வழங்க உள்அவசர மருத்துவ தொழில்நுட்ப வல்லுனர்களை (EMTs) அனுமதிக்கிறது. இந்த மேம்பட்ட தொழில்நுட்பங்களின் ஊடாக, 1990 சுவ செரிய, செயற்பாட்டுத் திறனை வெகுவாக மேம்படுத்தியுள்ளதுடன் அவசரகால சுகாதாரச் சான்று தொழில்நுட்பத்தை வழங்குவது, முறையாகப் பயன்படுத்தப்பட்டால், இலங்கையில் பொதுச் சேவை விநியோகத்தை மேம்படுத்த உதவும். (மூலம் 1990 சுவ செரிய மன்றம்)

| தலையீடு | கால அளவு |
| --- | --- |
| **DPI:** ஆட்பதிவுத் திணைக்களம் ஏற்கனவே உள்ள பதிவுகளை டிஜிட்டல் முறையில் மாற்றுவதன் மூலம் DPI திட்டத்தை கட்டங்களாக வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றைத் தொடங்கவும். நலன்புரிப் பலன்கள் சபையுடன் (WBB) செயல்படுத்தி, பின்னர் வருமான அதிகாரிகள் மற்றும் ஏனைய சேவைகளுக்குச் செல்லுதல். முதல் புதிய பணப் பரிமாற்றத் திட்டங்களில், வருமானம் மற்றும் துறை ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும் SME விவசாயம், மீன்பிடி போன்றவை. காலப்போக்கில் ஸ்ரீஜ ஆனது ‘Lanka Stack’ மூலம் அனைத்து விதமான சேவைகளுக்கும் விரிவான பொருளாதாரமாக மாறும். | S |
| **முறைமை அணுகுமுறை:** குறைந்த எதிர்ப்பு அல்லது அதிக ஊக்கமளிக்கும் சேவைகளில் தொடங்கி, ஒட்டுமொத்த பொதுத் துறையின் கணனி அளவிலான தணிக்கை செயல்முறை மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை ஒப்பந்தம் செய்தல். | M |
| **டிஜிட்டல் மயமாக்கல்:** சுகாதாரம் மற்றும் நிலப் பதிவுகள் போன்ற பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கு இருக்கும் ஊழியர்களைப் பயன்படுத்தவும். | M |
| **டிஜிட்டல் சரிபார்ப்பு:** உயர் நம்பிக்கை, சேதமடையாத ஆவணங்களை உருவாக்க பிறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களில் டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட QR குறியீடுகளை அறிமுகப்படுத்துங்கள். இது உடனடி டிஜிட்டல் சரிபார்ப்பை அனுமதிப்பதுடன் அதிகாரப்பூர்வ சரிபார்ப்பு செயல்முறைகளில் குடிமக்களுக்கான நேரத்தையும் செலவுகளையும் குறைக்கும். | S |
| **பிரஜை ஈடுபடுத்தல் தளம்:** பிரஜை ஈடுபடுத்தல் கருவியாகப் பணியாற்ற MyGov தளத்தை (இந்தியாவைப் போன்றது) உருவாக்குதல், இது பிரஜைகளுடன் தொடர்பு கொள்ளவும் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் உள்ளீட்டைக் கோரவும் அரசாங்கத்தை அனுமதிக்கிறது. பொது மக்களுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்காக அரசாங்க மட்டங்களிலும் கொள்கை பகுதிகளிலும் தொழில்நுட்ப பயன்பாட்டில் ஒத்திசைவை உறுதி செய்தல். | M |

# 08 எரிசக்தி மற்றும் பயன்பாடுகள் சீர்திருத்தம்

தற்போதுள்ள முறைமையின் தோல்விகள், குறிப்பாக மின்சாரத் துறையில், புதுப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. தோல்விக்கான மூல காரணம், எங்கள் பார்வையில், காலப்போக்கில் கோரப்படாத திட்டங்களை ஊக்குவிக்கும் ஊக்கங்கள், முறைமையின் முறிவுக்கு வழிவகுக்கும். இந்த இலாபகரமான ஒப்பந்தங்கள் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அரசாங்கக் கொள்கைகளை கையாளவும், செலவு குறைந்த திட்டங்களை தாமதப்படுத்தவும், வெளிப்படையான கொள்முதலை தடுக்கவும் மற்றும் பொறியியல் முடிவுகளை பாதிக்கவும் அனுமதித்தன.

## 8.1 வினைத்திறனான மற்றும் வெளிப்படையான எரிசக்திச் சந்தைகள்

மின்சக்தி மற்றும் எரிசக்திக்கான எங்கள் அணுகுமுறையானது, தனிப்பட்ட விருப்பத்தை குறைக்கும் வெளிப்படையான, தானியங்கு அமைப்புகளை செயல்படுத்துவதில் கவனம் செலுத்துவதுடன் கையாளுதலுக்கான ஓட்டைகளை மூடி கோரப்படாத முன்மொழிவுகளை வழங்குவதற்கு "ஒப்பந்தம் செய்பவர்களுக்கான" ஊக்கத்தை நீக்குகிறது.

சமீபத்தில் இயற்றப்பட்ட CEB சட்டம் மின்சாரத்துறையில் சீர்திருத்தத்திற்கான அடித்தளத்தை அமைக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். எவ்வாறாயினும், உற்பத்தி மற்றும் விநியோகத்தில் போட்டியை உருவாக்குவது அவசியமான அதேவேளை ஏகபோக சக்தி மற்றும் திறமையின்மை காரணமாக அதிக ஆற்றல் செலவினங்களை நுகர்வோர் மற்றும் கைத்தொழில் துறைகள் சுமக்கக்கூடாது. நாங்கள் செலவு-பிரதிபலிப்பு மின் கட்டணங்களை ஆதரிக்கிறோம், ஆனால் இந்த செலவுகள் மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தங்களில் ஊழல் மற்றும் திறமையின்மையை விலக்குதல் வேண்டும்.

புதிய சட்டத்தில் முன்மொழியப்பட்ட கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வதுடன் சீர்திருத்த செயல்முறையின் செயல்திறன் மற்றும் செலவு-செயல்திறனை மேம்படுத்துவதற்கு திருத்தங்களை விதந்துரைப்போம். நியாயமான மின்சாரச் சந்தையை நிறுவுதல், நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்தல், பொறுப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் தொழில்துறையை அரசியலற்றதாக்குதல் ஆகியவை எங்கள் முன்னுரிமைகளில் அடங்கும். போட்டிக்கு எதிரான நடைமுறைகள், ஏகபோகங்கள், கூட்டு மற்றும் ஆதிக்க பதவிகளின் துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்கவும், போட்டித்தன்மை வாய்ந்த மின்சாரத் தொழிலை உறுதி செய்வதற்காக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றவும் ஒழுங்குபடுத்துபவர் வலுவூட்டப்படுவார்.

| தலையீடு | கால அளவு |
|---|---|
| **மின்சாரத்தில் கட்டண நிர்ணயம்** | S |
| ☎ சில கட்டணங்கள் திருத்தப்பட்டாலும், பயன்படுத்தப்படும் முறைமையில் முற்றிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. விலைவாசி திருத்தங்களை அரசியல்வாதிகள் முடிவு செய்யக்கூடாது தற்போதுள்ள ஒழுங்குமுறை பொறிமுறையானது சட்டத்தின்படி பொது ஆலோசனைகளுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | |
| ☎ பயன்பாட்டு வழங்குநர்கள் செலவு-பிரதிபலிப்பு, விரயம் மற்றும் ஊழல் செலவுகள் இல்லாமல், சரிசமமாக கட்டணங்களை வசூலிக்க அனுமதிக்கப்பட வேண்டும். | |
| ☎ தேவைப்படுபவர்களுக்கு இலக்கு மானியங்களை உறுதி செய்தல் மற்றும் பட்ஜெட்டில் வெளிப்படையான வரி உருப்படிகளாக வழங்கப்படுகின்றன. இந்த இலக்கு மானியங்களை நேரடி பணப் பரிமாற்றம் மூலம் வழங்க திட்டமிட்டுள்ளோம். | |
